புத்தம் புதிய இளமை நாவல்

இதழ் - 2

# முத்துலட்சுமி ராகவன்

பவளக் கொடி



# சொல்லாமலே.. பூப்பூத்ததே..

ரூ. 25

## மனம் விட்டுப் பேசலாமா...?

என் பிரியத்துக்குரிய வாசக.. வாசகிகளே...!

'விடிகின்ற வேளையிலே..' நாவலுக்கு நீங்கள் அளித்த வரவேற்பில் திக்கு முக்காடி விட்டேன்.. புதிதான என் கதைகளுக்கு எனைப் போலவே நீங்களும் பெருத்த எதிர்பார்ப்புடன் இருந்திருக்கிறீர்கள் என்பதையே இது உணர்த்தியது..

இந்த மாதம்.. இரண்டாவது நாவல் சொல்லாமலே பூப்பூத்து உங்கள் முன் வருகின்றது.. படியுங்கள்.. படித்த பின்பு நிறை குறைகளை என்னுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்..

அடுத்த மாதம் வெளிவரப் போகும்..

'ராதையின்.. நெஞ்சமே..' நாவலுக்கான டிரெயிலரை இப்போது ஓட்டிக் காண்பிக்கவா..?

ராதையின் நெஞ்சம்.. கண்ணனுக்குத் தானே சொந்தம்..? இல்லை என்கிறாள் இந்தக் கதையின் கதாநாயகி... ராதையின் நெஞ்சம் ராமனுக்குத்தான் சொந்தமாம்.. கண்ணனான முரளிதரனுக்குச் சொந்தமில்லையாம்..

இந்தக் கதையை எங்கேனும் கேட்டிருக்கிறீர்களா..? என்ன..? இல்லையா..? அடுத்த மாதம்.. இந்தக் கதாநாயகியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்களேன்...

மற்றபடி.. எனக்கும்.. இதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையப்பா.. அவள் சொல்கிறாள்.. நீங்கள் கேட்டுக் கொள்ளப் போகிறீர்கள்.. ஊடே வர நான் யார்..?

நீங்களாச்சு.. ராதையாச்சு.. விடை பெறவா..?

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்
அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
website : www.muthulakshmiraghavan.com



## கவிதை சொல்லவா...?

### கன்னி மனசு...

ஒருவிழிப் பார்வையிலே...
ஓராயிரம் கதைகள் பேசி...
பாராதது போல பார்த்துப் போனவளே..
உன் பார்வை சொன்ன சேதி என்ன..?
வாள் வீச்சை முறியடிக்கும்..
தேகபலம் கொண்டவனால்
உன் கண்வீச்சை முறியடித்து
கடந்து செல்ல முடியவில்லை...

- முத்துலட்சுமி ராகவன்

# 'சொல்லாமலே... பூப்பூத்ததே'

1

தென்னந்தோப்பைச் சுற்றி வயலும்.. தோட்டமும்.. பழமரத் தோப்பும் வளைத்திருந்தன.. பழமரத் தோப்பை யொட்டிய பிரதான சாலை 'பொன்வயல்' கிராமத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.. தார் போட்ட நேர்த்தியான சாலையிலிருந்து பழத் தோப்புக்குள் பிரிந்த சிமிண்ட் பாதை தென்னந்தோப்புக்குள் சென்று முடிந்தது..

அந்தப் பாதையை வாசுதேவன்தான் உருவாக்கியிருந்தான்.. அதற்கு முன்பு அவனுடைய அப்பாவும்.. தாத்தாவும்.. மண்பாதையை உபயோகித்துத் தான் தோப்புக்குள் நுழைவார்கள்.. வாசுதேன்தான் அதை மாற்றினான்...

"இதெல்லாம் எதுக்குச் செய்கிறான்னே தெரியலைப்பா.. காசைக் கரியாக்கிறான்.. நான் சொன்னா போ சக்கைன்னு சொல்லிருவான்னுதான் உங்களைக் கை காட்டினேன்.. நீங்க என்னடான்னா அவன் எள்ளுன்னு சொல்றதுக்கு முன்னாலேயே.. இந்தாடா தம்பி எண்ணெய்ன்னு நீட்டி வைக்கறிங்க.. இப்பப் பாருங்க.. ரோட்டைப் போடறேன்.. வீட்டைக் கட்டறேன்னு அகலக் கால் வைக்கிறான்.."

மகனிடம் சொல்லத் திராணியில்லாமல் தகப்பனிடம் சொல்லிப் புலம்பினார் கோபிநாதன்.. அவருடைய தகப்பனின் காதுகளில் அவருடைய புலம்பல்கள் ஏறவே இல்லை..

"அடப் போடா நீ வேற.. வீட்டில இருக்கிற தாய்க்குலம் உன் மகன்பக்கம்தான் ஜிஞ்சா.. ஜால்ரா போடுது.. பலமான கூட்டணி பலத்தோட இருக்கிறவன் கிட்ட எப்பவுமே மோதக் கூடாதுடா.. வாசு செய்கிற வேலைகளுக்கு நானு மறுப்புச் சொன்னேன்னு வைய்யி.. வீட்டில இருக்கிற உன்னோட அம்மா கிழவி முதற்கொண்டு.. நீ பெத்து வைச்சிருக்கிற என் செல்ல பேத்தி வாசந்தி வரைக்கும் வீடு கட்டி சண்டைக்கு வந்துருவாங்க.. அப்புறம் வெறும் கரண்டியக்கூட கண்ணில பாக்க முடியாதுடா மகனே..."

"அதைச் சொல்லுங்க.. வீட்டுப் பொம்பள்ளைகதான் வாசு எதைச் செய்தாலும் அதில ஒரு அர்த்தமிருக்கும்ன்னு அளந்தி வைக்குதுகளே..."



"தெரியுதில்ல.. எப்பவுமே நாட்டில இருக்கிற பொம்பளைகளைக் கூடப் பகைச்சுக்கலாம்.. வீட்டுப் பொம்பளைகள பகைச்சுக்கக் கூடாதுடா மகனே.. வயித்துக்கு சோத்துக்கும்.. உறங்கறதுக்கு விட்டுக்கும் அவங்களத்தான் நாம அண்டியிருக்க வேண்டியிருக்கு..?"

"அதைச் சொல்லுங்க..."

கொதித்துப் பொங்கியெழுந்த பாலில் குளிர் நீர் பட்டதைப் போல அடங்கிப் போனார் கோபிநாதன். அவர் வீட்டு நிலவரம் அப்படிப்பட்டது.. ஊருக்கெல்லாம் பஞ்சாயத்து பண்ணி நீதி வழங்கி விட்டு.. மீசையை முறுக்கியபடி வீட்டுக்குள் நுழைந்தால் அவரை கண்டு கொள்ள ஒரு ஜனம் இருக்காது.. அதுவே லேசான வியர்வை முத்துக்களுடன் வாசுதேவன் வீட்டுக்குள் வந்து விட்டால் அங்கே தூள் பரக்கும்...

"ஆத்தி எம்புள்ள கபடி விளையாண்டு களைச்சுப் போயி வந்திருக்கே.. அடியேய் வாஸந்தி.. அண்ணனுக்கு ஃபேன் சுவிட்சைப் போட்டு விடடி.." மகனின் முகத்தில் இருக்கும் இரண்டு துளி வியர்வையை துடைத்து விட்டபடி மகளை அதட்டுவாள் சாவித்திரி..

"அத அப்பவே போட்டுட்டேன்ம்மா.. அண்ணனுக்கு ஜீஸ் போட்டுக்கிட்டு இருக்கேன்.." குரல் கொடுப்பாள் வாஸந்தி..

"ஆத்தி.. என்புள்ளைக்கு இருக்கிற அறிவப் பாரேன்.. நான் சொல்லாமலே தானா அண்ணனுக்கு ஜீஸ் புழியுதே.." சாவித்திரி மகிழும் போது..

"அவ மட்டுமில்ல ஆத்தா.. நானும் நீ சொல்லாமத் தான் என் பேராண்டிக்கு மோர் கொண்டு வந்திருக்கேன்.." என்று அங்கு பிரசன்னமாவாள் பார்வதி...

இரண்டு துளி வியர்வையைக் கொண்ட வாசுதேவனுக்கு நடக்கும் உபசரணையை.. வியர்வையில் குளித்தபடி வந்து நின்றிருக்கும் கோபிநாதனும்.. உமாபதியும் ஏக்கத்துடன் பார்ப்பார்கள்..

அப்படிப்பட்ட பெருத்த செல்வாக்குடன் இருக்கும் வாசுதேவனைப் பகைத்துக் கொள்வது உசிதமா என்ன..?

தந்தையின் அறிவுரையைப் புரிந்து கொண்ட தனயனாக வெற்றிகரமாக வாய்மூடி மௌனம் சாதித்து வீட்டுப் பெண்களின் பகைமைக்கு ஆளாகாமல் தப்பித்தார் கோபிநாதன்...

சாலையும் போடப்பட்டு.. தோப்பு வீடும் உருவான பின்புதான் அவற்றின் மகத்துவத்தை கோபிநாதனும்.. உமாபதியும் உணர்ந்தார்கள்...

"உரமூட்டை வந்திருக்கா.. தோப்பு வீட்டுக்கு கொண்டு போயிரு..."

"பூச்சி மருந்து டின்னா.. தோப்பு வீட்டுக்குப் போப்பா..."

"மோட்டாரக் கழட்டி மாட்டனுமா.. தோப்பு வீட்டில புது மோட்டார இறக்கி வேலையைப் பாரு.."

அதற்கு முன்னால் ஊருக்குள் இருந்த வீட்டில் அடைந்து கிடந்த விவசாயப் பொருள்கள் தோப்பு வீட்டுக்கு இடம் பெயர்ந்தன.. அதனால் அவற்றைத் தோப்புக்கு கொண்டு செல்லும் சிரமமும்.. நேரமும் வெகுவாக மிச்சமானதில் மகனின் அறிவுக் கூர்மையை வியந்து போனார் கோபிநாதன்..

"இந்த யோசனை எனக்குத் தோணலையேப்பா..."

"அதெல்லாம் அறிவிருக்கிறவங்களுக்கு வர்ற யோசனைடா மகனே.. நீயும்.. நானும் அதப்பத்தியெல்லாம் பேசக்கூடாது.."

மகனுடன் உமாபதி கூட்டணி போட.. வேறு வழியின்றி அந்தக் கூட்டணியில் ஐக்கியமானார் கோபிநாதன்..

அவர்சொல்வதை காது கொடுத்துக் கேட்கும் வீட்டு ஜீவன் உமாபதி ஒருவர் மட்டும்தான்.. மற்றபடி ஊர் முழுவதும் கோபிநாதனின் பேச்சுக்கு எதிர்பேச்சைப் பேசாது.. வீட்டில்தான் அப்படியில்லையே.. அவர் வீட்டுப் பெண்கள் கோபிநாதனின் பேச்சுக்கு எதிர் பேச்சைத் தவிர வேறு எதையும் பேசி வைக்க மாட்டார்களே...

ஆதலால் பாதிக்கப்பட்ட கோபிநாதனும்.. அவரைவிட அதிகமாக பாதிக்கப்ப்ட்ட உமாபதியும் எழுதப்படாத மறைமுக கூட்டணியில் எப்போதுமே இணைந்து கொள்வார்கள்..

இப்படியாகத்தானே வாசுதேவனின் கொடி அவனுடைய வீட்டுப் பெண்களின் பலத்த ஆதரவோடு பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.. அதைக் கூட்டுவதைப் போல.. அத்தனை நாள்களாக தோப்பைக் காவல்காக்க ஆளில்லாமல் அவதிப் பட்டவர்களுக்கு.. குடும்பத்துடன் தோப்பு வீட்டின் ஒரு பகுதியில் குடியிருந்தபடி தோட்ட வேலைகளையும்.. வயல் வேலைகளையும் சேர்த்துப் பார்த்துக் கொள்ள வேலய்யனும் செல்வியும் வந்து சேர்ந்தார்கள்..

"புள்ளை குட்டி எதுமில்லய்யாம்.. ஒருத்தருக்-கொருத்தர் புள்ளகுட்டியப் போல உசிரா இருக்கிறவங்-களாம்.. பிழைப்புக்கு வழி தேடி நம்மகிட்ட வந்து நிக்கிறாங்க.. அசலூர்தான்.. ஆனாலும் பார்க்கிறதுக்கு நல்ல மனுசங்க மாதிரித் தெரியறாங்க.. அதான்.. தோப்பு வீட்டில தங்கிக்கிட்டு வேலையைப் பாருங்கன்னு சொல்லிட்டேன்.."

ஒரு மழைநாளின் இரவு வேளையில் சுடச்சுடத் தோசைகளை உள்ளே தள்ளியபடி வாசுதேவன் சொல்லிய போது.. ஒரு வார்த்தை நமைக்கேட்கவில்லையே என்ற எண்ணம் கோபிநாதனுக்கும்.. உமாபதிக்கும் வரத்தான் செய்தது..



எங்கே அதை வாய் விட்டு வைத்தால் வாய்க்கு ருசியாக கிடைத்துக் கொண்டிருக்கும் நெய் தோசைகளுக்கு வேட்டு வந்து விடுமோ என்ற பயத்தில் அவர்கள் அதைப்பற்றி வாயே திறக்காமல் தோசையில் கவனமானார்கள்.. மறுநாள் காலையில் அதைப்பற்றிக் கொதித்த மகனிடம்..

"எனக்கு மட்டும் அந்த ஆத்தாமை இல்லையாடா கோபி..? என்னத்த செய்யச் சொல்ற..? வெளியே மழை கொட்டுது.. வீட்டுக்குள்ளே சுடச்சுட மழை நேரத்துக்குத் தோதா ஆவி பறக்க சாம்பாரும்.. சட்னியும் நெய் தோசையும் தட்டுக்கு வந்துக்கிட்டு இருக்கு.. காரியம் பெரிசா..? வீரியம் பெரிசா..? நாம உரிமைக்குரலை எழுப்பப் போயி வீட்டுப் பொம்பளைக சமையல்கட்ட விட்டு வெளிநடப்புப் பண்ணிட்டாத் தோசைக்கு வேட்டு வந்திராதா..? அதான்டா மகனே வாயை மூடிக்கிட்டேன்.." என்று விளக்கம் சொன்னார் உமாபதி...

இப்பேற்பட்ட தன்மானச் சிங்கத்தை தகப்பனாகப் பெற்றிருந்த கோபிநாதனால் மகனிடம் எதையும் கேட்க முடியாமல் போனது..

'இருக்கட்டும்.. இந்த வருச மகசூல் வரவு செலவு கணக்கில துண்டு விழுகுமில்ல.. அப்ப பிடிச்சுக்கிறேன்..'

உமாபதி மகனிடம் கேள்வி கேட்கும் நாள் வருவதற்காக கொக்கைப் போலக் காத்திருந்தார்..

அந்த நாளும் வந்தது.. அறுவடை முடிந்து. தென்னந் தோப்பிலும் காய் இறக்கி முடித்து.. அந்த வருடத்து விவசாய மகசூலின் கணக்கு வழக்கைப் பார்த்தபோது மூன்று மடங்கு லாபம் அதிகமாக வந்திருந்தது..

வாசுதேவன்.. அப்பாவுக்கே பாடம் சொல்லும் சுப்பிரமணியனாக இருந்ததோடு மட்டுமில்லாமல் தாத்தாவுக்கும் டியுசன் எடுக்கும் திறமை கொண்டவனாக இருந்து வைத்தான்..

விவசாய மேற்படிப்பை படித்து முடித்தவன்.. அவர்களின் தோப்புக்கு அருகில் இருந்த தரிசு நிலத்தை சீர் செய்தபோது...

"இதில போயி எதுக்காகலே காசு போடப் பார்க்கிற..?" என்று தனது வழக்கமான ஆட்சேபனையைத் தெரிவித்து வைத்தார் கோபிநாதன்..

"போகப் போகத் தெரிஞ்சுக்குவீங்க.." முறைப்புடன் ஒற்றை வரியில் பதிலைச் சொல்லிவிட்டான் அவர்மகன்..

இப்படிப்பட்ட பதிலை தகப்பனைப் பார்த்துச் சொல்லலாமா என்று உமாவதியின் காதை அவர் கடித்த போது...

"என்லே.. போகப் போகத் தெரியும்.. இந்த பூவின் வாசம் புரியும்ன்னு ஒரு பாட்டில்ல இருக்குது..? அதப் போயி உங்கிட்ட சொல்லி வைச்சிருக்கானே உம்மகன்.. அவன் வயசுக்கு இத ஒரு குமரிப் பொண்ணுகிட்டயில்ல சொல்லி

வைக்கனும்..?" என்று கேட்டு கோபிநாதனின் கண்டனப் பார்வைக்கு ஆளானார் உமாபதி..

"என்னப்பா நீங்க.. எதப் பேசினாலும் அதுக்கு ஒரு பதில் பேச்சைப் பேசிப்புடறிங்க.. இப்படி நீங்க இருக்கப் போய்த்தான் அவனுக்கு குளிர் விட்டுப் போச்சு.." கோபிநாதன் கடுகடுத்தார்..

"ஆமடா மகனே.. உன் மகனுக்கு குளிர் விட்டுப் போச்சு.. அவன் போர்வையைத் தூக்கி எறிஞ்சுட்டான்.. அதை நீ பிடிச்சு மடிச்சு வைச்சுக்கிட்டு இருக்கிற.. போடா.. நீயும்.. உன் புண்ணாக்கு கணக்கு வழக்கும்.. எனக்கென்னவோ உன்மகன் இந்தத்தடவ பெரிய வேலையில இறங்கியிருக்கான்னு தோணுது.."

ஆயிரம்தான் இருந்தாலும் தான் கோபிநாதனைவிட அனுபவசாலி என்பதை உணர்த்திவிட்டார் உமாபதி.. அவரின் கணக்கீடு மிகச் சரியானதாக இருந்தது.. வாசுதேவன் மிகப்பெரிய வேலையில்தான் இறங்கியிருந்தான்..

## 2

"கேட்டியாடி கதையை.. நம்ம ஊருக்கு வெளியில கரும்பு மில்லக் கட்டியிருக் காங்களாம்..."

"யாரு..?"

"வேற யாரு.. எல்லாம் நம்ம பெரிய வீட்டுச் சின்னய்யாதான்கட்டியிருக்காரு.. அவரத்தவிர.. புதுசு.. புதுசா கொண்டாறதுக்கு இந்த ஊருக்குள்ளே யாரிருக்கா..?"

ஊரெல்லாம் திரும்பவும் வாசுதேவனின் பெருமை பேசப்பட்டது.. வாசுதேவன் வெற்றிகரமாக மில்லைக் கட்டி அதைத் திறந்து விட்டான்..

"என்னடா மகனே இது..? உன் மகன் எட்டடி பாய்வான்னு நினைச்சா.. எட்டு லட்சம் அடிக்கு பாய்ந்து வைக்கிறான்.. ஆயிரம்தான் இருந்தாலும் என் வளர்ப்பை விட உன் வளர்ப்பு உசத்திதாண்டா மகனே.. நானும்தான் உன்னைப் பெத்து பெயர் வைச்சு வளர்த்து விட்டேன்.. நீ என்ன மாதிரியே தோப்பு.. துரவு.. ஊர் பஞ்சாயத்துன்னு ஒரு வட்டத்துக்குள்ளே நின்னுட்ட.. அதுவே நீ பெத்து பெயர் வைச்சு வளர்த்து விட்டிருக்கிற உன் மகன் அந்த வட்டத்த ஒரே தாண்டா தாண்டி இந்தப் போடு போடறானே.. நீ நீதான்.. நான் நான்தான்.. உன் மகனுக்கு என் மகன் ஈடில்லைடா கோபிநாதா..."

வஞ்சகப் புகழ்ச்சி அணியில் மகனை நனைய விட்டு மகிழ்ந்து போனார் உமாபதி.. பற்களை கடித்து நொறுக்கித் துப்பியபடி மில்லின் திறப்பு விழாவில் கலந்து கொண்டார் கோபிநாதன்.. அத்துடன் நிறுத்தாமல் பக்கத்திலிருந்த



டவுனில் வாசுதேவன் உரம்.. விதை.. பூச்சி மருந்தின் மொத்த வியாபாரக் கடையை ஆரம்பித்து வைத்ததும் வாய்ப்புக் கிடைத்தென்று ஆட்சேபித்து வைத்தார்..

"மில்லையும் பார்த்துக்கிட்டு கடையையும் பார்க்க முடியுமா சாவித்திரி..? அது என்ன சின்னக் கடையா..? மொத்த வியாபாரக் கடைடி.. ஜேஜேன்னு வியாபாரம் இருக்கும்.. தனதாள் இல்லைன்னா வியாபாரம் எப்படி நடக்கும்..?"

"எல்லாம் நடக்கும்ன்னு சொல்லும்மா..."

"எப்படின்னு கேளு சாவித்திரி.."

"ஏன்..? அத உங்க திருவாயாலே உங்க மகன்கிட்டக் கேக்க மாட்டிங்களோ.. ஊருக்கெல்லாம் பஞ்சாயத்து பண்ணப் பேசறப்ப உங்க வாய் வலிக்காது.. அதுவே என் மகன்கிட்டப் பேசறதுன்னா மட்டும் வாய் வலிக்குமோ.."

"விடும்மா.. இப்ப இவரு என்கூட நேரடியாய் பேசலைன்னு நான் குறைபட்டுக்கிட்டேனா..?"

வாசுதேவன் தாயைச் சமாதானப் படுத்தியதில் கோபிநாதனின் மனம் புழுங்கியது.. வாசுதேவன் வளர்ந்து விட்ட பின்பு அடிக்கடி அவருக்கு மனப் புழுக்கம் ஏற்படுவதை அவர் உணர்ந்தார்...

'நான் நேரடியாய் பேசலைங்கிறது இவனுக்கு பெரிய விசயமாத் தோணவே இல்லையா..?'

"இவர்கிட்டச் சொல்லும்மா.. கடையைக் கவனிச்சுக்க தனதாள்தான் இருக்கப் போறாங்க.."

"எப்படியாம்டி சாவித்திரி.. இவன் என்ன இரட்டை வேசத்தில இருக்கப் போறானாமா..? அதெல்லாம் சினிமாவில தான் சாத்தியம் சாவித்திரி.. நிசத்தில அப்படியாப்பட்ட டுப் கிடைக்காது.."

"டுப்பெல்லாம் தேவையில்லைம்மா.. ஒரிஜினலா ஒரு ஆள்தான் அங்கே போயி உட்காரப் போறாங்க..."

வாசுதேவன் போட்ட புதிரில் 'யார் அந்த ஒரிஜினல்..?' என்று மண்டைகாய்ந்து போனார் கோபிநாதன்.. அவர் பார்வை கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் வீட்டிலிருந்த தாய்குலத்தின் ஆர்வமான கேள்விக்குப் பதில் சொன்னான் வாசுதேவன்..

"வேற யாரு? எல்லாம் நம்ம தாத்தாதான்..."

அவனின் அந்த அதிரடி முடிவில்.. சுகமாக உலாவிக் கொண்டிருந்த உமாபதியின் சுதந்திரத்திற்கு வேட்டு வந்து விட்டது..

"நானா..?!" அவர் நெஞ்சைப் பிடித்துக் கொண்டார்.

"நீங்களேதான்.. அப்பாவுக்கு பஞ்சாயத்துப் பண்ற வேலையிருக்கு.. உங்களுக்கு என்ன இருக்கு..? அதனால உரக்கடையில உங்களுக்குன்னு இருக்கிற ஏஸி ரூமுக்குள்ளே போய் உட்காருங்க.."

'யாருக்கு வேண்டும் ஏஸி ரூம்..?' உமாபதி கொதித்துப் போனார்..

அங்கே சுற்றி.. இங்கே சுற்றி கடைசியில் அவரின் சுதந்திரத்திலேயே அவரின் பேரன் கைவைத்து விட்டானே. அடிக்கிற காற்றையும்.. கொட்டுகிற அருவியையும் சிறை வைக்க முடியுமா..? அதைப் போலதான் உமாபதி ஏஸி அறையில் மாட்டுவதும்...

"என்னால முடியாதுடா பேராண்டி.." உடனடியாக அவர் மறுத்தார்..

'இப்ப என்ன செய்யுவ.. இப்ப என்ன செய்யுவ..' என்ற சந்தோசப் பார்வையைப் பார்த்து வைத்தார் கோபிநாதன்..

அதை வாசுதேவன் தகர்ப்பதற்கு முன்னால் கோபிநாதனைப் பெற்ற அன்னையான பார்வதி தகர்த்து வைத்தாள்..

"ஏன் முடியாது..? எதுக்கு முடியாதுன்னு கேக்கிறேன்.. காலையில எழுந்திருச்சதும் தோப்பைச் சுத்தி பாக்கப் போறேன்னு கிளம்பிப் போயிட்டு.. ஊர் நிலவரம்.. உலக நிலவரத்தையெல்லாம் பேசித் தெளிச்சுப் புட்டு திரும்பி வர்றீங்களே அது மட்டும் முடியுதாக்கும்..?"

"அதுக்குச் சொல்லலைடி பார்வதி.."

"கல்யாணங் காட்சிக்குப் போறேன்னு பெரிய வீட்டுப் பெரிய மனுசனா முதல் ஆளா ஆஜராகி.. அங்கே நடக்கிற வம்பையும்.. நடக்கப் போகிற வம்பையும் விழுந்து விழுந்து வேடிக்கை பார்த்துட்டு அதுக்கு திரைக்கதை வசனம் பண்ணி என்கிட்ட வந்து ஒட்டிக் காண்பிச்சு என்தூக்கத்தைக் கெடுப்பீங்களே.. அது மட்டும் முடியும்.. கடையில போய் உட்கார மட்டும் முடியாதாக்கும்..?"

விட்டால் வருடம் முழுக்க பார்வதி.. உமாபதியால் எது எது முடியும் என்பதைப் பட்டியல் போட்டுக் காண்பித்து.. அதெல்லாம் முடியும்.. கடையில் போய் உட்கார மட்டும் முடியாதா என்ற கேள்வியை எழுப்பி விடுவாள் என்ற உண்மை புரிந்தவராக உமாபதி சமர்த்துத் தாத்தாவாக வாயை அடக்கிக் கொண்டு பேரன் ஆரம்பித்திருந்த மொத்த வியாபார உரக்கடையின் ஏஸி ரூமில் தன்னை சிறைப்படுத்திக் கொண்டார்..

"வாயைத் திறந்து முடியாதுன்னு சொல்ல வேண்டியதுதானேப்பா.."

தனிமையில் தந்தையை கடிந்து கொண்டார் கோபிநாதன்.. அவர் காலத்தில் எந்த வேலையையும் பங்கிட்டுக் கொள்ள முன்வராமல்.. அதிகாரத்தை மகனின் தோளுக்கு இடம் மாற்றி விட்டதாக பெருமை பீற்றிக்



கொண்டு பொறுப்புக்களிலிருந்து கழன்று கொண்ட மனிதர்.. வாசுதேவனிடம் மட்டும் தப்பித்துக் கொள்ளாமல் மாட்டிக் கொண்ட கோபத்தில் அவர் இருந்தார்..

"தெரிஞ்சுக்கிட்டே கேக்கிறியேடா மகனே.. உன் மகன் பேச்சை மறுத்துப் பேசதான் வாயைத் திறந்தா இந்த வீட்டுல போடுற சாப்பாட்டுக்கு வாய் திறக்க முடியாமப் போயிருமேடா மகனே.."

"நீங்க இதிலேயே இருங்க.."

"நான் இருக்கிறது இருக்கட்டும்.. நீ ஏன் பேசாம இருந்த..? எனக்கு மட்டும் தான் வாய் இருக்கா..? உனக்கு இல்லையா..?"

மகனை எதிர்கேள்வி கேட்டு மடக்கினார் உமாபதி.. இந்தக் கேள்வியை அவர் கேட்டுவைப்பார் என்று எதிர்பார்க்காததினால் தகப்பனின் திடுக்கிப்பிடிக் கேள்வியில் திகைத்துப் போய் விட்டார் கோபிநாதன்..

"என்னத்தப்பா பேசச் சொல்றீங்க..?"

"வயசான காலத்தில் எங்க அப்பாவை எதுக்காகடா கடைக்கு அனுப்பி வைக்கிறேன்னு கேட்கலாமில்ல..?"

"எங்கே அனுப்பி வைக்கிறேன்..? ஏஸி ரூமில போய் உக்காந்திருங்கன்னுதானே அனுப்பிவைக்கிறேன்னு அவன் சொல்லுவானேப்பா.."

"தெரியுதில்ல..? இதத்தான் அவன் சொல்லுவான்னு எனக்கும் தெரியும்.. அதான் வாயைத் திறக்காம இருந்தேன்.. நான் உனக்கு அப்பன்டா கோபி.. உனக்கே இது தெரியறப்ப எனக்குத் தெரியாதா..?"

"தெரிஞ்சிட்டாலும்..."

என்னதான் கண்களில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு தேடினாலும் வாசுதேவனின் முயற்சிகளின் மீது அவரால் குற்றம் குறை கண்டு சொல்ல முடியாமல் போய் விட்டது..

அந்த மட்டிலும் மகனின் பார்வை அவர்மீது திரும்பவில்லையே என்ற நிம்மதி அவர் மனதுக்குள் இருந்தது..

தோப்பு துரவை மேற்பார்வை பார்த்துக் கொள்ள கணக்குப் பிள்ளையை நியமித்துவிட்டு 'அக்கடா' என்று ஊர் பெரிய மனிதராக... லட்சணமாக பஞ்சாயத்துப் பண்ணும் வேலையை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தவர் அவர்.. வாசுதேவன் பொறுப்புக்கு வந்ததும் செங்கல் சூளையை ஆரம்பித்து அவர் நியமித்திருந்த கணக்குப் பிள்ளையின் கணக்கு வழக்கிற்கு டாட்டா சொல்லி விட்டு செங்கல் சூளையை மேற்பார்வையிடும் வேலைக்கு அனுப்பி வைத்து விட்டான்...

"அவர் காலம்.. காலமா இந்த வேலையைச் செய்துக்கிட்டு இருக்கிறவருடா.." கோபிநாதன் ஆட்சேபிக்-கத்தான் செய்தார்.

"அதான்.. அவருக்கு ஓய்வு கொடுக்காம வேலையை மட்டும் மாத்தி விட்டிருக்கேன்.." அமர்த்தலாக பதில் சொன்னான் வாசுதேவன்..

"அவரு கணக்குப் பார்க்கிற வேலையில கெட்டிக்காரர்டா.."

"யாரு இல்லைன்னு சொன்னது..? அதனாலதான் செங்கல் சூளையில் எத்தனை கல்லை அறுக்கிறாங்க.. எத்தனை கல்லை லோடேத்தி விடறாங்கன்னு கணக்குப் பாக்க அவரை அனுப்பி வைச்சிருக்கேன்.."

இப்படிச் சொல்கிறவனை அவர் எப்படிக் கேள்வி கேட்பார்..? கணக்குப் பிள்ளையின் நியமனம் அவருடையதாக இருந்தாலும்.. தோப்பு துரவு.. வயல் தோட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பை அவர் மகனின் தோளுக்கு அவர் இடம் மாற்றி விட்டாரே..

'பொறுப்பச் சுமக்க வேணாம்ன்னு நினைச்சு.. அதிகாரத்த கை நழுவ விட்டுட்டேனோ..' கோபிநாதன் விழித்துக் கொண்டார்..

அதன் பின்னால் மகன் எதைச் செய்தாலும் அதற்கு ஒரு மறுப்பைத் தெரிவித்து விடுவதை அவர் வழக்கமாக வைத்திருந்தார்.. அந்தக் காரணத்தினால் அவர் வீட்டுப் பெண்குலம் அவருக்கு எதிர்கட்சி என்று பெயர் சூட்டியிருந்ததைப் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை.. அதனால்தான்.. வாஸந்தி நமட்டுச் சிரிப்புடன்.

"என்னண்ணே.. எதிர்கட்சியில என்ன சொல் கிறாங்க.." என்று வாசுதேவனிடம் விசாரிக்கும் போது..

'ஏதோ நாட்டு நடப்புப் போல இருக்கு..' என்று அசட்டையாக விட்டு விடுவார்.. அது வீட்டு நடப்பு என்று அவருக்குத் தெரியாது..

ஒன்றே ஒன்று மட்டும் அவருக்குத் தெரிந்திருந்தது.. அது.. அடுத்து வரும் காலங்களில் அந்த ஊரில் அவர் பெயர் மறக்கப்பட்டு.. அவர் மகனின் பெயர் உயர்ந்து நிற்கப் போகிறது என்பதுதான்..




"ஏண்டா மகனே..! அது எப்படிடா.. எனக்கும்.. உனக்கும் தோணாத யோசனையெல்லாம் உன் மகனுக்கு மட்டும் தோணுது..?" சந்தேகம் கேட்டார் உமாபதி..

கோபிநாதனே அவரை மகன் மிஞ்சிவிட்ட கடுப்பில் இருந்தார்.. ஊரில் எதிர்படுபவர்கள் எல்லாம் அவருடைய மகன் ஆரம்பித்திருந்த சுகர் மில்லைப் பற்றியே பேசியதில் அவருக்குள் சன்னமான பொறாமை எழுந்தது..



"நம்ம சின்னய்யா நம்ம ஊருக்கு பெருமையைச் சேர்த்துப்புட்டாரில்ல.. ஆயிரம்தான் சொல்லுங்க.. சின்னய்யா.. சின்னய்யாதான்.. அவரைப் போல யாரிருக்கா..? என்ன யோசனை..! என்ன அறிவு..! என்ன திட்டம்..! அசத்திப் புட்டாரு பார்த்தீங்களாய்யா.."

இப்படிச் சொல்பவனின் 'அவரைப் போல யாரிருக்கா..?' என்ற கேள்விக்குப் பின்னால் ஒளிந்திருப்பது என்ன என்ற- பலத்த யோசனைக்கு ஆளாவார் கோபிநாதன். அவர் அவருடைய மகனைப் போல இல்லையென்று சொல்கிறாங்களோ என்ற சம்சயம் அவருக்குள் எழுந்து தொலைக்கும்..

அப்படிப் பொருமிக் கொண்டிருந்தவரிடம் வந்து எரிகிற தீயில் எண்ணையை ஊற்றியதைப் போல கோபிநாதன் கேட்டு வைத்தால் அவருக்கு கடுப்பு வருமா.. வராதா..?

"விடுங்கப்பா.. சின்னப் பையன்.. ஆர்வமா செய்றான்.. புதுசு.. புதுசா யோசிக்கிறான்.. அதைத் தட்டிவிடாம தட்டிக் கொடுக்கிறதுதானே அப்பனுக்கு அழகு..?"

கோபிநாதன் மீசையில் மண் ஒட்டாமல் பார்த்துக் கொண்டார்.. குப்புற விழுந்தால்தானே மீசையில் மண் ஒட்டும்..? குப்புற விழாமல் சுதாரித்துக் கொண்டால் எப்படி ஒட்டும்..?

கோபிநாதனே சுதாரிப்பாக இருந்து கொள்ளும் முயற்சியை மேற்கொண்டிருக்க.. உமாபதி அப்படியெல்லாம் விட்டு விடுவேனா என்று பிடிவாதமாக ஒரு பிடி மண்ணை அள்ளி மகனின் மீசையில் தூவி விடுவதில் குறியாக இருந்தார்..

"நீயேண்டா உன் அப்பனுக்கு அந்த அழகைக் கொடுக்காம போன..?"

ஒன்றும் தெரியாத சின்னக் கண்ணனைப் போல முகத்தை வைத்துக் கொண்டு கேட்ட பெரியவரை என்ன செய்தால் தேவலாம் என்ற கொலைவெறிக்கு ஆளானார் கோபிநாதன்..

"அப்பா..."

"ஏண்டா சத்தம் போடற..? தெரியாமத்தான கேக்கறேன்..?"

"யாரு தெரியாம கேட்கிறது..? நீங்களா..? தெரியாமக் கேக்கறிங்களா..? இதை என்னை நம்பச் சொல்கிறிங்களா..? சரி.. நான் தெரியாமக் கேக்கறேன்.. நீங்க ஏம்ப்பா.. உங்க அப்பாவுக்கு அந்த அழகைக் கொடுக்காம போனிங்க.."

உமாபதி கையில் வைத்திருந்த ஒரு பிடி மண்ணைத் திருப்பி அவர் மீசையிலேயே கோபிநாதன் தூவிவிட.. அவர் வெற்றிகரமாக பின்வாங்கி.. மீண்டும் மகனுடன் கூட்டணி போடுவதில் மும்முரமானார்..

"விடுடா.. விடுடா.. இதெல்லாம் ஒரு பேச்சா..? நீயும்.. நானும்.. நம்ம பாட்டன்.. முப்பாட்டன் காலத்து சொத்தை காபந்து பண்ணிக் கட்டிக் காப்பாத்தறதிலேயே குறியாய் இருந்தோம்.. புதுசு.. புதுசு எதையாவது செஞ்சு.. பரம்பரையா இருக்கிற தோப்பு துரவு.. தோட்டம் வயலுக்கு ஆபத்து வந்திருச்சுன்னா நம்ம பரம்பரை நம்மளை மன்னிக்குமாடா..?" உமாபதி எழுப்பிய கேள்விக்கு...

"அதைச் சொல்லுங்க.." என்று சொல்லி அவருடனான கூட்டணியில் மீண்டும் ஐக்கியமானார் கோபிநாதன்..

"நம்ம பரம்பரையில தராசுத்தட்ட கையில் எடுத்தவன் எவனிருக்கான்னு நீயே சொல்லு..?"

"அதான்.. அந்தக் குறையைப் போக்கனுமுன்னு உங்க பேரன் இருக்கானே..."

"அதைத்தான்டா நானும் சொல்றேன்.. யானை கட்டிப் போரடிக்கிற பரம்பரையில பொறந்துட்டு உன் மகன் வியாபாரத்தில இறங்குவேன்னு ஒத்தக் காலில் நிக்கிறானே.. இதை ஏன்னு கேக்க உன்னால ஏன்டா முடிய மாட்டேங்குது..?"

"அவனை ஏன்னு கேட்க உங்களாலேயும் முடியாது.. என்னாலயும் முடியாதுங்கிறதுதான் உலகம் தெரிஞ்ச விசயமாச்சே.. இதில நாம ரெண்டு பேரும் ஆளு மாத்தி ஆளு.. ஏன்னு கேள்வி கேளுன்னு கேட்டுக்கிட்டு இருக்கிறதில ஆகப் போறது எதுவுமில்லப்பா..."

"என்னவோ போடா மகனே.. அந்தக் காலத்தில எம்.ஜி.ஆரு 'ஏன் என்ற கேள்வி இங்கே கேட்காமல் வாழ்க்கை இல்லை'ன்னு பாடி வைச்சாரு.. அவருக்கு மட்டும் அந்தக் கேள்வியை எப்படிடா மகனே கேட்க முடிஞ்சது..?"

"அதை அவருகிட்டப் போயித்தான் கேட்கனும்.."

எரிச்சலுடன் சொல்லிவிட்டு நடையைக் கட்டி விட்ட மகனைப் பார்க்காமல் ஏன் எம்.ஜி.ஆர் ஏன் அந்த வார்த்தைகளைச் சொன்னார் என்று யோசிக்க ஆரம்பித்தார் உமாபதி...

நெற்றிப் பொட்டை ஒற்றை விரலால் தட்டியபடி பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்த கணவரிடம் வந்த பார்வதி.. அருகிலிருந்த பேத்தியிடம்..

"ஏன்டி வாசு.. இதென்னடி கூத்தா இருக்கு..? என்னைக்குமில்லாத திருநாளா இந்த மனுசன் எதுக்காக இம்புட்டு யோசனை யோசிக்கிறாரு..?"

"அதானே.. இதல்லாம் தாத்தாவுக்கு செட் ஆகாதே.. தாத்தாவாவது.. மண்டையை உடைச்சுக்கிட்டு யோசிக் கிறதாவது..." வாஸந்தி ஆச்சரியப்பட்டாள்...



"அதைத்தான் நானும் சொல்றேன்.. என்னங்க.. என்னங்க.."

பார்வதி உரத்த குரலில் அழைத்ததில் உடல் தூக்கிப் போட யோசனையை கலைத்த உமாபதி எரிச்சலுடன் மனைவியை விரோதமாக பார்த்தார்...

'ஏஸி ரூமில என்னை தேவா அடைக்க வைச்சிருக்கிறதுக்கு இவதானே உடந்தையா இருந்தா..?'

"என்னடி..?"

"எதுக்காக நெத்தியில ஒத்த விரலாலே லொட்டு.. லொட்டுன்னு தட்டி ஓட்டை போட்டுக்கிட்டு இருக்கீங்க..?"

"என்னது..?!.."

உமாபதிக்கு சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது.. இருந்திருந்து அவர் ஆழ்ந்த யோசனையில் ஆழ்ந்திருக்கிறார்.. அதைப் பாராட்டித்தான் பேச வேண்டாம்.. ஒற்றை விரலாலே ஓட்டை போடுவதாக அவர் மனைவியே சொல்லலாமா என்ற ஆற்றாமை அவருக்குள் எழுந்தது...

"ஏம்மா வாசு.. இந்தக் கிழவிக்குத்தான் அறிவில்லைன்னா உனக்குமா அறிவில்லாம போச்சு..?" அவர் பேத்தியை கோபித்துக் கொண்டார்..

"தாத்தா வேணாம்.. பாட்டி மேல இருக்கிற கோவத்த என்பக்கம் திசை திருப்பாதீங்க.. ஆமாம்.. யாரப் பாத்து கிழவின்னு சொன்னீங்க.. எங்கப் பாட்டியைப் பாத்தா அப்படிச் சொன்னீங்க..? எங்க பாட்டி அழகில இவங்க காலத்து சினிமா ஹீரோயினெல்லாம் பயந்தே போயிட்டாங்களாம் 'அபிநய சரஸ்வதி சரோஜாதேவி' வந்து பாட்டியை ரகசியமா சந்திக்க சினிமா ஃபீல்டு பக்கம் வரக் கூடாதுன்னு வாக்குக் கேட்டாங்களாம்.. அப்படியாப்பட்ட என் பாட்டியைப் பாத்தா கிழவின்னு சொன்னீங்க..? இத சும்மா விடக்கூடாது பாட்டி.. ஏன்னு கேளு..."

அவளைப் பார்த்து அறிவில்லாமல் போய் விட்டதா என்ற கேள்வியை உமாபதி கேட்டு விட்ட குற்றத்திற்காக சாதுர்யமாக உமாபதியை பார்வதிக்கு எதிராக திருப்பி நிறுத்தி விட்டாள் வாஸந்தி..

உமாபதி பார்வதியின் அக்கினி பார்வையில் அரண்டு போய் விட்டார்.. 'அடக்கடவுளே.. என் பேத்தி.. வாசுதேவனோட தங்கச்சிங்கிறத மறந்தே போயிட்டேனே.. அவன்கிட்ட இருக்கிற அத்தனை சூட்சமமும் இதுகிட்டயும் இருந்து தொலைக்குமே..'

"பாருடி பார்வதி.." அவர் மனைவியை நோக்கி வெள்ளைக் கொடியை பறக்க விட முனைந்தார்..

"பார்த்துக்கிட்டுத்தானே இருக்கேன்.." நெற்றிக் கண்ணால் அவரைச் சுட்டாள் அவருடைய தர்மபத்தினி..

"இப்படியாடி பார்க்கச் சொன்னேன்..? கண்ணகி மதுரையைப் பார்த்ததைப் போலப் பார்த்து வைக்கிறயேடி.." அவர் அழமாட்டாத குறையாகச் சொல்ல...

"பாரு பாட்டி.. கண்ணகி பார்த்ததைப் போல நீ பார்த்து வைக்கிறயாம்.. தாத்தாவுக்கு அது தேவையில்லயாம்.. மாதவி பார்த்ததைப் போல நீ பார்த்து வைக்கணுமாம்.." என்று பார்வதிக்கு எடுத்துக் கொடுத்து உருவேற்றி விட்டாள் வாஸந்தி...

'ஆஹா.. அண்ணனுக்கேத்த தங்கச்சி.. இப்பேர்பட்ட பேரன் பேத்திகளைப் பெற என்ன தவம் செய்தேன் பெருமாளே..' நொந்து போனார் உமாபதி..

"ஓஹோ.. இவருக்கு கண்ணகி வேணாமோ.. மாதவிதான் வேணுமோ.. அந்தக் காலத்தில அரச குளத்துக்கு வண்டியக் கட்டிக்கிட்டுப் போன கதை ஞாபகத்துக்கு வந்துருச்சோ.."

உமாபதியின் பழைய கதை மூட்டையை அவிழ்த்து விட்டாள் பார்வதி..

"அது என்ன கதை பாட்டி..?" வாஸந்தி ஆர்வமாக அமர்ந்து விட்டாள்..

கதை கேட்க வாகாக படிக்கட்டில் அமர்ந்து கன்னத்தில் கையூன்றி விட்டவளைக் கவலையுடன் பார்த்தார் உமாபதி..

உமாபதிக்கு வியர்த்துக் கொட்டியது.. அந்த நாள்களின் நினைவில் அவர் தொண்டை வறட்சியைச் சந்தித்தது..

அப்படியொன்றும் அவர் அரசகுளத்துக்கு எந்த நடன மாதையும் சந்திப்பதற்காக சென்று தொலைக்கவில்லை.. நாடகம் பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவருக்கு அப்போது அந்தச் சுற்று வட்டாரத்தின் பிரபலமான நாடகக் கதாநாயக நடிகரின் மீது அபிமானம் இருந்தது.. அவரை நேரில் சந்தித்து அளவளாவ அவர் விரும்பினார்.. ஆனால் ஊருக்குப் பெரிய மனிதர் நாடக நடிகரின் மீது அபிமானம் கொண்டு பேசிப் பழகுவதை நான்கு நபர்கள் நான்கு விதமாகப் பேசுவார்கள் என்று அவருடைய காரியதரிசியும்.. கணக்குப் பிள்ளையுமான லோகநாதன் எடுத்துரைத்த காரணத்தினால் ரகசியமாக அவரைச் சந்தித்துப் பேசத் திட்டம் போட்டார்...

அதன்படி.. அருகிலிருந்த 'அரசகுளம்' கிராமத்து திருவிழாவில் நாடகம் போடவந்த அவருடைய அபிமான நாடக நடிகரை கொட்டகைக்கு வெளியே கூட்டு வண்டியில் அமர்ந்து அவர் சந்திப்பது என்று முடிவானது...

உமாபதியும் குறிப்பிட்ட அந்த நாளின் முன்னிரவுப் பொழுதில் பட்டுத் திரைகளால் மறைக்கப்பட்ட கூட்டு வண்டியில் கிளம்பி விட்டார்.. நாடகக் கொட்டகையின் வாசலுக்கு அவர் போனபோது முன்னிரவுப் பொழுது தாண்டி நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்தது.. படபடக்கும் மனதோடு அவர்



காத்திருக்க.. வண்டிக்குள் ஓர் உருவம் ஏறியது.. அவருடைய அபிமான நடிகரை பக்கத்திலிருந்து பார்த்து விட்ட ஆவலுடன் அவர் நடிகரின் கைகளைப் பரவசத்துடன் பற்றினால் அங்கே வளையல்கள் உருண்டன...

'என்னடா இது...'

உமாபதி திரையை விலக்கி நாடகக்கொட்டகையின் விளக்கு வெளிச்சத்தில் பார்த்தால் அங்கே பார்வதி அமர்ந்திருந்தாள்.. வண்டிக்கு வெளியே அவருடைய மாமனார் வீச்சருவாளும் கையுமாக கடாமீசையை முறுக்கிக் கொண்டிருந்தார்..

"பார்வதி.." விளக்கம் சொல்ல முனைந்த உமாபதியை..

"பேசாதீங்க.." என்று கோபக் கனலுடன் தடுத்து நிறுத்திய பார்வதி..

"வண்டியை ஒட்டுப்பா.." என்று வண்டிக்காரனுக்கு ஆணை பிறப்பித்து விட்டாள்..

வீட்டுக்கு வரும்வரை 'கிடுகிடு'வென்று நடுங்கிக் கொண்டிருந்தார் உமாபதி.. இப்படியொரு 'தில்லானா மோகனாம்பாள்..' வேலையை பார்வதி நிகழ்த்தக் கூடும் என்று அவருக்குத் தெரியுமா என்ன..?

அந்த நாடகக் கொட்டகையின் வாசலுக்கு எந்த மோகனாம்பாளையும் தேடி அவர் செல்லவில்லை என்று நிருபிக்க முடியாமல் அவர் பார்வதியிடம் படாத பாடு பட்டு விட்டார்..

அதன்பின்பு.. பார்வதிக்கு கோபம் வரும் போதெல்லாம் அவர் அரசகுளத்துக்கு வண்டியைக் கட்டிக் கொண்டு போன கதையைச் சொல்ல ஆரம்பித்து விடுவாள்..

"நல்ல வேளையா எங்கப்பா தில்லானா மோகனாம்பாள் சினிமாவப் பத்து தடவைக்கு மேல பாத்திருந்தாரு.. அதனால அவரு போட்ட திட்டப் பிரகாரம் இவரை மடக்கி கையும்.. களவுமா பிடிச்சேன்.. இல்லேன்னா என்ன ஆகியிருக்கும்..?"

இப்படி பார்வதி கேட்கும் போதேல்லாம்..

'அடி மடமாதே.. எதுவும் ஆகியிருக்காது.. எனக்குப் பிடிச்ச நடிகர்கிட்ட மனசார ரெண்டு வார்த்த பேசிட்டு வந்திருப்பேன்..' என்று சொல்லத்தான் முனைவார் உமாபதி..

அப்படிச் சொன்னால் மட்டும அவள் அதை நம்பவா போகிறாள்.. என்ற நிராசை அந்த முனைப்பை விரட்டியடிக்க.. பேசாமல் இருந்து விடுவார்..

அந்தக் கதையை பேத்தியிடமும் பார்வதி சொல்ல ஆரம்பித்ததில்..

"வேண்டாம்டி பார்வதி.." என்று தீனமான குரலில் தடுத்தார் உமாபதி..

"அதுதான் தெரியுமே.. உங்களுக்கு கண்ணகி வேணாம்.. மாதவிதான் வேணும்ங்கிறத அரசகுளத்தில நடந்த நாடகம் கதை கதையாய் சொல்லுமே.." பார்வதி முறைத்தாள்..

பேச்சை மாற்ற என்னவழி என்று யோசித்த உமாபதி.. பேரனின் நினைவில் கண்களில் விளக்கின் வெளிச்சம் பரவ நிமிர்ந்தார்..

"அதை விடுடி.. நம்ம வாசு எங்கேடி.. காலையில இருந்தே கண்ணில படலையே.." என்று ஆரம்பித்து வைத்தார்...

"அவனுக்கு ஆயிரம் சோலி இருக்கும்.. அவன் என்ன உங்களைப் போல எஸி ரூமுக்குள்ள தூங்கிக்கிட்டு இருக்கிறவனா..? தோப்பைச் சுத்திப் பாத்துட்டு.. மணி முத்தாறில இருக்கிற அவன் கூடப் படிச்சவனோட வீட்டு விசேசத்துக்கு போயிட்டு வாரதாச் சொல்லிட்டுத்தான் போனான்,. உங்களைப் போல யாருக்கும் தெரியாம அரசகுளத்துக்கு வண்டியைக் கட்டிக்கிட்டுப் போகலை.." பார்வதி வெடுவெடுத்தாள்..

இவள் அரசகுளத்தை விட்டு வெளியேறவே மாட்டாள் என்பது புரிந்து போக.. வீட்டை விட்டு அப்போதைக்கு வெளியேறிவிடுவதுதான் உசிதமென்று உமாபதி வெற்றிகரமாக வெளிநடப்பு செய்து விட்டார்..




யாரும் தட்டி எழுப்பாமலே எப்போதும் போல அதிகாலையில் விழித்து விட்டாள் நிவேதிதா.. புரண்டு படுத்தவள் இரண்டு உள்ளங்கைகளையும் விரித்து ஒன்று சேர்த்து அதில் முகம் பார்த்தாள்.. எழுந்து அமர்ந்து மெலிதான சோம்பலுடன் மணி பார்த்தாள்.. அது அதிகாலை ஆறு என்றது.. வர முனைந்த கொட்டாவியை நாசுக்காக அடக்கிவிட்டு குளியலறைக்குள் புகுந்தவள் பல் துலக்கி.. முகம் கழுவி.. அறையிலிருந்து வெளிப்பட்டாள்.. மாடிப் படிகளில் புள்ளி மானைப் போல விரைவாக இறங்கினாள்..

"ஹாய்.. டாட்.. குட்மார்னிங்..."

ஹாலில் பேப்பருக்குள் முகம் புதைத்திருந்த சுந்தர் நிவேதிதாவின் காலை வணக்கத்தில் பேப்பரை விட்டு முகம் விலக்கினார்..

"குட்மார்னிங் நிவி.. ஜாகிங் வர்றியா..?"

"ஓ.. யெஸ்..."

சாலையில் அவர்களைப் போல நிறையப்பேர் ஓடிக் கொண்டிருந்தார்கள்.. அவர்களுடன் கலந்து ஓடியவர்களில் நிவேதிதாவைப்



பின்பற்றி இரண்டு வாலிபர்கள் ஓடி வந்தார்கள்.. அதைக் கவனித்த சுந்தர்.. ஓடியபடியே மகளிடம் அதைச் சுட்டிக் காட்டிப் பேசினார்...

"நோட் பண்ணினியா நிவி.."

"ரெண்டு பேருக்குமே என் மேலே காதலாம் டாடி.. இவங்களில யாரை நான் ஓகே பண்ணினாலும்.. அடுத்தவனுக்கு நான் தங்கை முறையாகிடுவேனாம்.. அப்படியொரு அக்ரிமெண்ட் இந்த நண்பர்கள் மத்தியிலே இருக்காம்.. என்னவொரு ஜெண்டில்மென் அக்ரிமெண்ட்..! இல்லையாப்பா..?"

"இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்மா..?" சுந்தர் கேட்டார்..

"இவங்க சொல்லித்தான் தெரியும்பா.." நிவேதிதா ஓட்டத்தை நிறுத்தாமலே பதில் சொன்னாள்..

"இவங்க எப்பம்மா உன்னிடம் சொன்னாங்க..?" சுந்தர் விடாமல் தூண்டித் துருவினார்..

"லாஸ்ட் மன்த் டாடி.. நீங்க ஜீரம்ன்னு வீட்டில படுத்துட்டீங்க.. நான் மட்டும் ஜாகிங் வந்தேன்.. அப்பத்தான் இவங்க என்னிடம் புரபோஸ் பண்ணினாங்க.."

"அடப் பாவிகளா..!"

"ஈஸி டாட்... அவங்க மனசில இருக்கிறதை அவங்க சொல்கிறாங்க.. என் மனசுக்குப் பிடிச்சா நான் ஓகே சொல்லப் போறேன்.. இல்லேன்னா நோ சொல்லப் போறேன்.. இதுக்குப் போய் டென்சன் ஆகணுமா..?"

வேண்டாமா என்று வீட்டுக்கு வந்து மனைவியிடம் கேட்டரர் சுந்தர்.. அவளோ பக்குவமாக காபியை ஆற்றி மகளுக்கு கொடுத்து விட்டு அவளை அழமாக ஓர் பார்வை பார்த்தாள்...

சுடர் விளக்கின் அழகோடு இருந்தவளிடம்.. தென்பட்ட அலாதியான அழகில் அவள் மனம் கர்வம் கொண்டது...

"பொறுங்க.. என். மக என்ன பதிலைச் சொல்றான்னு கேட்டாகணுமில்ல.." அலட்டிக் கொள்ளாமல் சொன்னாள் மாளவிகா..

"என்னா.. எனக்கு சிட்டி பசங்களையே பிடிக்காதும்மா.." என்று பதில் சொல்லி சுந்தரின் நெஞ்சுவலியை விரட்டியடித்தாள் நிவேதிதா...

"உங்கிட்ட புரபோஸ் பண்ற பசங்களைப் பிடிக்காதுன்னு சொன்னா சரிதான்.. ஆனா.. சிட்டி பசங்களையே பிடிக்காதுன்னா எப்படிம்மா..?" அதற்கும் கவலைப் பட்டார் சுந்தர்...

"வொய் டாட்..?"

"ஏன்னு கேட்டா எப்படிம்மா..? பெங்களூரில பிறந்து வளர்ந்து சாப்ட்வேர் இன்ஜினியருக்கு படித்துக்கிட்டு இருக்கிற பெண்ணுக்கு சிட்டியிலதானேம்மா மாப்பிள்ளை அமையும்..?"

"எனக்கு அமைய வேணாம்.."

"பின்னே..?"

"எனக்கு கிராமத்தில் வாழ்க்கைப் படனும்னு ஆசை டாடி.."

"இது வேறயா..? விவசாயத்துக்கும் உனக்கும் என்னம்மா சம்பந்தம்..? ஏணி வைத்தாக்கூட உனக்கும்.. அதுக்கும்.. சம்பந்தம் வந்துராதும்மா.. ஏன்னா.. எங்க தாத்தாவுக்கு தாத்தா காலத்தில இருந்தே நாங்க பேனாப் பிடிக்கிற தொழிலைச் செய்கிறவங்க.. எங்க பரம்பரைக்கே விவசாயத்தைப் பற்றி எதுவும் தெரியாதும்மா..."

"ஸோ.. ஸேடு.. வாட் எ பிட்டி..! த்ச்சு.. த்ச்சு..."

இந்த அளவுக்கு மகள் இரக்கப்படுமளவிற்கு தங்கள் பரம்பரைக்கு என்ன குறைவு வந்து விட்டது என்று திகைத்துப் போனார் சுந்தர்.. மாளவிகாவோ மகள் பேசுவதை ரசித்துக் கேட்டு வாய் பொத்தி சிரித்துக் கொண்டிருந்தாள்..

"இது உன் வேலைதானா..?"

சுந்தரின் கோபம் மாளவிகாவின் பக்கமாக திசை திரும்பியது.. அவளோ தோளைக் குலுக்கி கைகளை விரித்துக் காண்பித்து..

"நான் என்ன செய்தேன் சுந்தர்..?" என்று அப்பாவியாக விழிவிரித்தாள்..

"செய்கிறதையும் செய்துட்டு அப்பாவி வேசம் போடுகிறயா..? நீதான் இவ மனசில உருவேத்தி வைச்சிருக்க மாலு.."

"என்னன்னு..?"

"விவசாயம்ங்கிறது இன்ட்ரெஸ்டிங்கான ஒன்னுன்னு.."

"இல்லை.. அப்படிச் சொல்லலை.. விவசாயங்கிறது உயிர்ப்பான தொழில்ன்னுதான் சொன்னேன்..."

மாளவிகா உணர்ச்சி பொங்கப் பேசினாள்.. அதை நிவேதிதா கேட்டுக் கொண்டிருப்பதில் சுந்தருக்குள் பதட்டம் உருவானது.. அவருக்குக் கீழ் வேலை பார்க்கும் இளம் என்ஜினியரான சதிஷ் அவர் மனக் கண்ணில் வந்து நின்றான்...

"சார்.. ஐ லைக் யுவர் டாட்டர்.. நான் அவளை மேரேஜ் பண்ணிக்கனும்னு விரும்பறேன்.. உங்க முடிவு என்ன சார்..?" என்று கேட்டான்..

துறுதுறுப்பானவன்.. இளம் வயதிலேயே வேலைக்குச் சேர்ந்த சில மாதங்களிலேயே தன் திறமையினால் 'டீம் லீடர்' பொறுப்பை எட்டிப்



பிடித்தவன்.. வெளிநாட்டில் வேலை பார்க்கும் வாய்ப்புக்கள் அவன் வீட்டுக் கதவைத் தட்டிக் கொண்டிருந்தன.. அவனுக்கு 'ஓகே' சொல்லிவிட சுந்தருக்கு ஆசைதான்.. ஆனால் அந்த ஆசை நிவேதிதாவின் மனதில் வரவில்லையே..

"நோ டாட்.. ஐ டோன்ட் லைக் ஹிம்.." என்று சொல்லி விட்டாளே..

"ஏன் நிவி..?" சுந்தர் ஆற்றாமைப்பட்டுப் போனார்..

சதிஷைப் போன்ற மாப்பிள்ளையை ஒரு பெண் மறுப்பாளோ..? அவர்கள் வாழும் பெங்களூரில்.. அவர்கள் வசித்து வந்த அதே பகுதியில்.. அவர்கள் வீட்டை விட பெரிய வீட்டில் பிறந்து வளர்ந்த வீட்டுக்கு ஒற்றைப் பிள்ளையான சதிஷை வேண்டாமென்று ஒருத்தி சொல்வாளா..?

அவர் மகள் சொன்னாள்.. அத்துடனும் நிற்காமல்..

"எனக்கு சிட்டியில பிறந்து வளர்ந்த மாப்பிள்ளை வேண்டாம் டாட்.." என்றும் சொல்லி விட்டாள்..

## 5

"லுக் நிவி..."

நிவேதிதா பேப்பரை விட்டு நிமிர்ந்து தந்தையைப் பார்த்தாள்.. கூடவே காபி கலக்குவதை விட்டுவிட்டு மாளவிகாவும் பார்த்து வைத்ததில் அவர் கடுப்பாகிப் போனார்..

'இவ எதுக்கு இங்கே பார்க்கிறா...'

"நான் 'லுக்'குன்னு நிவேதிதாவைப் பார்த்து மட்டும் தான் சொன்னேன்..."

"டாட்.. இப்போது இதுதான் முக்கியமா..? உங்களுக்கு என்னதான் பிரச்னை..?"

"நீ சதிஷை மேரேஜ் பண்ணிக்க ஏன் ஓகே சொல்ல மாட்டேங்கற..?"

"டாட்.. இது ஒருவகையான ஃபோர்ஸ்..."

"இருக்கட்டுமேம்மா.. அவன் உனக்கு எலிஜிபிள் பெர்சன்னு நான் நினைக்கிறது தப்பா..?"

"உங்க பாயிண்ட் ஆஃப் வியுவில அது தப்பில்லை டாடி.. பட்.. என்னுடைய விருப்பம்ன்னு ஒன்று இருக்கே.."

"ஏன் நிவி..? சதிஷ் எம்.ஈ முடிச்சவன்.. கூடுதலா எம்.பி.ஏ படிச்சிருக்கான்.. ஒன் லேக்குக்கு மேலே சேலரி வாங்கறான்.. கூடிய சீக்கிரத்தில் யு.எஸ்.ஏக்கு பறக்கப் போறான்.. அவனைப் போய் வேண்டாம்ன்னு சொல்றியேம்மா.. எப்படிம்மா..?"

"இல்லை டாடி.. மனசுன்னு ஒன்னு இருக்கு.. அதில சில தனிப்பட்ட ஆசைகள் இருக்கு.. எனக்கு மெஷின்கள் மேல ஈர்ப்பு இல்லை.. கான்க்ரீட் கட்டிடங்க மேல பிடித்தமில்லை.. சிலுசிலுன்னு ஈரப்பசையோட காத்து வருகிற ஆத்தோரமா இருக்கிற கிராமத்தில பிறந்து வளர்ந்த விவசாயியை நான் மேரேஜ் பண்ணிக்கணும்.. அவங்க வாழ்கிற அந்த வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கணும்.. இதுதான் என் ஆசை டாட்..."

தன் மகளுக்கு பைத்தியம்தான் பிடித்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்து விட்டார் சுந்தர்..

இல்லாவிட்டால் இந்த இருபத்தி ஓராம் நூற்றாண்டில் கூட்டுக்குடும்பங்கள் காணாமல் போய் விட்ட நிலையில்.. கணவனும் மனைவியுமாக சேர்ந்த குடும்பங்களைக் கூட கண்களில் விளக்கெண்ணையை விட்டுக் கொண்டு தேட வேண்டிய சூழலில்.. ஒரு அல்ட்ரா மாடர்ன் யுவதியாகப் பட்டவள் கிராமத்துக் கூட்டுக் குடும்பத்தில்தான் வாழ்க்கைப்படுவேன் என்று அடம் பிடிப்பாளா..?

அவருடைய கோபம்.. இந்த ஆசையின் விதையை மகளின் மனதில் விதைத்து விட்ட மனைவியின் பக்கமாகத் திரும்பியது..

"நீ ஒரு முடிவோடதான் இருக்கேடி.." சுந்தர் கொதித்தார்...

"எந்த முடிவோடயும் இல்லை.. எனக்கு வேலைக்கு கிளம்பியாகணும்.. அதுக்கு முன்னாலே சமையலுக்கு என்ன செய்யறதுன்னு சொல்லியாகணும்.. நிறைய நேரமில்லை.. நீங்க சொல்ல வந்ததை சீக்கிரமாச் சொல்லுங்க.." மாளவிகா பரபரத்தாள்..

"என் மாளு.." சுந்தரின் குரலில் புயலின் அமைதி அடங்கியிருந்தது..

"ம்ம்..?" மாளவிகா புருவங்களை நெரித்தாள்..

"உன் மாமன் மகன் ஒருத்தன் இருந்தானில்ல.." சுந்தரின் பார்வை கூர்மையானது..

அவர் எதிர்பார்த்ததைப் போலவே மாளவிகா முகம் மாறினாள்...

"ஏன்..? அவருக்கென்ன..?"

"அவரை நீ அத்தான்னு கூப்பிடுவ.."

"அத்தான் முறையில் இருக்கிறவரை அப்படித்தானே கூப்பிட்டாகணும்..?"

"அதுசரி.. அத்தானை அத்தான்னுதான் கூப்பிடணும்.. ஆனா மாளவிகா அந்த அத்தானை நீ கல்யாணம் பண்ணிக்க முடியாமப் போனதுக்கு நான்தானே காரணம்..? ரிலேடிவ் வீட்டு பங்சனில் உன்னைப் பார்த்துட்டு மேரேஜ் பண்ணிக்கிட்டா உன்னைத்தான் மேரேஜ் பண்ணிக்குவேன்னு ஒற்றைக் காலில் நின்றேன்.. என் வீட்டுலயும் உன்னைப் பெண் கேட்டு வந்திட்டாங்க.. உன் மாமன் மகனைவிட நான் பணக்காரனா இருந்தேன்.. படிச்சிருந்தேன்.. கை கொள்ளாம சம்பாதிச்சேன்.. அழகா வேற இருந்தேன்.. இதை நீ ஒப்புக்கிட்டாலும்.. ஒப்புக்கலைன்னாலும் ஊரார் ஒப்புக்குவாங்க..."

"சுந்தர்.. ப்ளீஸ்.."

"வெயிட் மை டியர் வொய்ஃப்.. நான் இன்னும் பேசி முடிக்கலை.. நீ ஒருநாளும் என்னை அழகன்னு சொன்னதில்லை..."

"இதுதான் உங்க பிரச்னையா..?"

"உன் மனசில கிராமத்து கூட்டுக் குடும்பத்தில் விவசாயிக்கு மனைவியாய் போக முடியலைங்கிற வருத்தம் மலையளவுக்கு இருக்கு.. அதைத்தானே உன் மக மனசில பதிய வைச்சிருக்க..?"

சுந்தரின் ஊசி முனைக் கேள்வியில் துடித்துப் போகாமல் நிதானமாக நிமிர்ந்து அவரை இமைக்காமல் பார்த்தாள் மாளவிகா..

அந்தப் பார்வையில் திணறிப் போனார் சுந்தர்.. மாளவிகாவின் நேர்கொண்ட அந்தப் பார்வையினை அவரால் சந்திக்க முடியவில்லை..

"நீங்களும்.. உங்க விதண்டாவாத கண்டு பிடிப்பும்.. ச்சே.. கேட்கவே சகிக்கலை.. ஏன்தான் உங்க புத்தி இப்படிப் போகுதோ.." எரிச்சல் பட்டாள் மாளவிகா..

"மாளு.."

"போதுங்க.. சொல்லிட்டேன்.. எப்பப் பாரு.. மாமன் மகன்.. மாமன் மகன்னு அந்த மனுசனைப் பத்தியே பேசித் தொலைக்கிறீங்க.. அந்த மாமன் மகனைக் கட்டிக்கணும்னு ஒருநாளும் நான் நினைச்சதில்லை.. ஆனா.. நீங்க படுத்தற பாட்டுக்கு இப்ப என் மனசில என்ன தோணுது தெரியுமா..?"

"என்னடி தோணுது..?" அரண்டு போய் விட்டார் சுந்தர்..

"இந்தக் கருமத்துக்கு அந்த மாமன் மகனையே கட்டித் தொலைச்சிருக்கலாம்னு தோணுது.."

அணுகுண்டை வீசிவிட்டு மாளவிகா போய் விட்டாள்.. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சுந்தர் உட்கார்ந்து விட்டார்...

பெங்களூரில் காரும்.. பங்களாவும்.. கை கொள்ளாத சம்பளமுமாக இருக்கும் அவரைவிட உழவன் மகனான மாளவிகாவின் மாமன்மகன் அவளுக்கு உயர்வாகப் போய் விட்டானா..?

அந்த யோசனையோடு வெட்ட வெளியை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தவரை கல்லூரிக்குப் போக தயாராகி வந்த நிவேதிதாவும் நிரஞ்சனும் விசித்திரமாகப் பார்த்தார்கள்..

"மம்மி.. இவருக்கு என்ன ஆச்சு..?"

மகளின் கேள்வியில் கணவரைக் கவனித்த மாளவிகா நவீனமான முறையில் கூந்தலைக் கொண்டையிட்டு அதில் ஒற்றை ரோஜாவைச் சொருகியிருந்தாள்.. அகலக் கரை கொண்ட காட்டன் புடவையுடன் பார்த்தவுடனே கல்லூரிப் பேராசிரியை என்று உணர்த்தி விடும் தோற்றத்துடன் இருந்தவள் மூக்குக் கண்ணாடியை சரி செய்தபடி கணவருக்கு அருகில் வந்தாள் அவர் தோளில் ஒரு போடு போட்டாள்..

"ஸ்ஆ..ஆ.." தோளைத் தடவியபடி மனைவியை முறைத்த சுந்தர்..

"ஏண்டி.. தாலி கட்டின ஹஸ்பெண்டை இந்த அடி அடிக்கிறயே.. இதைத்தான் உன் காலேஜ் ஸ்டுடண்ட்ஸிக்கு சொல்லிக் கொடுக்கறியா..?" என்று சிடுசிடுத்தார்..

"நான் எதைச் சொல்லிக் கொடுக்கிறேன்னு என் ஸ்டுடண்ட்ஸ்கிட்ட வந்து கேட்டுப் பாருங்க தெரியும்.. சும்மா.. விட்ட விடிகாலையில இல்லாத புராணத்தை-யெல்லாம் இழுத்து விட்டுக்கிட்டு ஆபிஸிக்கு கிளம்பிப் போகிற உத்தேசம் இல்லாம உட்கார்ந்துக்கிட்டு இருக்கிறவரு என் காலேஜைப் பத்தியெல்லாம் பேசக்கூடாது.."

மாளவிகா கொடுத்த பதிலடியில் வாய்க்குள் முணுமுணுத்தபடி குளிக்கக் கிளம்பிப் போனார் சுந்தர்..




நிவேதிதாவும் நிரஞ்சனும் சாப்பிட வந்து விட்டார்கள் என்ற உணர்வுடன் டைனிங் டேபிளுக்குச் சென்றாள் மாளவிகா.. சிந்திக்க சில நிமிடங்கள் போதும் என்ற நினைவுடன் பிள்ளைகளுக்கு தட்டைப் போட்டாள்.. அதற்கு மேல் யோசிக்க அவள் நேரம் அவளுக்குச் சொந்தமானதாக இல்லையே..

"நிவி.. நிரஞ்சா.. சாப்பிட வாங்க.."

அவள் அழைப்பில் பிள்ளைகள் வந்துவிட.. மூவரும் பேசியபடியே சாப்பிட ஆரம்பித்தார்கள்... காக்காய் குளியலுடன் அங்கே வந்த சுந்தர் அதற்கும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டார்..

"நானும் இந்த பேமிலியில ஒருத்தன்தான்.. யாருக்காவது அந்த நினைவு இருக்கா..?"



"டாட்.." நிவேதிதா கையாட்டினாள்..

"சொல் பேச்சுக் கேட்காத பிள்ளை கூடல்லாம் நான் பேசறதாயில்ல.."

"ஊஹீம்.. பிள்ளையில்லை டாட்.. பெண்.. பிள்ளையெல்லாம் சொன்னபடி கேட்கிறான்.. பெண் தான் சொல் பேச்சுக் கேட்காம ஆடறா.. எல்லாம் நீங்க கொடுத்த செல்லம்..."

"என்னடா.. டாடிக்கு போட்டுக் கொடுக்கிறயா..?"

"நோ.. நோ.. ஸ்குரு ஏத்தி விடறேன்.. இல்ல டாட்.."

எப்போதும் போல நிரஞ்சன் அப்போதும் அவன் யார் பக்கம் இருக்கிறான் என்று மற்றவர் அறிந்து விடாமல் இருக்க ஆவன செய்தான்.. அதையறியாத சுந்தர் மகளைப் பார்த்து வாஞ்சையுடன் சிரித்து வைத்தார்..

"என்கூட 'டூ' வா டாட்.." நிவேதிதா கொஞ்சினாள்..

"பார்த்தாத் தெரியலை..? என்கிட்ட மட்டும் பாசப் பயிரை வளர்க்கிற அப்பா.. உன் பக்கமா திரும்பக்கூட மாட்டேன்கிறாரே.. இதிலிருந்தே நீ விசயத்தைத் தெரிஞ்சுக்க வேணாமா நிவி.."

"போடா.. நீ யாருடா எனக்கும் என் டாடிக்கும் நடுவே வர..?"

"உன் தம்பி.. அப்பாவோட பாஷையில சொல்றதா இருந்தா தங்கக்கம்பி.."

"எனக்கு நீ பித்தளைக் கம்பிதான்.. இன்னைக்கு நான் காலேஜ் டூரில ஜாயின் பண்ணிக்கப் போறேன்.. திரும்பி வர டூ வீக்ஸாகும்.. பதினைந்து நாளா பிரிந்திருக்கப் போகிற மகள்கிட்ட எந்த டாடியாவது 'டூ' விடுவாராடா..?"

"இந்த டாடி விடுவார்.." நிச்சயத்துடன் நிரஞ்சன் சொல்ல..

"எப்பம்மா கிளம்பப் போற..?" என்று கேட்டு அந்த நிச்சயத்தை தவிடு பொடியாக்கினார் சுந்தர்..

அன்று மாலையில் சுற்றுலாவிற்கு கிளம்பினாள் நிவேதிதா..

"எதுக்குடி மூணு பேக்கு.." என்று கடிந்து கொண்ட மாளவிகாவிடம்.

"இதுவே குறைச்சல்ம்மா.." என்று சொன்னாள்..

"நான் வர பதினைஞ்சு நாளாகும்ங்கிறதுக்காக நீ இஷ்டத்துக்கு வாலை ஆட்டிக்கிட்டு இருக்காதே.. வாலைச் சுருட்டி வைச்சுக்கிட்டு மம்மி.. டாடியைப் பார்த்துக்க.." என்று தம்பிக்கு அறிவுரை வழங்கினாள்..

"ஆகட்டும் அவ்வையாரே.." என்ற நிரஞ்சனின் தலையில் ஒரு குட்டு வைத்தாள்.. மாளவிகா நீட்டிய பூஜைத் தட்டிலிருந்து குங்குமத்தை எடுத்து நெற்றியில் தீற்றிக் கொண்டாள்...

"பை டாட்.. பை மாம்.. பைடா குரங்கே..." என்று குடும்பத்துக்கு கையாட்டி விடை பெற்றுக் கொண்டாள்..

"இந்தக் குரங்கை காலேஜ் டூர் பஸ்ஸில ஏற்றி விட்டு வரேன்ம்மா..."

நிரஞ்சன் பொறுப்புள்ள தம்பியாக கிளம்ப.. மாளவிகா மகளின் கன்னத்தில் திருஷ்டி வழித்துப் பெருமைப் பட்டுப் போனாள்...

"மாம்.. ரொம்பத்தான் பெருமைப் பட்டுக்காதீங்க.. இவனொன்னும் என்னை சென்ட் ஆஃப் பண்றதுக்கு வரலை.. அந்தச்சாக்கில என்னோட ஜீனியர் பேஜ் பொண்ணுக கிட்ட கடலை போட வர்றான்.." மாளவிகா விடம் அவனை மாட்டி விட்டாள்...

"உன் கிளாஸ் மட்டும்தானே டூருக்குப் போறிங்க..?" நம்பாத பாவனையுடன் கேட்டாள் மாளவிகா..

"டூருக்கு போறதுதான் எங்க கிளாஸ்.. வழியனுப்ப வர்ற காலேஜ் ஹாஸ்டல் பொண்ணுகள்ளாம் எங்க கிளாஸா..?" புதிரை அவிழ்த்து விட்டாள் நிவேதிதா..

"உனக்கெதுக்கு அந்த வேலை..? தம்பிகாரன் காரில உன்னை ஏத்திக்கிட்டு உனக்கு டிரைவர் வேலை பார்த்து காலேஜ் டூர் பஸ்ஸுக்கு கொண்டு போய் சேர்க்கிறானான்னு பார்க்கிறது மட்டும்தான் உன் வேலை அதை விட்டுட்டு இதில எல்லாம் எதுக்கு நீ மூக்கை நுழைக்கிற..?"

"கேட்டிங்களா டாட்..."

"அவர் கேட்க மாட்டார்.. நான் என்ன உன்னைப் போல வயலும் வாழ்வுமா இருக்கற உழவர் மகளையா தேடிப் போய் ரூட் விடறேன்..? எங்க டாடி மனசுக்கேத்ததப் போல.. சிட்டி பொண்ணா.. தமிழ்ன்னா என்னன்னு கேட்கிறவளாப் பார்த்து பிட்டர்விட்டு கரெக்ட் பண்ணப் போறேன்.. அதை டாடி அட்சதை போட்டுத்தான் வாழ்த்துவார்.. இல்லையா டாட்..."

"இல்லை.."

"என்ன டாட் இப்படிச் சொல்றீங்க..? நானும் உழவர் மகளைத் தேடிப் பிடிக்கனுமா..?"

"ஊரா தேடா.. பேமிலி பேக்ரவுண்டையும் பார்க்கனும்.. அதைத்தான் சொன்னேன்..."

"அப்பாடி.. பிழைச்சேன்.."

நிரஞ்சன் நிவேதிதாவுடன் காரில் ஏறினான்.. வழி நெடுக.. தம்பியும் அக்காவும் சளசளத்துக் கொண்டே சென்றார்கள்.. காலேஜீக்குள் கார் நுழைந்ததும் தூரத்தில் நின்ற பஸ்ஸைக் காட்டிய நிரஞ்சன்...



"அந்த 'தகர டப்பா' பக்கம்தானே காரை விடனும் நிவி..?" என்று கேட்டான்..

அழகான அந்த சொருகப் பெருந்தையும் தம்பியையும் மாறிமாறிப் பார்த்த நிவேதிதா அவன் முதுகில் ஓங்கி ஒரு போடு போட்டாள்..

"இது விடில்லை நிவி.. உன் காலேஜ்.. அங்கே பாரு.. உன் ஜீனியர் பேஜ் பொண்ணுகள்ளாம் என் வருகைக்காக ஆவலோடு வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறாங்க.."

நிரஞ்சன் கூலிங்கிளாஸைத் தேடியெடுத்து கண்களுக்கு கொடுத்தான்.. தலையை ஆட்டி.. அதை ரசித்த நிவேதிதா..

"நீ பண்ற அளப்பறை இருக்கே.. அப்பப்பா.." என்று செல்லமாக அலுத்துக் கொண்டாள்..

"நிவி.. வாடி..." தாரிணி கையாட்டினாள்..

"பைடா.. ரஞ்சன்.." நிவேதிதா பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்..

பஸ் நகர்ந்தது.. கையாட்டி விடை கொடுத்த நிரஞ்சனின் கண்பார்வை வட்டத்துக்கு வெளியே விரைந்து.. மறைந்தது.. நிரஞ்சன் காரை நோக்கி நடந்தான்..

ஜன்னலோரச் சீட்டில் சாய்ந்து அமர்ந்திருந்த நிவேதிதாவுக்கு உற்சாகமாக இருந்தது.. தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்கும் யோசனையை அவள்தான் சொல்லியிருந்தாள்,. சுற்றுலா என்ற பேச்சு வந்து போது மற்றவர்கள் எல்லாம் வட இந்தியாவின் பக்கமே விரலை நீட்டினார்கள்,. நிவேதிதான் பிடிவாதமாக தமிழ்நாட்டுப் பக்கம் கை நீட்டினாள்..

தமிழகத்தில் உள்ள சுற்றுலா ஸ்தலங்களுக்கு டூர் போவதென்று முடிவானது.. இதோ.. அதன் முதல்படியாக சென்னையைச் சுற்றிப் பார்த்து விட்டு.. தஞ்சையை நோக்கி அவர்களின் பஸ் ஓடிக் கொண்டிருக்கிறது.. தஞ்சாவூரைச் சுற்றிக்காட்ட நிவேதிதா ஒப்புக் கொண்டிருந்தாள்.. அந்தப் பகுதியைச் சேர்ந்த திவ்யாவும் கை கொடுக்க அவர்கள் தஞ்சையைச் சுற்றிப் பார்த்து விட்டு.. அன்று இரவில் அங்கே தங்கினார்கள்.. மறுநாள் முழுவதும் கும்பகோணத்தைச் சுற்றியிருந்த நவக்கிரக ஸ்தலங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு மதுரைக்குப் போனார்கள்.. அன்று இரவில் அங்கே தங்கியவர்கள்.. மறுநாள் மதுரை மீனாட்சியம்மனையும்.. சொக்கநாதரையும் சேவித்து விட்டு.. திருப்பரங்குன்றத்தில் குடியிருக்கும் முருகனையும்.. வள்ளி தெய்வானையையும் சேவிக்க விரைந்தார்கள்...

அழகர் கோவில் பெருமாளின் அழகை வணங்கிவிட்டு.. அவருடன் இருந்த லட்சுமியையும் சேவித்தவர்கள் மலையின் மீது ஏறி பழமுதிர்

சோலையில் இருந்த முருகனையும் வள்ளியையும் வணங்கினார்கள்.. தீர்த்தத் தொட்டியைப் பார்த்துவிட்டு கீழே இறங்கியபோது சூரியனும் மறையத் தொடங்கியிருந்தான்..

அருவிகளாகக் கொட்டும் குற்றால மலைச்சாரலை ரசித்து அனுபவித்தவர்கள்.. திருச்செந்தூருக்குச் சொல்ல பஸ் ஏறினார்கள்.. அங்கே முருகனை வணங்கி விட்டு திரும்பி வரும்போது மணிமுத்தாறு அருவியின் அழகைப் பற்றி பஸ்ஸின் ஓட்டுநர் வர்ணித்தார்...

"நானு அந்தப் பக்கத்து ஆளும்மா.. நிறைய்ப் பெருக்கு அந்த அருவியைப் பத்தி எதுவும் தெரியறதில்ல.. குற்றால அருவிக்கு குறைச்சலில்லாத அருவிம்மா.. அந்த அருவி.. அதுவும் மலைச்சாரலோட இருக்கிற இயற்கைப் பிரதேசம்தான்ம்மா..."

அவர் வர்ணிக்க.. வர்ணிக்க.. போய்ப் பார்த்து விட்டு வந்தால்தான் என்ன என்று அவர்களுக்குத் தோன்றி விட்டது.. கூட வந்திருந்த விரிவுரையாளர்கள் இருவரும் அந்த இடம் அவர்களின் சுற்றுலா திட்டத்துக்குள் வரவில்லையென்று மறுத்தாலும்.. பெண்களின் கோரிக்கைக்கு செவி சாய்த்து அங்கே பஸ்ஸை விடச் சொல்லி விட்டார்கள்...

மணிமுத்தாறு மலைப் பகுதியில் பஸ் ஏறியது.. அடர்ந்த காடுகளுடன் கூடிய வனப்பிரதேசத்தின் அழகில் மயங்கினாள் நிவேதிதா..

"நிஜம்தான் தாரிணி.. டிரைவர் சொல்லலைன்னா நாம இந்த இடத்தைப் பார்க்காம மிஸ் பண்ணியிருப்போம்.."

"ஷ்யூர்.. ஷ்யூர்.." தாரிணி ஆமோதித்தாள்..

உயரமான மலைப் பகுதியிலிருந்து 'சோ' வென்ற சப்தத்துடன் கொட்டிக் கொண்டிருந்தது அருவி.. அருவிக்கும் அவர்கள் நின்று கொண்டிருந்த பாறை போன்ற சாலைக்கும் இடையே பெருத்த பள்ளம் இருந்தது.. அதில் கொட்டித் தளும்பி.. ஆறாக ஓடிய நீர் பச்சை நிறத்தில் காணப் பட்டது.. அருவியில் குளிக்கும் ஆசையுடன் அந்தப் பெண்கள்.. சாலையிலிருந்து சரிவில் இறங்கி.. அருவியை நோக்கி ஓடினார்கள்.. முன்னால் ஓடிக் கொண்டிருந்த தாரிணியை முந்தும் வேகத்துடன் ஓடிய நிவேதிதாவின் மீது எதிரே வந்த வாசுதேவன் மோதி விட்டான்..

"ம்ப்ச்.. இதுக்குன்னே வர்றாங்க.."

முகச் சுளிப்புடன் விலகியவளைக் கடுமையாக உற்றுப் பார்த்தான் வாசுதேவன்.. அவன் முகத்தில் கோபம் அப்பிக்கிடந்தது..



"என்னது..? உன்மேல மோதன்னே நாங்க வர்றோமா..?" அவனது கோபமான கேள்விக்கு பதிலைச் சொல்லாமல் அதிகமான முகச் சுளிப்பை முகத்தில் படற விட்டாள் நிவேதிதா..

அவளுக்கு அவள் கவலை.. கண்ணுக்கு முன்னால் கொட்டிக் கொண்டிருக்கும் அருவிப் புனலில் நனைந்து விளையாடப் போய்க் கொண்டிருப்பவளை நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்டவனை அலட்சியமாக பார்த்து வைத்தாள் அவள்..

"பின்னே..? வேற எதுக்கு வந்திருக்கீங்க..? என்னை பேட்டியெடுக்க வந்திருக்கீங்களா..? ஆளைப் பாரு.."

அவளைச் சரிவரக் கூடப் பார்க்காமல் அசட்டையாகப் பேசிவிட்டு ஓடி விட்டவளை தணல் பார்வை பார்த்தான் அவன்..

'என்ன திமிர்..!' அவன் கண்கள் சிவந்தன..

அதையறியாமல் அருவியில் குளித்து விளையாட ஆரம்பித்த தோழிகளுடன் சேர்ந்து கொண்டாள் நிவேதிதா.

"பாருடி... உழவர் வீட்டு மருமகள் இவ்வளவு லேட்டா வர்றத.." தாரிணி சிரிக்க..

"யாரு உழவர் வீட்டு மருமகள்..? நான் சாப்ட் வேர் என்ஜினியராக்கும்.. நானாவது.. விவசாயக் குடும்பத்தில வாழ்க்கைப்படறதாவது.. நோ சான்ஸ்.. எனக்கு என் டாடி அமெரிக்காவுக்கு பறந்து போய் வேலை பார்க்கிற மாப்பிள்ளையாய் பார்த்து தேடிப் பிடிச்சிருக்காராக்கும்.." விளையாட்டாய் மறுப்புச் சொன்னாள் நிவேதிதா..

"அப்ப கிராமத்துப் பக்கம் நீ திரும்பிக் கூட பார்க்க மாட்ட...?" தாரிணி நிவேதிதாவின் மீது தண்ணீரை வாரியிறைத்தாள்..

"சீச்சி.. கிராமத்துப் பக்கம் தலை வைத்துக் கூட படுக்க மாட்டேன்.. பெங்களூரில் பிறந்து வளர்ந்துட்டு.. கிராமத்துப் பக்கம் திரும்பிப் பார்க்க எனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு..?" நிவேதிதா முகத்தில் வழிந்த நீரை வழித்து விட்டபடி கேட்டாள்..

"தாத்தா.. பாட்டி.. மாமா.. அத்தை.. மச்சினர்.. நாத்தனார்ன்னு கூட்டுக் குடும்பத்தில குடித்தனம் பண்ண போக மாட்டியாக்கும்..?"

"நோ.. நோ.. ஐ ஆம் ஃப்ரீ பேர்டு.. நான்.. என் ஹஸ்பெண்ட்... சொல்றப்பவே எவ்வளவு நல்லா இருக்கு.. கூட்டுக் குடும்பத்தில மாட்ட நானென்ன முட்டாளா..?"

நிவேதிதா கண்களைச் சிமிட்டிக் கலகலவென்று சிரித்தாள்..

# 7

'எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும்..
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு..'

என்று சொன்னார் பொய்யாமொழிப் புலவர்.. காதில் விழும் வார்த்தைகளில் பொதிந்திருக்கும் உண்மையான அர்த்தங்கள் எதுவாக இருக்கக் கூடும் என்று யாரேனும் யோசித்துப் பார்த்திருக்கிறார்களா..?

நிவேதிதாவின் மனம் அழகான அகல் விளக்கைப் போன்றது.. அமைதியையும்.. எளிமையையும் நாடுவது.. அவள் சப்தங்களற்ற மௌனத்தை விரும்புகிறவள்.. சந்தடிகள் அடங்கிய சாலையில் நடக்கிறவள்.. நிலா முற்றத்தின் யாழ் மீட்டும் இன்னிசையை மனதில் உணர்கிறவள்.. அவள் அந்தி மாலையின் காற்றைப் போன்றவள்.. விடியல் தரும் கதிரைப் போன்றவள்.. தேவாமிர்த குணம் கொண்டவள்.. அனிச்ச மலரின் நுட்பம் படைத்தவள்..

அவள் வீட்டு மல்லிகை.. அதில் மணக்கும் வாசம் கொண்ட அற்புதமான உணர்வுகளைக் கொண்ட பேதை.. ஆடம்பரத்தின் பின்னால் ஓடாமல்.. உயிர்ப்பைத் தேடியலையும் யுவதி...

அவளைப் பற்றி வாசுதேவனுக்கு என்ன தெரியும்..? எதை வைத்து அவள் திமிர் பிடித்தவள் என்ற முடிவிற்கு அவன் வந்தான்..? எதனால் அவள் மமதையை அடக்க வேண்டுமென்ற ஆவேசம் கொண்டான்..?

நண்பனின் வீட்டு விசேசத்திற்கு வந்தவன் அவன்.. அருவிக்கரையில் நண்பனுடன் பேசிக் கொண்டிருந்தவன் நண்பன் செல்போனில் பேச ஆரம்பிக்கவும் நாகரிகம் கருதி விலகி அருவியை நோக்கி நடந்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான்.. மனதுக்குள் வேலைகளைப் பற்றிய சிந்தனைகளுடன் நடந்து கொண்டிருந்தவன் எதிரே வந்து கொண்டிருந்த நிவேதிதாவைக் கவனிக்காமல் அவள் மீது மோதி விட்டான்.. துணுக்குற்ற விலகியவன் சமாதானம் சொல்வதற்குள் அவள் கொட்டி விட்ட வார்த்தைகள் அவன் மனதைச் சுட்டு விட்டன...

அவன் பெண்கள் மீது இடிப்பதற்கென்றே அருவிக் கரைக்கு வருகிறவனா..? அவனைச் சுற்றி வந்த பெண்களை ஏறெடுத்தும் பார்க்காமல் அவர்கள் மத்தியில் 'ரிஷிய சிருங்கர்' என்ற புனை பெயரைக் கொண்டிருப்பவனைப் பார்த்தா அவள் அந்த வார்த்தைகளைச் சொன்னாள்..?

அவன் மனதில் வன்மத் தீயின் கனல் பற்றியெரிய ஆரம்பித்தது அந்தக் கணத்தில்தான்..

'ஆளைப் பாரு..' என்று சொன்னவளை அவன் உன்னிப்பாக பார்க்க ஆரம்பித்தான்.. அவன் கவனித்துக் கொண்டிருப்பதை அறியாமல் அவள் தோழிகளுடன் விளையாட்டுப் பேச்சைப் பேசியபடி நீர் விளையாடிக்



கொண்டிருந்தாள்.. அந்தப் பேச்சு அவனது ஆத்திரத்தைப் பன்மடங்காக்கி விட்டது..

'ஊ..! இவ பெரிய இவளா..? உழவர் மகன்னா இவளுக்கு இத்தனை இளப்பமா..? மகாராணிக்கு கூட்டுக் குடும்பம்னா பிடிக்கவே பிடிக்காதோ.. அம்மணி கிராமத்துப் பக்கம் தலை வைத்துக்கூட படுக்க மாட்டாளாக்கும்.. ச்சீன்னு சொல்றா.. ஏனாம்..? கிராமம்னா இவளுக்கு அவ்வளவு இளக்காரமா..? அங்கே இருக்கிறவங்களப் பார்த்தா இவளுக்கு மனுசங்களாத் தெரியலையா..? கூட்டுக் குடும்பம் வேண்டாமாம்.. புருசன்கூட தனிக்குடித்தனம் போதுமாம்.. இவளப் பார்த்தா புருசன் கூட வாழுறதும் கூட்டுக் குடும்பம்தானேன்னு கேக்கிறவளப் போலயில்ல இருக்கு.. இவமட்டும் தனியா குடித்தனம் பண்றதுதான் சாலச்சிறந்ததுன்னு சொல்லிருவாளோ..'

தள்ளி நின்றபடி நிவேதிதாவின் பேச்சுக்களை செவி மடுத்தபடியே இருந்தான் வாசுதேவன்..

காமாலைக்காரனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் நிறம் என்று கிராமப்புற வட்டாரங்களில் சொல்வார்கள்.. நாம் எந்த நினைவோடு பார்க்கிறோமோ அந்த நினைவு தரும் அடையாளத்தைத்தான் நம் மனம் உருவகிக்கும் என்பது அதன் தாத்பர்யமாகும்..

எவ்வாறு நீ எனை நினைக்கிறாயோ.. அவ்வாறே உனக்கு நான் சகலமுமானவனாக ஆவேன் என்றான் அந்த நாராயணன்..

அந்தப் பெருமாளின் திருவாய் மொழியைப் போலத் தான் கிராமத்து மக்களும் அந்த வழக்கு மொழியை சொல்லி வைத்தார்கள்..

வாசுதேவனும் அதைப் போலதான்.. மனதில் எந்த விதமான விகல்பமுமில்லாமல் இயல்பாக மோதி விட்டவனைப் பார்த்து அவள் வெறுப்புடன் சொன்ன 'த்ச்சு..' என்ற ஆட்சேபக் குரல் அமிலமாக அவன் காதுகளில் பாய்ந்து விட்டது.. அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அடுத்து அவள் சொன்ன

'இதுக்குன்னே வர்றாங்க..' என்று சொன்ன அபாண்டக் குற்றச் சாட்டில் அவன் ஆத்திரம் கொண்டு விட்டான்...

'இதுக்குன்னு சொன்னா என்ன அர்த்தம்..? எதுக்குன்னு சொன்னா அவ..? இவ பெரிய அழகி.. இவமேல உராய்ந்து பார்க்கனும்னு நான் ஆசைப்பட்டேன்னு சொன்னாளா..?'

அருவியில் நனைந்து கொண்டிருந்த பெண்கள் குளியலை முடித்தவர்களாய் வெளியேறி வந்தார்கள்.. ஒருவர் மீது ஒருவர் அடித்துப் பேசியபடி கடந்து சென்றவர்களை பாறையின் பின்பக்கமான மறைவினில் நின்று பார்த்த வாசுதேவன் வெளியே வந்தான்...

"ஐயா.. வத்திப்பெட்டி கிடைக்குமா..?"

திரும்பிப் பார்த்தான்.. நிவேதிதா வந்திருந்த பஸ்ஸின் டிரைவர் வாயில் சிகரெட்டுடன் நின்றிருந்தான்..

"இல்லை.. எனக்கு சிகரெட் பிடிக்கிற பழக்கமில்லை.."

"ஓஹோ.."

நகரப் போன டிரைவரை இழுத்து நிறுத்திய வாகதேவன்.. அவனை உன்னிப்பாக பார்த்தான்.. அதே உன்னிப்புடன் வாகதேவனைப் பார்த்த அந்த டிரைவர் அரண்டு போனான்...

"ஐயா.. நீங்களா..?" அவன் வாயிலிருந்த சிகரெட் நழுவி விழுந்தது..

"தானேதான்.. நீ நம்ம ரெங்கசாமியோட மகனில்ல..?"

"ஆமாங்கய்யா..."

"எம்பா.. கடன் தொல்லை வந்தா பெண்டாட்டி பிள்ளையை விட்டுப்புட்டு ஊரை விட்டே ஓடிப் போகனும்ங்கிற சட்டம் எதுவும் இருக்கா..?"

"ஐயா அப்படிச் சொல்லக்கூடாது.. என் பெண்டாட்டி பிள்ளைகளை அனாதையா விட்டுப்புட்டு நான் ஓடலைங்க.. அவங்க கூட நானும் இருந்தா என்னைத் தேடிவர்ற கடன்காரங்களுக்கு அவங்க பதில் சொல்லனுமேங்கிற கவலையினாலதாங்க ஓடினேன்.. நம்ம ஊருப்பக்கம் வேலைக்கு பஞ்சமில்லைங்கய்யா.. விவசாயத்தொழில் தெரிஞ்சவங்க வயிறு என்னைக்கும் வாடாதுங்கய்யா.. எங்க அப்பனும்.. ஆத்தாளும் விவசாய வேலையில கரை கண்டவங்க.. எம்பொஞ்சாதியும் அதில தேர்ந்திட்டா.. இவங்க மூணு பேரும் வேலை செஞ்சு என் புள்ளைகளைக் கரை சேத்திருவாங்கன்னு எனக்குத் தெரியும்ங்கய்யா.."

"அறிவு கெட்டவனே..! வயித்துக்கு சோறும்.. உடுத்திக்க துணியும்.. இருக்கிறதுக்கு இடமும் இருந்திட்டா மட்டும் போதுமா..? உன் அப்பன்.. ஆத்தா.. பெண்டாட்டி.. பிள்ளைக மனசில நிம்மதியிருக்க வேணாமா..?"

"ஐயா.." அந்த டிரைவர் அழுதுவிட்டான்..

"எனக்கு மட்டும் அவங்க நினைப்பு இல்லேன்னா நினைக்கறிங்க..? ஒளிஞ்சிருந்தாவது அவங்களைப் பாத்துப் புடனும்னுதானுங்க இந்த மணிமுத்தாறு பக்கம் பஸ்ஸை திருப்பி விட்டேன்.. இல்லேன்னா இந்த அருவியைப் பாக்கலாம்ன்னு இந்தப் பொண்ணுகள திசை திருப்பி விடுவேனுங்களா..? இந்த மாயவன் மனசு பூரா அவன் குடும்பதானுங்க நிறைஞ்சிருக்கு.."



வாகதேவனுக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.. அந்த மண்ணில் பிறந்தவன் அவன் என்ற சொந்தத்துடன் இமை மூடித் திறந்து அவனைச் சமாதானப் படுத்தினான்..

"விடு.. விடு.. இந்த உலகத்தில கஷ்டப்படாத மனித ஜீவன்னு யாரும் இருக்காங்களா..? போதாத காலம்.. படணும்னு விதி இருக்கு பட்டுட்ட... உன் குடும்பத்த பாத்தியா..."

"மறைவா நின்னு பார்த்தேனுங்க..."

"பைத்தியக்காரா.. நேராப் போயி நிக்க வேண்டியது தான..?"

"வேற வினையே வேணாமுங்க.. கடன்காரங்க தேடி வந்து.. அவங்களத்தான் கேள்வி கேப்பாங்க.. இத்தன நாளா நான் எங்கேயிருக்கேன்னு தெரியாம இருந்ததப் போலவே இப்பவும் இருக்கட்டும்.."

"கலங்காதே மாயவா.. உன் கடனெல்லாம் எப்பவோ அடைபட்டிருச்சு.."

"என்ன சொல்றிங்கய்யா..?"

தன் காதுகளில் விழுந்த செய்தியினை நம்ப முடியாமல் விழி விரித்துப் பார்த்தான் மாயவன்.. அவன் கண்களில் எல்லையற்ற பிரமிப்பு தென்பட்டது..

"ஆமாம்ப்பா... வயல் வேலைக்கு வந்திருந்த உன் அம்மாவும்.. பெண்டாட்டியும் என் பாட்டிகிட்ட புலம்பி அழுதாங்களாம்.. இந்தக் கடன் தொல்லையாலேதானே ஒரு மனுசன் குடும்பத்தை விட்டு ஓடியிருக்கான்னு என் பாட்டி என்கிட்டப் புலம்புச்சு.. நான்தான் உன் கடனை அடைச்சேன்.."

"ஐயா.. நீங்க நல்லா இருக்கனுங்கய்யா.."

மாயவன் வாகதேவனின் கால்களில் விழுந்து விட்டான்..

"அட... எழுந்திருப்பா.. இது ஒரு பெரிய விசயம்ன்னு கால்ல விழுந்துக்கிட்டு.."

"ஐயா.. எப்பாடு பட்டாவது உங்க கடனை அடைச்சிருவேனுங்கய்யா.."

"செய்யி.. யாரு வேணாம்ன்னு சொன்னது...? அதுக்கு முன்னாலே உன் குடும்பத்தைப் பார்த்து.. நீ எங்கேயிருக்கேன்னு சொல்லிட்டுப்போ.. அவங்களும் நிம்மதியா இருப்பாங்கல்ல..?"

"தோ.. முத வேலையா அதத்தான் செய்யப் போறேனுங்க.."

உற்சாகமாக ஓட முயன்றவனை நிறுத்திவைத்த வாகதேவன் இயல்பாக கேட்பதைப் போல..

"ஆமா.. நீ எந்த காலேஜில வேலை பார்க்கிறேன்னு சொன்ன..?" என்று கேட்டான்..

மாயவன் உற்சாகமாக பதில் சொன்னான்.. அவன் செல்போன் நம்பரையும் வெகு இயல்பாக வாங்கிக் கொண்ட வாசுதேவன் சிறு தலையசைவுடன் போய் விட்டான்...

போகும் போதே உடை மாற்றி வந்து விட்ட நிவேதிதாவை ஒரு பார்வை பார்த்து விட்டுப் போக அவன் தவறவில்லை..

"நிவேதாம்மா.."

குதூகலத்துடன் வந்த மாயவனை ஏரக்கூந்தலை உலர வைத்துக் கொண்டிருந்த நிவேதிதா ஏறிட்டுப் பார்த்தாள்..

"என்னங்கண்ணா..?"

"ஆயிரம் ரூபாய் கடனாக் கொடுப்பீங்களாம்மா..?"

"எதுக்குண்ணா.."

"உங்ககிட்ட சொல்றதுக்கென்னம்மா.. பக்கத்திலே தான் எங்க கிராமம் இருக்கு.. என் அப்பன்.. ஆத்தா.. பெண்டாட்டி.. பிள்ளைகன்னு என் குடும்பம் மொத்தமும் இங்கேதான் இருக்கும்மா.."

"ரியலி..?" ஆச்சரியப்பட்டாள் நிவேதிதா..

"நீங்க சொல்லவே இல்லை.. பார்த்தீங்களா.."

"எப்படிச் சொல்றதும்மா.. இத்தனை வருசமா நான் எங்கேயிருக்கேன்னு கூடத் தெரியாத என் குடும்பம் இங்கேதான் இருக்குன்னு எனக்கு சொல்ல வாய் வரலையேம்மா..."

"வாட்..?!"

நிவேதிதாவின் கேள்வியில் மாயன் அவனது சரித்திரத்தைக் கொட்டிக் கவிழ்த்து விட்டான். மற்ற பெண்களைப் போல இல்லாமல் மனித நேயத்துடன் இருக்கும் நிவேதிதாவின் மீது அவனுக்கு தனிப்பட்ட வாஞ்சை இருந்தது.. அவளிடத்தில் எதையும் மறைக்க அவன் முனையவில்லை...

அவனுக்குத் தெரியும்.. அவள் மற்றவர்களின் அந்தரங்கத்தைப் பேணிக் காப்பவள் என்று...

நிவேதிதா நாகரிகம் அறிந்தவள்.. தனிப்பட்ட மனிதர்களின் விருப்பு.. வெறுப்புக்களைப் பற்றி ஒரு நாளும் அவள் அலசியதில்லை... ஒரு சின்னஞ்சிறு சிரிப்புடன் மற்றவர்கள் பேசும் அக்கப் போரில் கலந்து கொள்ளாமல் நகர்ந்து விடும் அவள் தன்மையை மாயவன் கண்டிருக்கிறான்.. அந்த மதிப்பினால்தான் அவன் மனதை திறந்து அதில் உள்ளதை அவளிடம் சொல்லி விட்டான்..



"தெய்வம் மாதிரிங்கம்மா வாசுதேவ ஐயா.. சின்ன வயசுதான்.. இன்னும் கல்யாணம் ஆகலை.. இந்த வயசுக்குள்ளே எங்க கிராமத்துக்குள்ளே எத்தனையோ சாதனைகளை சாதிச்சவரும்மா... விவசாயத்தைப் படிப்பா படிச்சவரு.. இவரு செய்ற விவசாயம் கூட புதுமாதிரியா அமோக விளைச்சலைத் தரும்ன்னா பாத்துக்கங்களேன்.."

"அடேங்கப்பா.. விட்டா.. அந்த வாசுதே ஐயாவோட புராணத்த இன்னைக்குப் பூரா சொல்லிக்கிட்டே இருப்பீங்க போல..."

"அவர் பெருமையைச் சொல்ல ஒருநாள் போதாதும்மா.. ஆயுசு பூரா வேணும்.. அவர் புண்ணியத்தில என் குடும்பத்துக்கு முன்னாலே நான் இங்கேதான் இருக்கிறேன்னு சொல்லிக்கிட்டுப் போயி நிக்கப் போறேன்.. இத்தனை வருசம் கழிச்சு அவங்களைப் பாக்கப் போறவன் வெறுங் கையோட போயி நிக்க மனசு வரலைம்மா.. எங்கிட்ட இரண்டாயிரம் இருக்கு.. ஏ.டி.எம் கார்ட் தேவைப் படாதுன்னு ஊரிலயே விட்டுப்புட்டு வந்துட்டேன்.. நீங்க ஆயிரம் கொடுத்தா வீட்டுக்கு எதாச்சும் வாங்கிட்டுப் போவேன்..."

மாயவனின் இறைஞ்சதலில் நிவேதிதாவின் மனம் நெகிழ்ந்தது.. அவள் கைப்பையைத் திறந்து அதிலிருந்து பத்தாயிரம் ரூபாயை எடுத்துக் கொடுத்தாள்..

"அம்மா.." மாயவன் திகைத்தான்..

"கைச்செலவுக்குன்னு மம்மியும்.. டாடியும் கொடுத்து விட்ட பணம்ண்ணா.. நான் திருநெல்வேலியில எதாச்சும் ஒரு ஏ.டி.எம் மில பணத்த எடுத்துக்கிட்டு வீட்டுக்கு தகவல் சொல்லிக்குவேன்.. என்னிடம் ஏ.டி.எம் கார்டு இருக்கு.. பேங்கில பணமும் இருக்கு.. நீங்க போங்க.. இந்த நிமிசத்தோட அற்புதத்தை பணப் பற்றாக்குறையினாலே நழுவ விட்டுராதீங்க.. போங்கண்ணா.. போயி.. வீட்டுக்கு வேண்டியதை வாங்கிட்டுப் போங்க..."

நிவேதிதாவின் கருணையில் மாயவனின் கண்கள் குளமாகின...

## 8

அன்றைய தினத்தில் மாயவன் இரண்டு பேரின் கருணை மனத்தை அறிந்தான்.. அவர்கள் இருவருமே இளம் வயதினர்.. ஆனால் அவர்களின் கருணையாலும்.. தயாள குணத்தாலும் பெரியவர்களை அவர்கள் மிஞ்சினார்கள்...

வாசுதேவன் மாயவனின் கடன்தீர்த்து அவனுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் இடையினில் இருந்த இடைவெளியைக் குறைத்தானென்றால்.. நிவேதிதா கொஞ்சம்கூடத் தயங்காமல்.. யோசிக்காமல்.. அவள் கையிலிருந்த மொத்தப் பணத்தையும்

கொடுத்து.. வருடங்கள் கடந்து அவன் குடும்பத்தைச் சந்திக்கப் போகும் அந்த அற்புதமான நொடிகளை ஆனந்த மயமானதாக்கிக் காட்டினாள்...

இருவருமே அவர்களிடம் அவனைக் கடன்பட வைத்தார்கள்.. அவன் பணத்தைத் திருப்பிக் கொடுப்பானா.. மாட்டானா.. என்பதைப் பற்றிக் கொஞ்சம் கூட அவர்கள் யோசிக்கவேயில்லை.. அதைப் பற்றிப் பேசாமல் அவனுடைய குடும்பத்துடன் அவன் சேர வேண்டியதைப் பற்றி மட்டுமே அவர்கள் பேசினார்கள்..

அந்த நல்ல உள்ளங்களின் ஆசிர்வாதத்தில் மாயவன் மனம் நெகிழ்ந்தான்.. அவர்களிடம் பட்ட பணக்கடனை அவன் தீர்த்து விடலாம்.. நன்றிக் கடனை எப்படித் தீர்ப்பான்..?

காலத்தினால் செய்த உதவி ஞாலத்தை விடப் பெரியதல்லவா..?

மயாவன் அவன் குடும்பத்தினர் அனைவருக்கும் துணிவகைகளை வாங்கிக் கொண்டானாம். அவன் பிள்ளைகளுக்கு விளையாட்டுச் சாமான்களாம்.. பழங்களும்.. இனிப்பு வகைகளும் கூடச் சேர்ந்திருந்தனவாம்..

"இத்தனையும் கொண்டு போயிருக்கேன்ம்மா.. ஒருத்தரும் அதைத் தொட்டுப் பார்க்கலையே.. ஆள் மாத்தி ஆளு என்னைக் கட்டிக்கிட்டு 'ஓ'ன்னு அழுதாங்கம்மா.."

மாயவன் கண்ணீர் குரலில் நிவேதிதாவிடம் சொன்னான்.. சுற்றுலா சென்றவர்கள் திருநெல்வேலியின் ஹோட்டல் ரூமில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் அவன் குடும்பத்தைப் பார்க்க ஓடோடிப் போய் விட்டுத் திரும்பியிருந்தான்...

"ஒரு ஜீவன்கூட ஏண்டாப்பாவி.. இப்படி விட்டுட்டு ஓடிப் போயிட்டயேன்னு கேட்கலைம்மா.. அதுக்கு மாறா.. நான் இளைச்சுப் போயிருக்கேன்னு சொல்லி அழுதாங்கம்மா.. நான் நல்ல வேலையில இருக்கேன்.. மாசத்துக்கு ஒரு தடவை வந்துட்டுப் போறேன்னு சொன்னதும் அவங்க முகத்தில தெரிஞ்சுச்சே ஒரு நிம்மதி.. அதுக்கு ஈடு இணை இல்லைம்மா..."

மாயவனின் முகத்தில் நிம்மதி இருந்தது.. அது திக்குத் தெரியாத அத்துவானக் காட்டுக்குள் தொலைந்து போயிருந்தவன் மீண்டு வந்து அவன் குடும்பத்துடன் சேர்ந்து விட்ட நிம்மதி.. சிறை மீட்பை விடப் பெரிதானதென்று இந்த உலகத்தில் எதுவுமில்லையென்று நிவேதிதா நினைத்துக் கொண்டாள்..

'யார் அந்த வாகதேவன்..?'

அவளுக்க அந்த வாகதேவனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது.. அவன் செய்திருக்கும் அந்த மகத்தான காரியத்தை வியந்து பாராட்ட வேண்டும்



போல இருந்தது.. அவனைப் போன்ற மனிதர்களைப் பார்ப்பது மிக.. மிக.. அபூர்வம் என்பதை அவள் உணர்ந்திருந்தாள்..

"அந்த வாகதேவன் என்ன அத்தனை பெரிய ஆளா..?"

அவனைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலுடன் அவள் கேட்டாள்.. அதையறியாத மாயவன் சிலிர்த்துக் கொண்டு வாகதேவனின் அருமை.. பெருமைகளைப் பற்றிச் சொல்ல ஆயத்தமாகிவிட்டான்..

"நல்ல வேளையா இதை எங்கிட்டக் கேட்டீங்கம்மா.. இதை மட்டும் எங்க பொன்வயல் கிராமத்தில் வந்து கேட்டிருந்தீங்கன்னா அவ்வளவுதான்.. ஆளாளுக்கு சண்டைக்கு வந்திருப்பாங்க..."

"அடேங்கப்பா.. உங்க ஐயா அப்பேர்ப்பட்ட ஹீரோவா..?"

"ஆமாம்மா.. எங்க ஊருக்கு அவர்தான் ஹீரோ.."

நிவேதிதாவுக்கு அந்த ஹீரோவைப் பார்க்க வேண்டும் போல ஆசையாக இருந்தது.. இதை தாரிணியிடம் அவள் சொல்லி வைத்த போது அவள்..

"என்னடி.. கண்டதும் காதல்னு கேள்விப் பட்டிருக்கேன்.. இங்கே.. காணாமல் காதலா..?" என்று கண்களைச் சிமிட்டினாள்..

"அடிதான் வாங்கப் போற..."

கோபித்துக் கொள்வதைப் போல பாவனை செய்தாலும் நிவேதிதா அதை மறுத்துப் பேசவில்லை.. அந்த சுற்றுலா தினங்களில் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் மாயவனிடம் வாகதேவனைப் பற்றியே விசாரித்தாள்.. அவனைப் பற்றி.. அவனுடைய் குணங்களைப் பற்றி.. அவன் குடும்பத்தைப் பற்றியென்று பேசப்பேச நிவேதிதாவின் மனதில் காதல் பெருக்கெடுத்தது.. மாயவனோ வாகதேவனால் சிறகுகள் மீண்டு விட்ட உற்சாகத்தில் இருந்தான்.. இனித் தினமும் அவன் மனைவி மக்களுடன் போனில் பேசலாம்.. மாதத்துக்கு ஒரு தடவை சம்பளம் வாங்கியவுடன் அவர்களைப் போய் பார்க்கலாம்.. வீட்டுக்கு வேண்டியதை வாங்கிப் போட்டு விட்டு வரலாம்.. பிள்ளைகளுக்குத் தேவையானதை வாங்கிக் கொடுக்கலாம்..

நினைத்து... நினைத்து அவன் அவற்றை நிவேதிதாவிடம் சொல்லி மகிழ்ந்தான்.. அவனுடைய மகிழ்ச்சியைக் கண்ட நிவேதிதாவின் மனம் நெகிழ்ந்தது...

சுற்றுலா முடிந்து வந்த மறுதினமே மாயவன் அவளிடம் கடனாக வாங்கிய தொகையை திருப்பிக் கொடுத்து விட்டான்..

"இதை உங்க வீட்டுக்கு என் சார்பில நான் கொடுத்ததா நினைச்சுக்கங்கண்ணா..." நிவேதிதா மறுத்துப் பார்த்தாள்..

பூம்பொழில் கிராமத்தில் போய் அவர்கள் இறங்கிய அடுத்த நிமிடமே நிவேதிதாவைத் தேடிக் கொண்டு வந்து விட்டாள் சௌதாமினி.. வரும் போதே அவள் பார்வை மாளவிகாவின் அண்ணன் மகனான கோவர்த்தனனின் மீது மையலுடன் படிந்து மீண்டது..

கோவர்த்தனும் சும்மா இல்லை.. சௌதாமினியை விழுங்கி விடுவதைப் போல பார்த்து வைத்தான்..




"நீ சொல்லு சௌதா.." மாளவிகா சௌதாமினியின் பக்கம் திரும்பினாள்..

"என்னத்தைச் சொல்ல..?" சௌதாமினி கோவர்த்தனனை முறைத்தபடி நீண்ட பெருமூச்சை விட்டாள்..

"எதுக்கு இந்த அளவுக்கு ஏக்கப்படற..? உங்க அப்பா சொன்னா கல்யாணத்தை பண்ணிக்க வேண்டியதுதானே.. உன் மனசில ஏதாச்சும் தனிப்பட்ட ஆசையிருந்தா அதை உன் அப்பாகிட்டச் சொல்லு..."

"சொல்லிட்டாலும்.."

"எதுக்கெடுத்தாலும் நெகடிவ்வாவே பேசாத சௌதா.."

"பாஸிடிவ்வா பேசி என்ன பிரயோசனம் சித்தி..? என் ஆசையை அப்பா நிறைவேத்தனும்னா அதுக்கு ஒரு கிலோ தங்கம் வேணும்.. அம்புட்டுத் தங்கத்தை வெட்டி எடுத்துக்கிட்டு வர அவரு கோலார் தங்கச் சுரங்கத்துக்குத் தான் போகனும்.."

சௌதாமினியின் வார்த்தை வீச்சின் அனலைத் தாங்க முடியாமல் கோவர்த்தனன் ஓடோடிப் போய் விட்டான்..

"அத்தானை எதுக்குடி இந்தக் காய்ச்சு காய்ச்சற..?"

மாமன் மகனிடம் ஏற்பட்ட அனுதாபத்துடன் தோழியை தனிமையில் விசாரித்தாள் நிவேதிதா..

"பின்னே..? கள்ளத்தனமாய் பார்க்கத் தெரியுது.. யாருக்கும் தெரியாம பொழுது சாயற நேரத்துக்கு ஆத்தங்கரைக்கு வான்னு சொல்லத் தெரியுது.. திருட்டுத்தனமா மல்லிகைப் பூவை வாங்கிக் கொடுக்கத் தெரியுது.. ஆனா.. அம்மாகிட்ட மட்டும் சௌதாமினியைத் தான் கட்டிக்குவேன்னு சொல்லத் தெரியலைன்னா கோபமம் வராதா..?"

"வரும்தான்.. நீயேண்டி அது திருட்டுத்தனமா வாங்கிக் கொடுக்கிற மல்லிகைப் பூவை வாங்கிக்கற..?"



"அதுவா..? திருட்டு மல்லிகைக்கு வாசம் ஜாஸ்திடி நிவி.."

சௌதாமினி கண்களைச் சிமிட்டினாள்.. அவள் எப்போதுமே இப்படித்தான்.. உற்சாகம் வந்தால் கண்களைச் சிமிட்டுவாள்.. ஆர்ப்பரிக்கும் அருவியைப் போன்ற அவளுக்கும்... அமைதியான நதியைப் போன்ற சுபாவமுடைய கோவர்த்தனனுக்கும் எப்படி பொருந்திப் போனது என்று நிவேதிதாவுக்குப் புரியவில்லை..

'எதிர்மறைத் துருவங்கள் ஒன்றையொன்று ஈர்க்கும் என்பது இதுதானோ..' என்று அவள் நினைத்துக் கொண்டாள்...

வழக்கம் போல சௌதாமினியுடன் அவள் ஆற்றில் குளிக்கப் போனாள்.. படித்துறையில் கால் நனைய அமர்ந்தபடி சௌதாமினியுடன் சளசளத்துக் கொண்டிருந்த போது அவளையுமறியாமல் வாசுதேவனைப் பற்றி அவள் சொல்லிவிட்டாள்..

"வாட் எ கிரேட் மேன் சௌதா..! அவரைப் போல பெர்ஸனாலிட்டியைப் பாக்கிறது அபூர்வம் சௌதா.."

"ஏன் நிவேதா.. நீயென்ன அந்த வாசுதேவனைக் காதலிக்கிறியா..?"

சௌதாமினிதான் முதன் முதலாக நிவேதிதாவின் மனதை அவளுக்கு அடையாளம் காட்டினாள்.. அதுவரை வாசுதேவனின் மீது மனதுக்குள் தோன்றியிருக்கும் அபிமானத்திற்கு என்ன பெயர் சூட்டுவது என்று தெரியாமல் குழம்பிப் போயிருந்த நிவேதிதா திகைத்துப் போனாள்...

'இதுதான் காதலா..?'

இதுதான் காதல் என்றாள் சௌதாமினி...

"இப்படி வா சொல்றேன்.."

அவள் தோழியை இழுத்து வைத்து படித்துறையின் கடைசிப் படியில் நீருக்குள் அமிழ்த்தி உட்கார வைத்தாள்..

தோள்வரை தளும்பிய நீரில் அமர்ந்தபடி தோழிகள் இருவரும் வாசுதேவனைப் பற்றி எப்படி அறிந்து கொள்வது என்பதைப் பற்றி யோசித்தார்கள்..

"நீ அந்த டிரைவர்கிட்டக் கேட்டுப் பாரேன்.."

"மாயவன் அண்ணாகிட்டயா..?"

"அந்த நொண்ணாகிட்டத்தான் கேளுங்கறேன்.."

"ஏண்டி அவரைத் திட்டற...?"

"திட்டாம என்ன செய்வாங்களாம்..? சும்மாயிருந்தவ மனசில எவனோ ஒரு பொன்வயல்காரனைப் பத்தின நினைப்ப உண்டாக்கிவிட்டா திட்ட மாட்டாங்களா..?"

"அவர் என்னடி செய்வாரு..? யதார்த்தமா சொன்னாரு.."

"அவருக்கு அது யதார்த்தம்.. உனக்குத்தான் அது பதார்த்தமா போய்த் தொலைஞ்சிருச்சே.."

"சௌதா.."

"எதுவும் சொல்லலைடிம்மா.. இப்ப நம்ம முன்னாலே இருக்கிற வழி இது ஒன்னுதான்.. அந்த மாயவன்கிட்டக் கேட்டுத் தெளிவு பண்ணிக்கிறதுதான்.. எனக்கு கவலையாயிருக்குடி நிவி.. நீ பாட்டுக்கு உன் மனசில அந்த வாசுதேவனைப் பத்தின நினைப்பை வளர்த்துக்கிட்டு இருக்கிற.. அங்கே அந்த ஆளு கல்யாணமாகி குழந்தை குட்டின்னு இருந்தா பாதிக்கப்படப் போறது உன் மனசு தாண்டி.."

கிலைடைந்து போனாள் நிவேதிதா.. அங்கே.. அந்த இடத்திலேயே.. ஆற்று நீரில் அமிழ்ந்தபடியே அவள் செல்போனில் மாயவனிடம் பேசினாள்...

"என்னங்கம்மா..?" அவன் ஆச்சரியமாகிப் போனான்..

"இல்லைங்கண்ணா.. இங்கே எங்க ஊருப் பக்கமா சொந்தத்திலே ஒரு பெண்ணிருக்கு.. தோதான மாப்பிள்ளையா தேடிக்கிட்டு இருக்காங்க.. எனக்கு உங்க ஊர் ஹீரோவைப் பத்தி நினைப்பு வந்தது.. சொல்ல-லாமான்னு நினைச்சேன்.. ஆனா.. அவருக்குக் மேரேஜாகி-யிருந்து நான் சொல்லிட்டா பிரச்னையாகிடாதா..? அதான்.. உங்களிடம் கேட்டுக்கலாம்ன்னு போன் பண்ணினேன்.."

நிவேதிதாவா இப்படிப் பேசுவது என்று ஆச்சரியப் பட்டுப் போனாள் சௌதாமினி..

இந்தக் காதல்தான் ஒருவரை எப்படியெல்லாம் மாற்றி விடுகிறது..?

# 10

நிவேதிதா அன்று முழுவதும் சந்தோசமாக இருந்தாள்.. அன்றைய இரவில்.. அவளுடைய மாமா வீட்டின் மொட்டை மாடியில் இரவு உணவுக்குப் பின்னால் சௌதாமினியுடன் காற்றாட பேசிக் கொண்டிருந்த போது தான் சௌதாமினி அந்தக் கேள்வியைக் கேட்டாள்..



"அந்த வாசுதேவனுக்கு கல்யாணமாகலைங்கிற-தெல்லாம் சரிதான்.. ஆனா.. அந்த ஆளு உன்னையே கல்யாணம் பண்ணிக்குவார்ன்னு என்னடி நிச்சயம்..?"

'அதானே..'

நிவேதிதாவின் உற்சாகம் நீர்க்குமிழியைப் போல வெடித்து மறைந்து விட்டது.. அவள் கலக்கத்துடன் கைவிரல் நகத்தைக் கடித்தாள்..

"நகத்தை எச்சில் பண்ணாதே.." சௌதாமினி அதட்டினாள்...

"அப்படிச் செய்தா மட்டும் அவன் தேடிவந்து என்னை மேரேஜ் பண்ணிக்கப் போகிறானா.. என்ன..?"

நிவேதிதா நியாயம் கேட்ட விதத்தில் சௌதாமினிக்கு சிரிப்புத்தான் வந்தது..

நிவேதிதா வாசுதேவனின் முகம் பார்த்ததில்லை.. அவனைப் பற்றி மாயவன் என்ற டிரைவர் சொன்னதை மட்டும் கேட்டு வாசுதேவனின் மீது மனதுக்குள் ஆசையை வளர்த்துக் கொண்டிருக்கிறாள்.. இது நிறைவேறச் சாத்தியக் கூறுகள் இல்லையே.. எப்படி நிவேதிதா வாசுதேவனின் மீதான அவளது காதலை அவனிடம் தெரிவிப்பாள்..?

இப்படியிப்படி.. உன்னைப் பற்றி எனது கல்லூரியின் பஸ் டிரைவரின் மூலம் கேள்விப்பட்டேன்.. உன்னை எனக்கு மிகவும் பிடித்து விட்டது.. நாம் இருவரும் காதலித்து திருமணம் பண்ணிக் கொள்ளலாமா இல்லை.. திருமணம் பண்ணிக் கொண்டு காதலிக்கலாமா..?

இப்படி அவளால் வாசுதேவனிடம் கேட்டு விட முடியுமா..?

ஆதலினால் நிவேதிதாவின் காதலுக்கு எந்தவித எதிர்காலமும் இருப்பதற்கான உத்திரவாதம் இல்லை யென்றே சௌதாமினி நினைத்தாள்.. நிவேதிதாவைப் போன்ற பெண்ணின் காதல் தோற்பதில் சௌதாமினிக்கு வருத்தம்தான் என்றாலும் அவளால் என்ன செய்து விட முடியும்..?

ஆனால் யாரும் எதுவும் செய்ய வேண்டிய அவசியமின்றி ஒருநாள் மாலையில் வாசுதேவன் குடும்பத்தோடு நிவேதிதாவைப் பெண் கேட்டு பெங்களூருக்கு வந்து விட்டான்...

அப்போது நிவேதிதா வீட்டில் இல்லை...அவளுடைய கல்லூரிக்கு சான்றிதழ்களை வாங்குவதற்காக சென்றிருந்தாள்.. மாளவிகா அப்போதுதான் கல்லூரியிலிருந்து திரும்பியிருந்தாள்.. நிரஞ்சன் அத்தி பூத்ததைப் போல அந்த வேளையில் அன்று வீட்டிலிருந்ததைக் கண்டதும் ஆச்சரியம் கொண்டவளாய்..

"என்னடா.. பெங்களூரில மழை கொட்டோ.. கொட்டுன்னு கொட்டட்டும்ன்னு நினைக்கறியா.. இந்த நேரத்தில வீட்டில இருக்க..?" என்று மகனிடம் கேட்டபடி உள்ளே வந்தாள்..

"டென்னிஸ் விளையாடத்தான் கிளம்பிக்கிட்டு இருந்தேன்.. எங்கே..? உங்க ஹஸ்பெண்ட் என்னைப் போக விட்டால் தானே..?" அவன் முகத்தைத் தூக்கிக் கொண்டான்...

மாளவிகாவின் அடுக்கடுக்கான கேள்விகளுக்கு பதில்கள் கிடைத்தன.. அவை சொல்லிய விவரங்கள் யாதென்றால்.. சுந்தரின் நண்பரின் மூலமாக.. பொன் வயல் கிராமத்திலிருக்கும் இளம் தொழிலதிபனான வாசுதேவனைப் பற்றிய விவரம் சுந்தருக்கு தெரிய வந்திருக்கிறது.. அவனுக்குப் பெண் தேடுவதாகவும்.. நிவேதிதாவைக் கொடுக்க விருப்பப் பட்டால் ஜாதகத்தைக் கொடுக்குமாறும் அந்த நண்பர் கேட்டிருக்கிறார்... பரம்பரை கோடீஸ்வரன்.. சுகர் மில் அதிபன்.. அக்ரியில் எம்.எஸ்.ஸி பட்டம் வாங்கியவன் போன்ற வாசுதேவனின் அடையாளங்களால் ஈர்க்கப்பட்ட சுந்தர் நிவேதிதாவின் ஜாதகத்தைத் தூக்கிக் கொடுத்திருக்கிறார்.. இப்போது ஜாதகம் பொருந்திவிருப்பதாகவும்.. வாசுதேவன் குடும்பத்துடன் பெங்களூருக்கு வந்து அன்று மாலையில் நிவேதிதாவை பெண் பார்க்க வரப்போவதாகவும் தகவல் வந்திருக்கிறது...

"எனக்குக் கையும் ஓடலை.. காலும் ஓடலை மாலு.. இந்தச் சமயம் பார்த்து இந்த நிவி எங்கே போய் தொலைஞ்சா..?"

"நிவேதா என்ன சொல்லுவாளோ..?"

"அது நீ சொல்கிற விதத்தில்தான் இருக்கு மாலு.."

மனதுக்குள் பயப்பந்து உருள.. மாளவிகா மாப்பிள்ளை வீட்டாரை வரவேற்கும் ஏற்பாடுகளில் ஈடுபட்டபடி மகளுக்காக காத்திருந்தாள்.. நிவேதிதாவும்.. பலகார வாசனையை மோப்பம் பிடித்தவளாய்..

"ஹை.. நெய்வாசனை தெரு முனைவரைக்கும் வருது.. என்ன மம்மி.. என்ன விசேசம்..?" என்று கேட்டபடி உள்ளே வந்தாள்..

"வந்துட்டியா நிவி..."

கைவேலையை கைவிட்டவளாக.. தாமரையிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு நிவேதிதாவிடம் வந்தாள் மாளவிகா..

"என்ன மம்மி..?" தாயின் பரபரப்பில் திகைத்து விழித்தாள் நிவேதிதா..

"இல்லடா.. உன்னை இப்ப பெண் பார்க்க வரப் போகிறாங்க..?" தயங்கியபடி விவரத்தை போட்டு உடைத்து விட்டாள் மாளவிகா..



"வாட்..?" நிவேதிதா பொங்கிவிட்டாள்..

யாரைக் கேட்டு இந்த ஏற்பாடு நடந்தது..? திருமணம் செய்து கொள்ளப் போவது அவளா.. இல்லை.. சுந்தரா..? அவள் யார் முன்பும் வந்து நிற்க மாட்டாள்.. சுந்தரும்.. மாளவிகாவும் ஆளைப் பார்த்துக் கொள்ளட்டும்.. அவர்கள் இருவரும் நிவேதிதாவை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்..? அவள் ஒரு மனுஷியென்ற நினைவு அவர்களுக்கு இல்லையா..? அவளுடைய திருமணத்திற்கு அவளுடைய சம்மதம் அவசியம் என்று ஏன் அவர்கள் நினைத்துப் பார்க்க வில்லை..? யார்.. யார் முன்னாலோ வந்து நிற்க அவளென்ன கொழு பொம்மையா..?

நிவேதிதா பொங்கிய பொங்கலில் மாளவிகா ஒருவழியாகி விட்டாள்.. பற்பல சமாதானங்களைச் சொல்லிக் கெஞ்சி.. அவள் இறைஞ்சிய பின்புதான் நிவேதிதா மலையிறங்கினாள்..

வரிசையாக வாசலில் கார்கள் வந்து நிற்பதாக நிரஞ்சன் வந்து செய்திகளை ஒலிபரப்பினான்..

"உண்மையிலேயே பெரிய இடம்தான் போல நிவி.." என்றான்...

"த்ச்சு.." அலட்சியமாக சூள் கொட்டினாள் நிவேதிதா..

அவளை மாளவிகா அழைத்ததும்.. யாரையும் நிமிர்ந்து பார்க்காமல் மாளவிகாவுடன் போனாள்..

"உட்காரும்மா.."

கனிவான குரலில் யதார்த்தமாக நிமிர்ந்தவள் வாசுதேவனைக் கண்டதும் சலனமில்லாமல் சாவித்திரியின் அருகில் அமர்ந்தாள்..

'தாத்தா.. பாட்டின்னு கூட்டுக்குடும்பமாத்தான் வந்திருக்கான்.. இருந்தும் என்ன பண்ண..? இவன் என் ஹீரோ இல்லையே...'

அசட்டையாக அமர்ந்திருந்தவள் உமாபதி மாயவனின் பெயரைச் சொன்னதும் விழியகல நிமிர்ந்து பார்த்தாள்..

"எங்க ஊருக்கார மாயவன் உங்க காலேஜிலதான் டிரைவரா வேலை பாக்கிறானாமே.. உனக்குத் தெரியுமாம்மா..?" உமாபதி அவளிடம் கேட்டார்..

தெரியும் என்ற தினுசில் தலையாட்டியவளுக்கு அப்போதும் அவர்கள் வாசுதேவனின் குடும்பமாக இருக்கக் கூடும் என்று தோன்றவில்லை..

'இவங்களுக்கு அவனைத் தெரிஞ்சிருக்குமா..?' என்று தான் நினைத்தாள்..

"எங்க வாசுதேவன்னா அவனுக்கு ரொம்ப இஷ்டம்மா.. அவனிடம் கேட்டுப் பாரேன்.. எங்க ஊரைப் பத்தியும்.. எங்களைப் பத்தியும் சொல்வான்.."

உமாபதி தொடர்ந்து பேசிய பேச்சுக்கள் எதுவும் அவள் காதுகளில் விழவில்லை...

எவனைக் கைபிடிக்க முடியுமா என்று அவள் கனவு கண்டு கொண்டிருந்தாளோ.. அவனே பெண் பார்க்க வந்து விட்டதில் அவள் பிரமித்து போயிருந்தாள்..

## 11

வாசுதேவன் தெளிவாக.. நிதானமாக காய் நகர்த்தியிருந்தான்... அவன் அவசரம் காட்டவில்லை.. ஒரு வருடம் அவன் கையில் இருந்தது.. நிவேதிதா படிப்பை முடிக்க தேவைப்பட்ட அந்த ஒரு வருடத்தில் இவன் பலமுறை பெங்களூருக்குப் போய் மாயவனைப் பார்த்து விட்டு வந்தான்..

இரண்டு மூன்று சந்திப்புகளுக்குப் பிறகு யதேச்சையாகப் பார்ப்பதைப் போல அவர்களைக் கடந்து போன நிவேதிதாவைப் பார்த்தவன்..

"அந்தப் பெண்ணைப் பார்த்தா நம்ம ஊரு வேதாச்சலத்தோட சித்தி மகளைப் போலத் தெரியுதில்ல.." என்று கேட்டான்..

மாயவனுக்கு வேதாச்சலத்தைத்தான் தெரியும்.. அவனது சித்தி மகளைப் பற்றி எதுவும் தெரியாது..அதைச் சொல்ல முடியாமல்..

"இது பேரு நிவேதிதாங்கய்யா.. நல்ல பொண்ணு.." என்று பொதுவாக சொல்லி வைத்தான்..

"ஓஹோ.." அசுவாஸ்யமாக கேட்டுக் கொண்ட வாசுதேவன் அடுத்து வந்த நாள்களில் நிவேதிதாவைப் பின்தொடர்ந்து அவள் வீட்டைக் கண்டு பிடித்தான்.. அதற்கடுத்து வந்த நாள்களில் அவளுடைய அப்பா சுந்தரின் ஜாதகத்தையே வரையறுத்திருந்தான்..

அதன்படி.. வாசுதேவனின் நண்பன் மூலம் சுந்தரின் நண்பரிடம் வாசுதேவனைப் பற்றிய விவரங்கள் சமர்ப்பிக்கப் பட்டன.. அவர் அதை சுந்தரிடம் சொல்லி நிவேதிதாவின் ஜாதகத்தைக் கைப்பற்றி திருமணப் பேச்சை ஆரம்பித்து வைத்தார்.. வாசுதேவன் அவனுடைய ஜாதகத்திற்கு ஏற்றதைப் போல நிவேதிதாவின் ஜாதகத்தை மாற்றத்தான் நினைத்தான்.. அதற்கான அவசியமின்றி நிவேதிதாவின் ஜாதகம் அவனுடைய ஜாதகத்தோடு பொருந்திப் போனது..

"எட்டுப் பொருத்தத்துக்கு மேலேயே இருக்கு.. இத்தனை பொருத்தத்தோட ஜாதகங்கள் அமைகிறது ரொம்பவும் அரிதுதான்.."



"அட... அதையெல்லாம் விட்டுத் தள்ளுப்பா.. பொண்ணு நம்ம இனமா..? அதைச் சொல்லு முதல்ல.." என்று கறாராக மீசையை முறுக்கினார் உமாபதி..

நிவேதிதா அவனுடைய இனமாக இருந்ததில் அவனுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது.. எப்படி இப்படி எட்டுப் பொருத்தத்துடன்.. அவனுடைய இனத்தைச் சேர்ந்தவளாக அவள் இருக்கிறாள் என்று அவன் வியந்து போனான்..

"அதைக் கேக்காம இருப்பேனா தாத்தா.. அதானே முக்கியம்.." வாசுதேவன் ஐஸ் வைக்க..

"உன்னையெல்லாம் நம்ப முடியாதுடா பேராண்டி.. நீ புதுசா புதுசா என்னென்னத்தையோ செய்றவன்.. இதிலயும் புரட்சிபண்ண மாட்டேன்னு என்ன நிச்சயம்..?" என்று கேட்டார் அவர்..

"என்ன அலுவலுக்கு இதில நான் புரட்சி பண்ணப் போறேன்..? என் பிரண்டு அந்தப் பெண்ணோட போட்டோவைக் காட்டினதும் எனக்கு பிடிச்சுத் தொலைச்சுப் போச்சு.. இனமும் நம்ம இனமா இருந்தாங்க.. ஜாதகமும் பொருந்தியிருக்கு.. இதுக்கு மேலே உங்களுக்கு என்ன வேணும்..?"

வாசுதேவன் முறுக்கிக் கொண்டான்.. பெண்ணை அவன் விரும்புகிறான் என்ற ஒரு காரணத்திற்காகவே உமாபதியும்.. கோபிநாதனும் கூட்டணி போட்டு தடையுத்தரவு பிறப்பிப்பதற்கான காரணங்களைத் தேட ஆரம்பிக்க.. அந்த ஒரு காரணத்திற்காகவே அவர்களின் அத்தனை தடையுத்தரவுகளையும் பொடிப் பொடியாக்கி பெங்களூருக்கு பெண் பார்க்கப் போவதற்கான நாளைக் குறித்தது அந்த வீட்டின் தாய்க்குலம்..

"தலைமுறை.. தலைமுறையா நம்ம பக்கத்து சொந்தத்திலேயே பெண்ணெடுத்திட்டு.. திடிர்ன்னு அன்னியத்தில பெண்ணெடுக்கனும்னா யோசனையா இருக்குப்பா.."

கோபிநாதன் உமாபதியைப் பார்த்தார்.. அவரின் கண் கூறிய சமிஞ்யைப் புரிந்து கொண்ட உமாபதி கிடைத்த வாய்ப்பைக் கெட்டியாக பிடித்துக் கொண்டார்..

"நானும் அதைத்தாண்டா நினைச்சேன்.. இந்தப் பக்கம் இல்லாத பொண்ணா பெங்களூரில பிறந்திருக்கு..? நம்ம தகுதி என்ன.. தரம் என்ன.. உயரம் என்ன.. அந்தஸ்து என்ன.."

எண்ணற்ற 'என்ன'க்களை அவர் அடுக்கிக் கொண்டே போக ஒரேயொரு 'என்ன..'வுடன் குறுக்கிட்டாள் பார்வதி..

"என்ன..?"

அவளின் அந்த ஒற்றை 'என்ன..?'வில் ஒளிந்திருந்த யுத்த முழக்கத்தில் உமாபதியின் ரயில் தொடராய் வந்த 'என்ன' நின்று விட்டது...

"அது வந்து பார்வதி.."

"எது வந்து..?"

"இல்லடி.."

"என்ன இல்லடி..?"

"பார்வதி.."

உமாவதி அழுது விடுபவரைப் போல ஆகிவிட்டார்.. அவர் எதை வேண்டுமானாலும் எதிர்கொள்வார்.. பார்வதியின் வார்த்தை வீச்சை மட்டும் அவரால் எதிர் கொள்ள முடிந்ததில்லை...

"நானும் பார்த்துக்கிட்டே இருக்கேன்.. என் பேரன் பேசறதுக்கு நீங்களும் உங்க மகனும் மறுத்துப் பேசிக் கிட்டே இருக்கீங்க.. உங்க மனசில என்ன நினைச்சுக்கிட்டு இருக்கிங்க..? கட்டிக்கப் போறது அவனா.. இல்லை நீங்களா..?"

"என்னடி பார்வதி இப்படிக் கேட்டுட்ட..?"

"அறியாப்புள்ள போல முகத்த வைச்சுக்காதீங்க.. யாரு நீங்க..?"

தான் யார் என்று உமாபதியே குழம்பி விட்டார்... அவர் ஒன்றைச் சொல்லப் போக.. பார்வதி வேறு ஒன்றைச் சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற முன்னெச்சரிக்கையுடன் எதற்கும் அவர் யாரென்பதை அவளே சொல்லட்டும் என்று முடிவை மனைவியின் கையில் விட்டு விட்டவராக பரிதாபமாக அவள் முகத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்.. அவளும் சொன்னாள்..

"அந்தக்காலத்தில அரசகுளத்துக்கு வண்டியைக் கட்டிக்கிட்டுப் போனவர்தானே நீங்க..?"

"அடியேய்..."

வீட்டில் மருமகளும்.. பேரன்.. பேத்திகளும் இருக்கிறார்கள் என்ற நினைவில் வாயை இறுக மூடிக் கொண்டு விட்டார் உமாபதி.. பார்வதி அதைச் செய்வதாக இல்லை.. அவள் உமாபதியை ஒருபிடி பிடித்து விட்டுத்தான் ஓய்ந்தாள்..

"உங்களைப் போல ஊருக்குக் காட்ட சொந்த பந்தத்திலே.. இனத்துக்குள்ளே பெண்டாட்டி.. வண்டி கட்டிக்கிட்டு போக அரச குளம்ன்னு வாழ்க்கை நடத்தறவன் என் பேரன்னு நினைச்சீங்களா..? அது உங்க புத்தி.. என் பேரன் புத்தியில்ல.. அவன் ஒன்னையே நினைச்சு.. அந்த ஒன்னிலேயே வாழற ரகம்.. அவன் ஆசைப்படற பொண்ணக் கட்டிக்க யாரை அவன் கேட்கனும்..? வீட்டில மகனும்.. மருமகளும் இருக்காங்களேன்னு பாக்கறேன்.. பேரன் பேத்திக மத்தியிலே உங்க வண்டவாளத்த தண்டவாளத்தில ஏத்தக் கூடாதுன்னு பாக்கறேன்.."



பார்க்கிறேன்.. பார்க்கிறேன் என்று சொல்லிக் கொண்டே அனைவரின் முன்னிலையிலும் நடக்காத பல நிகழ்வுகளை நடந்ததாகக்கூறி அவற்றை பலத்த ஆதாரத்தோடு குடும்பத்தினரின் முன்னிலையில் கொட்டிக் கவிழ்த்தாள் பார்வதி.. எதற்கு வாயைத் திறந்தோம் என்று தன்னைத்தானே நொந்து கொண்டார் உமாபதி...

'பேசாம வாயை மூடிக்கிட்டு இருந்திருக்கலாம்.. பேராண்டியே தாய்க்குலத்தோட பலத்த ஆதரவிலே இருக்கிறவன்.. எனக்கு இவன் பாட்டிகிட்டயே டெபாசிட் போயிருச்சு.. இந்த லட்சணத்தில இவன எதுத்து நின்னு என்ன பண்ண..?'

உமாபதி வெற்றிகரமாக பின்வாங்கி விட்டார்..

'இனிமே வாயைத் திறந்தீங்க.. நடக்கிறதே வேற..' என்ற எச்சரிக்கையை விழிகளில் பிரதிபலித்தவளாக பார்வதி மூச்சுவாங்க தண்ணீர்செம்பை எடுத்து தொண்டையில் சரித்துக் கொண்டாள்..

உமாபதியின் துணையில்லாமல் தனியொருவராக குடும்பத்தினரை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார் கோபிநாதன்..

"அதில பாருடா தேவா நம்ம ஊரோ கிராமம்.."

"அதுக்கு..?"

"அந்தப் பொண்ணு பெங்களூரில பொறந்து வளர்ந்திருக்குடா.."

"இப்ப நீங்க என்னதான் சொல்ல வர்றீங்க..?"

"நம்ம கிராமத்தில வாழ்க்கைப் பட்டு வர்ற பொண்ணு அடக்க.. ஒடுக்கமா.. நம்ம குடும்பத்துக்கு ஏத்தமாதிரி இருக்க வேணாமாடா..?"

"புரியலையே.."

வாசுதேவன் விடாமல் வாய் வளர்க்க.. சாவித்திரி ஊடே புகுந்தாள்..

"உனக்குப் புரியறதைப் போல நான் சொல்றேண்டா மகனே.."

"சொல்லும்மா.."

"இவரோட தொங்காச்சிப் பொண்ணு படிக்கிறேன்னு தூத்துக்குடி காலேஜ் ஆஸ்டலில் போய் இருந்துட்டு திரும்பி வந்தப்ப அரை டிரவுசரையும்.. பனியனையும் போட்டுக்கிட்டு வந்தாள்ல.. அது மாதிரி இருக்கக் கூடாதுன்னு சொல்றாருடா தேவா.."

"அப்படியாம்மா..?"

"அப்படியேதான்.. அப்புறம் இவரோட சொத்தப்பா பேத்தி வெளியூர்ல கல்யாணம் கட்டிக்கிட்டுப் போனவ.. தலைதீபாவளிக்கு வந்தப்ப.. குட்டைப் பாவாடையும்.. குட்டை முடியுமா வந்து சேர்ந்தாள்ல.. அதைப் போல இருக்கக் கூடாதுன்னு சொல்றாருடா தேவா.."

"ஓ..."

"அப்புறம் இவரோட ஒன்னுவிட்ட தங்கச்சியோட ரெண்டுங்கெட்டான் பொண்ணு ஒன்னு..

அவள் ஒரு தொடர்கதையாக சாவித்திரி நிறுத்தாமல் உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போக ஆரம்பிக்க.. கோபிநாதன் சங்கடமடைந்தார்.. அவள் சொன்னது அனைத்தும் உண்மை என்பது ஒரு பக்கமிருக்க.. அவள் உண்மை சொல்ல தேர்ந்தெடுத்த அனைத்து சொந்தங்களும் அவர் வழிச் சொந்தங்களாகவே இருந்தில் அவருக்கு பெருத்த தலைவேதனை ஏற்பட்டது..

"சாவித்திரி..."

"பொறுங்க.. நான் இன்னும் சொல்லி முடிக்கலையே.."

"சொன்ன வரைக்கும் போதும்டி.."

"எங்களுக்குப் போதாதே.. இங்கே பாருங்க.. என் மக வாயைப் பிளந்துக்கிட்டு எம்புட்டு ஆர்வமா கதை கேட்கிறான்னு.."

வாஸந்தி அப்படித்தான் இருந்தாள்.. சோபாவில் வாகாக சாய்ந்து கையை கன்னத்துக்குக் கொடுத்து படு சுவராஸ்யமாக பாட்டி சொன்ன கதைகளையும்.. தாய் சொன் கதைகளையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.. அதைப் பார்த்த கோபிநாதனின் தலைவேதனை கூடியது..

"இம்புட்டு ஆசையா எம்பொண்ணு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கிறப்ப நான் கதையை பாதியிலேயே நிறுத்தினா நல்லாயிருக்குமா..?"

சாவித்திரி இந்தக் கேள்வியை பார்வதியைப் பார்த்து கேட்டு வைக்க.. அவள் தலையாட்டி..

"நல்லாவே இருக்காது.." என்று அபிப்ராயம் சொன்னாள்..

'இதுக கூட்டணி போடுதுகளா..?' கோபிநாதன் பல்லைக் கடித்தார்...

அது எப்படித்தான்.. அவரும் உமாபதியும் சேர்ந்து போடும் கூட்டணி ஒவ்வொரு முறையும் தோல்வியைத் தழுவுகிறதோ என்றிருந்தது அவருக்கு..

தகப்பனும் மகனும் போடும் கூட்டணியை விட பலமான கூட்டணியாக மாமியார் மருமகளின் கூட்டணி அமைந்து விட்டதில் அவர் வாய் மூடி இருக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்..

"எனக்கு வெளியே வேலை இருக்கு சாவித்திரி.."

"கதையை அம்போன்னு பாதியிலேயே விட்டுட்டுப் போறிங்களே..."

"ஊர்க் கதையெல்லாம் நமக்கு எதுக்குடி..?"

"அப்ப.. நம்ம வீட்டுக் கதையைப் பேசலாமா..?"



"பேச என்ன இருக்கு..? வர்ற வெள்ளிக்கிழமை.. நாள் நல்லா இருக்கு.. நாம குடும்பத்தோட பெங்களூர் போய் பொண்ணைப் பார்த்து கல்யாணத்துக்கு தேதி குறிச்சிட்டு வந்திரலாம்..."

"என்னமோ பெங்களூர் பொண்ணு நம்ம குடும்பத்துக்கு எத்த மாதிரி அடக்க ஒடுக்கமா இருக்குமான்னு கேள்வி கேட்டிங்களே..."

"ஊரில என்னடி இருக்கு..? எங்கே பொறந்து வளர்ந்தாலும் அததுக இருக்கிறபடிதான் இருக்குதுக.. அதனால நாம எதையும் யோசிக்காம பெண்ணைப் பார்க்கக் கிளம்பலாம்..."

"நாங்க எதையும் யோசிக்கலை.. யோசிக்கிறதெல்லாம் நீங்களும்.. உங்க அப்பாவும்தான்.."

பேச்சுவாக்கில் மாமனாரை சாடிய சாவித்திரி முறைத்த முறைப்பில் அன்று மதியம் விரால் மீன் குழம்பும்.. வறுவலும் அவருக்குக் கிடைக்குமா கிடைக்காதா என்ற பலத்த கவலைக்கு ஆளானார் உமாபதி..

'யோசிக்காம வாய் விட்டுட்டேனே...'

மீண்டும்.. மீண்டும் நொந்து போனார் அவர்...

இப்படியாகத்தானே உமாபதியும்.. கோபிநாதனும் போட்ட கூட்டணி பலத்த தோல்வியைத் தழுவியது.. தாய்க் குலத்தின் ஒட்டு மொத்த ஆதரவோடு.. வாசுதேவன் வெற்றிவாகை சூடினான்.. அந்த வார வெள்ளிக்கிழமையன்று அதிகாலையில் அவர்கள் பெங்களூருக்குப் போய் இறங்கி விட்டார்கள்..

வாசுதேவன் அவர்கள் குடும்பத்திற்காக நட்சத்திர ஹோட்டலில் ரூம் போட்டிருந்தான்.. அதன் அழகில் சொக்கிய உமாபதி..

"சம்பாதிக்கத் தெரிஞ்சா மட்டும் போதுமாடா..? அதை அனுபவிக்கவும் தெரியணும்.. ஆயிரம்தான் சொல்லு.. இந்த விசயத்தில உன் மகனை அடிச்சுக்க முடியாது.."என்று கோபிநாதனிடம் சொன்னார்..

"அவனை எந்த விசயத்திலயும் அடிச்சுக்க முடியாது.." கடுப்புடன் பதில் சொன்னார் கோபிநாதன்..

"அதைச்சொல்லு.." உமாபதி பெருமூச்சு விட்டார்..

அன்று காலை முதல் மதியம் வரை குடும்பத்தினருக்கு பெங்களூரைச் சுற்றிக்காட்டினான் வாசுதேவன்.. புதிதாக ஒரு ஊரைச் சுற்றிப் பார்க்கும் ஆனந்தம் வீட்டுப் பெண்களின் முகத்தில் தெரிந்தது..

"இவன் இப்படித்தான்டா நம்ம வீட்டு பெண்குலத்த கைக்குள்ள போட்டு வைச்சிருக்கிறான்.." உமாபதி பொருமினார்...

"இந்த டெக்னிக்கெல்லாம் நமக்குத் தெரியாமப் போச்சே.." கோபிநாதன் அங்கலாய்த்தார்..

"எப்படித்தெரியும்.. உனக்கும் எனக்கும் நம்ம ஊரைச் சுத்தியாதனும்.. வீட்டுப் பொம்பளைகளைப் பத்தி என்னைக்கு நாம நினைச்சுப் பார்த்திருக்கோம்..? உன் மகன் கெட்டிக்காரன்.. அவங்க மனசைப் புரிஞ்சு வைச்சிருக்கான்.. ஜெயிச்சுக்கிட்டு இருக்கான்.." என்றார் கோபிநாதன்..

அன்று மாலையில் சுந்தரின் வீட்டுக்கு நிவேதிதாவைப் பெண் பார்க்க அவர்கள் போனார்கள்.. அழகாக வந்து அமர்ந்த நிவேதிதாவைக் கண்டதும் மற்றவர்களின் முகத்தில் திருப்தி பரவியது.. வாசுதேவனின் மனதில் வன்மம் பரவியது..

'இதுக்குத்தான்டி நான் காத்திருந்தேன்.. எந்த கிராமத்தை நீ பிடிக்காதுன்னு சொன்னியோ.. அந்த கிராமத்துக்கு நீ வாழ்க்கைப் பட்டு வாழணும்.. எந்தக் கூட்டுக்குடும்பத்தை நீ வெறுத்தியோ.. அந்தக் கூட்டுக் குடும்பத்திலே மருமகளா நீ வாழணும்.. எந்த உழவர் மகனை நீ இன்சல்ட் பண்ணினியோ.. அந்த உழவர் மகனுக்கு நீ கழுத்தை நீட்டி பொண்டாட்டியாகணும்.. பகை முடிக்க பிறந்தவன்டி இந்த வாசுதேவன்..'

வாசுதேவனின் கண்களில் கனல் பரவியது..

## 12

திருமண நாள் நெருங்க.. நெருங்க.. நிவேதிதாவுக்கு படபடப்பாக இருந்தது.. சௌதாமினிக்கு போன் போட்டு மணிக்கணக்காய் பேசினாள்...

"அவர் என்னைப் புரிஞ்சுக்குவாராடி..?"

"புரிஞ்சா என்ன.. புரியாட்டி என்ன..? அதான் கல்யாணம் நடக்கப் போகுதில்ல.. அப்புறம் என்ன..?"

"என்னை அவருக்குப் பிடிக்குமாடி..?"

"பிடிக்காமலா பொண்ணு கேட்டு வந்திருக்காரு..? அதிலபாரு நிவி.. நீதான் அந்த ஆளைப் பார்க்காமலே காதலிச்சேன்னா.. அவரு எப்படி உன் போட்டோவைப் பார்த்ததும் கட்டினா இந்தப் பொண்ணைத்தான் கட்டுவேன்.. இல்லேன்னா காவி வேட்டியக் கட்டிக்கிட்டு சன்யாசம் போவேன்னு சொன்னாரு..?"



"அதான் தெரியலைடி.."

"என்னவோ போ.. காணாத காதலெல்லாம் நிறைவேறிக்கிட்டு இருக்கு.. இங்க பக்கத்தில பக்கத்தில நிக்கிறகாதல் படுத்துக்கிட்டு எழுந்திருப்பேனான்னு மல்லுக்கட்டுது.."

திருநெல்வேலியில் அவர்களுக்காக காத்திருந்த பங்களாவில் போய் இறங்கிய போது சௌதாமினி அதன் அழகைப் புகழ்ந்து பேசினாள்.. மாப்பிள்ளை வீட்டாரின் ஆடம்பரமான கவனிப்பில் சுந்தரின் உச்சந்தலையில் ஐஸ்மலை ஏறி அமர்ந்தது.. மறுநாள் பெண்ணழைப்பு நடந்தது.. திருமண மண்டபத்திற்கு மணப்பெண்ணாக ஜொலித்த நிவேதிதா நடப்பதை நம்ப முடியாமல் கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்...

"வாராயென் தோழி வாராயோ..
மணப்பந்தல் காண வாராயோ.."

ஒலிபெருக்கியின் பாடல் அவளை வரவேற்க.. திருமண மண்டபத்தில் அடியெடுத்து வைத்தாள் நிவேதிதா.. அன்றைய நலங்கு சம்பிரதாயம் முடிந்து தூங்கப் போன போது விடிந்தால் திருமணம் என்ற நினைவில் அவளுக்குத் தூக்கம் வரவில்லை..

"நிவி.. எழுந்திரு.. இப்பக்குளிக்கப் போனாத்தான் நீ தயாராக முடியும்.." சௌதாமினி அவளை உலுக்கி எழுப்பினாள்..

உடனே அவள் எழுந்து விட்டாள்.. மணப்பெண்ணாக வாசுதேவனின் அருகே அமர்ந்து அவன்கட்டிய தாலியைக் கழுத்தில் வாங்கிக் கொண்டவளின் மனம் இனித்தது.. கண்கள் பனித்தன.. யாருக்குக் கிடைக்கும் இப்படிப்பட்ட மனம் போன்ற மணவாழ்வு என்று பூரித்துப் போனாள் நிவேதிதா...

புதுமணத்தம்பதிகளை பொன்வயல் கிராமத்திலிருக்கும் வாசுதேவனின் வீட்டிற்கு அழைத்துப் போனார்கள்.. குலதெய்வம் கோவிலுக்குப் போய் வணங்கி விட்டு வீட்டுக்குள் நுழைந்தவர்களை ஆரத்தி எடுத்து வரவேற்றாள் சாவித்திரி.. அன்றைய இரவு முதலிரவு என்று சௌதாமினி நிவேதிதாவிடம் கிசுகிசுத்தாள்.. அலங்காரத்தை முடித்து தனியறைக்கு நிவேதிதாவை அழைத்துச் சென்று அவள் விட்டபோது நிவேதிதா நடுங்கினாள்..

"எனக்குப் பயமாய் இருக்கு சௌதா..."

## 13

"பயமா..? எதுக்கு பயம்..?" கலகலத்து சிரித்தாள் சௌதாமினி..

"எய்ய்.. சத்தம் போட்டு ஊரைக் கூட்டாதேடி.." நிவேதிதா வெட்கத்துடன் சௌதாமினியின் வாயைப் பொத்தினாள்..

"இந்தக காது குத்தற வேலையையெல்லாம் என்னிடம் வைச்சுக்காதே.. உன் ஆள் மேல நீ எந்த அளவுக்கு கண் வைச்சிருந்தேன்னு எனக்குத் தெரியாதா..? எப்படா அவருக்குக் கழுத்தை நீட்டலாம்ன்னு காத்துக் கிடந்த ஆள்தானே நீ..?"

"ஆமாமா.. நான் காத்துக் கிடந்தேன்.. நீ என் மனசுக்குள்ள நுழைஞ்சு பார்த்த.."

"அந்தத் தைரியம்தாண்டி நிறையப் பேரைக் காப்பாத்திக்கிட்டு இருக்குது.." கண்சிமிட்டினாள் சௌதாமினி..

"உன்னையும் சேர்த்துன்னு சொல்லு.." என்றாள் நிவேதிதா..

"இல்லையா பின்னே.." என்று மீண்டும் கண்சிமிட்டிய சௌதாமினியின் கையில் பலமாக கிள்ளினாள் நிவேதிதா..

"அடச்சீ... எதுக்கெடுத்தாலும் கண்ணடிக்காதே.."

"அதுசரி.. இப்படியாப்பட்ட நேரத்திலே நான் கண்ணடிச்சா தோதுப் படுமா..?"

"வேற யார் கண்ணடிச்சா தோதுப் படுமாம்...?"

சௌதாமினியின் கண்சிமிட்டலில் எப்படி இவள் இப்படியெல்லாம் பேசுகிறாள் என்ற வியப்பு நிவேதி தாவுக்குள் ஏற்பட்டது..

அவளும்தான் மனதுக்குள் வாசுதேவனை மாய்ந்து மாய்ந்துக் காதலிக்கிறாள்.. ஆனால் இதைப் போல பேச அவளுக்கு வரவில்லையே..

சௌதாமினியிடம் அதைச்சொல்லியபோது..

"எல்லாம் வரும்.." என்று அதற்கும் அவள் கண்சிமிட்டி வைத்தாள்..

"ஒரு ராத்திரிதான்.. விடியறப்ப நீ.. நீயாய் இருக்க மாட்ட.."

தொடர்ந்த அவளின் கண்சிமிட்டலில் நிவேதிதாவின் மனதில் வெட்கப்பூ மலர்ந்தது.. அவள் முகம் சிவக்க...

"ச்சீ.." என்றாள்..

"எய்ய்.. இப்படிச் சொல்கிறவளுகதான் கழுத்தில தாலி விழுந்த பத்தாம் மாசமே குழந்தையைப் பெத்து மடியில போட்டுக்குவாங்க.. எத்தனை பேரைப் பார்த்திருக்கேன்...?"



"அதுக்கு பொண்ணுக மட்டும்தான் காரணமா..?" தன்னையறியாமல் நிவேதிதா சொல்லிவிட..

"எய்ய்ய்.." என்று ஆச்சரியமானாள் சௌதாமினி..

"நீ ஒன்றும் தெரியாதவளா..? உலகத்தையே வித்திருவடி.." என்று சொல்லி விட்டு அவளைத் தனியாத அறைக்குள் தள்ளி விட்டுப் போய் விட்டாள்..

அறையின் மூலையில் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.. ஏஸி அறையில் குத்துவிளக்கு எதற்காக வந்தது என்று தெரியாமல் திகைத்தாள் நிவேதிதா..

அவளைக் கொன்று தின்ற இன்ப உணர்வுகளின் எதிர்பார்ப்பைத் தாங்க முடியாமல் அவள் மேனி நடுங்கியது.. கட்டிலின் பக்கத்திலிருந்த டிவியை உயிர்ப்பித்தாள்.. அதில்..

**"நெஞ்சினிலே.. நெஞ்சினிலே..**
**ஊஞ்சலே.."**

என்று படகுக்குள் ஒரு பெண் ஆடிக் கொண்டிருந்தாள்..

நிவேதிதாவின் மன ஊஞ்சல் ஆடத் தொடங்கியது.. அவள் கட்டிலில் சாய்ந்து அமர்ந்து அந்தப் பாடலில் தன்னை மூழ்கடித்துக் கொண்டாள்..

அவள் கழுத்தில் அன்று காலையில் ஏறியிருந்த மஞ்சள் கயிறினாலான தாலிச்சரடு அவள் மார்பில் தவழ்ந்து அவள் திருமணமாகி விட்டவள் என்ற செய்தியை அறிவுறுத்திக் கொண்டிருந்தது.. ஆசையுடன் அதைத் தொட்டுப் பார்த்துக் கொண்டவளின் கண்களில் நாணம் தவழ்ந்தது..

**"நெஞ்சினிலே.. நெஞ்சினிலே..**
**ஊஞ்சலே..**
**நாணங்கள் என் கண்ணிலே..**
**சிவந்ததே என் மஞ்சளே..**
**கல்யாணக் கல்யாணக் கனவு**
**என்னுள்ளே..**
**நெஞ்சினிலே.. நெஞ்சினிலே..."**

அவள் மனதில் பூங்கட்டிலைப் போல பூ ஊஞ்சல் தோன்றியது.. அதில் அவள் அமர்ந்து ஊஞ்சலாடுகிறாள்.. தென்றல் வீசிக் கொண்டிருக்கிறது.. வானில் முழுநிலவு.. பவனிவந்து கொண்டிருக்கிறது.. அவள் பின்னால் வந்து நிற்கும் வாசுதேவனின் கைகள் அவள் தோளைத் தழுவி இறங்குகின்றன..

ஊஞ்சலாட்டம் நின்று விடுகின்றது.. கிறங்கிப் போய் அவன்மீது சரிந்தவளை மடியில் சரித்துக் கொண்டு அவன் ஊஞ்சலில் அமர்கிறான்.. அவன்

கைகள் அவன் உடலின் மீது பிரவேசிக்கத் தொடங்குகிறது.. உணர்ந்து போனவளின் உணர்வுகள் பேரலையாய் எழுந்து அவளை மூழ்கடித்து இழுத்துச் செல்கின்றன..

“ஓரப் பார்வை வீசுவான்..
உயிரின் கயிறுகள் அவிழுமே..
செவ்விதழ் வருடும்போது..
தேகத்தங்கம் உருகுமே..
உலகின் ஓசை அடங்கும்போது..
உயிரின் ஓசை தொடங்குமே..
வானிலா நாணுமே..
முகிலிழுத்துக் கண் மூடுமே..
நெஞ்சினிலே.. நெஞ்சினிலே..”

கண்மூடிக் கட்டிலில் சரிந்திருந்தவள் கனவின் வேகத்தில் சரிந்து விட்டாள்.. அவள் நெற்றியின் வகிட்டில் தீட்டப்பட்டிருந்த குங்குமம் தலையணையில் தீற்றியிருந்ததில் அவள் முகம் சிவந்தது.. இதைப் போல அவன்மீதும் குங்குமம் தீற்றிக் கொள்ளுமோ என்ற நினைவில் அவள் மோகக் கடலில் மூழ்க ஆரம்பித்தாள்..

“குங்குமம் ஏன் சூடினேன்..?
கோல முத்தத்தில் கலையத்தான்..
கூறைப்பட்டு ஏன் உடுத்தினேன்..?
கூடல் பொழுதில் கசங்கத்தான்..
மங்கை கூந்தல் மலர்கள் எதற்கு..?
கட்டில் மேலே நசுங்கத்தான்..
தீபங்கள் அணைப்பதே.. புதிய பொருளை..
நாம் தேடத்தான்..”

பாடலின் உண்டான கிளர்ச்சியில் அவள் தளிர் விரல்கள் நடுங்கத் தொடங்கின.. அறைக்கு வெளியே அவனது காலடியோசை கேட்பதைப் போல தோன்றியதில் அவள் டிவியை அவசரமாக அணைத்து விட்டாள்..




துளைக்கும் பார்வையுடன் அறைக்குள் வந்த வாசுதேவனை அவள் நிமிர்ந்து பார்க்கவில்லை.. கை விரல் நகங்களை ஆராய்வதைப் போல இமைகள் சிறகடிக்க தலை கவிழ்ந்தபடியே அமர்ந்திருந்தாள்.. அவன் அவளை நெருங்கினான்.. எதிர்பார்ப்பில் அவள் உடல் நடுங்கியது.. அவளுக்குள் விளைந்த இன்பப்



பரபரப்பில் அவள் உடல் நடுங்கியது.. அவள் உயிர் துடித்தது.. சற்று முன் கேட்ட பாடலில் ஒலித்தவை நிஜத்தில் நடந்துவிடும் அந்த நொடிகளுக்காக அவள் தவித்தாள்...

‘வா என் கணவனே..! நான் உனக்காகவே படைக்கப் பட்டவள்.. இதுநாள்வரை நான் காத்திருந்தது உனக்காகத்தான் என்பதை நான் உணர்கிறேன்.. அதை நீ உணர்கிறாயா..? இந்த உடலும்.. மனமும்.. உன்னுடையவை.. இனி இவை எனதில்லை.. உன் கையணைப்பில் அடங்குவதே எனது வாழ்வின் நிறைவு.. உன் காலடியில் என் காலடியைப் பதித்து வாழ்வுப் பாதையில் உன்னைப் பின்தொடர்வதே எனது சொர்க்கம்..’

நிவேதிதாவின் மனது சொல்லிய வார்த்தைகளை அவனது மனது அறிய வேண்டுமே என்ற தவிப்புடன் அவள் நிலம் பார்த்தபடியே இருந்தாள்.. அவளருகில் அவன் நெருங்கி விட்டதை.. அவள் பார்வை பதிந்திருந்த தரையில் அவனது பட்டுக் கரையிட்ட வேட்டியின் வருடலுடன் வந்து நின்ற அவனது பாதங்கள் சொல்லின..

‘நெஞ்சே.. நெஞ்சே..
நீ எங்கே.. நானும் அங்கே..
என் வாழ்வும் அங்கே..
அன்பே.. அன்பே..
நானெங்கே..? தேகம் எங்கே..
என் ஜீவன் அங்கே..’

அவள் மனதுக்குள் பாடல் ஒலித்தது.. அவள் தளிர் விரல்களை அவன் பிடிக்கப் போகும் அந்த நொடிகளுக்காக அவள் காத்திருந்தாள்..

இதோ தொடப் போகிறான்.. இதோ.. இன்னும் சில நொடிகள்தான் அவளைத் தொட்டு விடுவான் என்ற எதிர்பார்ப்பின் பரபரப்பு அவள் அடி வயிற்றை இம்சை செய்ய அவள் காத்திருந்த போது.. அவன் பாதங்கள் அவள் பார்வையை விட்டு நிதானமாக விலகின.. அவள் கேள்வியுடன் நிமிர்ந்து பார்த்தபோது அவன் அந்த அறையிலிருந்த சோபாவில் கால்மேல் கால் போட்டு கம்பீரமான தோரணையுடன் அமர்ந்திருந்தான்..

‘ஏன் அங்கே போய் உட்கார்ந்துட்டார்..?’

நிவேதிதா ஏமாற்றமாக உணர்ந்தாள்.. சற்று முன் வரை அவள் உடலில் பொங்கிக் கொண்டிருந்த உணர்வலைகள் சமனப்பட மாட்டேனென்று அடம் பிடித்தன.. அவள் பார்வையை உணர்ந்து கொண்டவனின் இதழ்கள் இகழ்ச்சியாக மடிந்து வளைந்ததில் அவள் திகிலடைந்தாள்...

‘ஏன் இப்படிப் பார்க்கிறார்..?’

எதிரியைப் பார்ப்பதைப் போல அவளைப் பார்த்து வைத்தவனின் பார்வையில் நடுங்கியது அவளின் நெஞ்சம்..

“என்ன.. பார்க்கிற..?”

அவளது பயத்தை மெய்ப்பிப்பதைப் போல இகழ்ச்சியைக் குறைத்துக் கொள்ளாமல் கேட்டான் வாசுதேவன்..

நிவேதிதா துணுக்குற்றாள்.. அவளின் உணர்வுகள் சமனப்பட்டன.. ஏதோ ஒரு வித்தியாசத்தை அவனது முகத்திலும் குரலிலும் உணர்ந்தவள் அது என்னவென்று அறியாத பேதையாக அவன் முகம் பார்த்தாள்..

அந்தப் பார்வையைச் சந்தித்த வாசுதேவனுக்கு என்னவோ போல இருந்தது.. அடிபட்ட சிறுமி.. எதற்காக அடிபட்டோமென்று புரியாமல் பார்ப்பதைப் போல இருந்தது அவளின் பார்வை...

அவன் அவளைச் சந்தித்த முதல் சந்திப்பில் அவளிடம் இருந்ததாக அவன் நினைத்த அகங்காரத்தின் சாயல் துளிக்கூட இல்லாதவளாக நிர்மலமான முகத்துடன் மலங்க.. மலங்க விழித்தவளைப் பார்த்து..

‘என்னடா இது..’ என்று அவன் மண்டை காய்ந்து போனான்...

“பார்வையெல்லாம் நல்லாத்தான் இருக்கு.. உன் திமிரைக் காட்டாத பார்வை.. உன் ஆணவத்தையும்.. அகங்காரத்தையும் காட்டாத பார்வை..” அவன் பல்லைக் கடித்தான்...

“திமிரா..? எனக்கா..?” நிவேதிதா குழம்பிப் போனாள்

“ஏன் இப்படிச் சொல்கிறிங்க..?” அவனிடமே காரணம் கேட்டாள்..

“ஏன்னா.. எனக்கு அப்படியொரு வேண்டுதல் இருக்கு..” அவன் இடக்காக பதில் சொன்னான்..

“நீங்க மனசுக்குள்ளே எதையோ வைத்துக்கிட்டுப் பேசறதைப் போல இருக்கு..” குரல் நடுங்கச் சொன்னாள் நிவேதிதா..

“கெட்டிக்காரிதான்.. கண்டு பிடிச்சிட்டயே..” வெறுப்புடன் சிரித்தான் அவன்..

அவன் சிரிப்பில் தெரிந்த வெறுப்பில் அவள் உறைந்து போனாள்.. இந்த அளவுக்கு அவளை அவன் வெறுக்கக் காரணம் என்ன..?

‘ஒருவேளை..?’

அவள் மனதில் எழுந்த கேள்வியில் அவள் அதிர்ந்து போனாள்...

‘அப்படியும் இருக்குமோ..’

அவன் முகத்தில் வழிந்த வெறுப்பில் அவள் சந்தேகம் ஊர்ஜிதமானது..



நிவேதிதா கட்டெரிக்கும் விழிகளுடன் அவனை முறைத்தாள்..

“உங்க மனசுக்குள்ளே வேறொருத்தி இருந்தா எதுக்காக என்னைப் பெண் கேட்டு வந்தீங்க..? இந்த நிவேதாவை யாருன்னு நினைச்சிங்க..?” சீறினாள்...

“பொறு... பொறு... என் மனசுக்குள்ளே இன்னொருத்தியா..? இது என்ன புதுக் கதையாய் இருக்கு..?” அவன் வியப்புடன் புருவங்களை உயர்த்தினான்..

‘அப்படியில்லையா..?’

நிவேதிதாவின் மனதில் ஜஸின் சில்லிப்பு பரவியது.. அவள் முகத்தில் மீண்டும் ஆனந்தம் பரவியதை அவன் கடுப்புடன் பார்த்தான்...

“ரொம்பத்தான் சந்தோசப் பட்டுக்காதே.. என் மனசில இன்னொருத்தி இல்லைன்னுதான் நான் சொன்னேன்.. அதுக்காக நீ இருக்கிறேன்னு நான் சொல்லலை.. அதானல வீண் கனவு காண்கிற வேலையை விட்டுரு..”

‘வீண் கனவா..?’

நிவேதிதா சஞ்சலம் கொண்டாள்.. குங்குமம் தீற்றியிருந்த தலையணை அவள் கண்ட கனவைச் சொல்லியதில் அவள் மனம் நலிந்தது..

“எதுக்காக உன்னைப் பெண் கேட்டு வந்தேன் தெரியுமா..? நீ இப்பச் சொன்னியே.. இந்த நிவேதாவை யாருன்னு நினைச்சிங்கன்னு.. அதைப் போலதாண்டி.. இந்த வாசுதேவன் யாருன்னு உனக்குக் காட்டத்தான் உன்னைப் பெண் கேட்டு வந்தேன்.. உன் கழுத்தில தாலியையும் கட்டினேன்.. மத்தபடி உனக்கும் எனக்கும் நடுவில எதுவும் இல்லைடி.. இந்தக் கல்யாணம் உன் திமிரை அடக்க நான் பயன் படுத்திய ஆயுதம் மட்டும் தான்.. புரிஞ்சுதா..?”

அவன் அதட்டியதில் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. எதற்காக அவளை அப்படி அதட்டுகிறான் என்ற விவரம் புரியாமல் அவள் திகைத்தாள்.. அவள் பார்வையில் எதைக் கண்டானோ வாசுதேவன் கோபாவேசமானான்..

## 15

“இப்படி மொச்சைக் கொட்டைக் கண்ணை முழிச்சுப் பார்த்திட்டா நீ நடிக்கலை.. ஒன்றும் அறியாத சின்னப் பப்பான்னு நான் நம்பிடுவேனா...?”

“அப்ப.. நீ உண்மையைச் சொல்ல மாட்ட..?”

“எந்த உண்மையைச் சொல்லச் சொல்றீங்க..?”

“ஒரு வருசத்துக்கு முன்னாலே.. மணி முத்தாறு அருவிக்கு நீ டூர் வந்தியே.. அப்ப நடந்த உண்மையை..”

நிவேதிதாவின் கண்கள் பிரகாசித்தன.. அன்று தானே அவனைப் பற்றியும் அவனுடைய குணத்தைப் பற்றியும் அவள் முதன் முதலாக மாயவனின்

வார்த்தைகளின் மூலம் அவனைப் பற்றி அறிந்தாள்.. அதையா அவன் சொல்கிறான்..? அவனை அவள் பார்க்கவில்லை.. அவளை அவன் பார்த்திருந்தானா..?

"உங்களுக்கு நினைவிருக்கா..?" ஆவலுடன் அவள் கேட்டாள்..

"நன்றாக நினைவிருக்கிறது.. தெரியாமல் மேலே மோதி விட்டவனைப் பார்த்து 'ந்ச்சு'ன்னு முகம் சுளிச்சியே.. அது நினைவிருக்கு.. 'இதுக்குன்னே வர்றாங்க'ன்னு சொன்னியே.. அதுவும் நினைவிருக்கு.. 'என்னது.. உன்மேல மோதன்னே வர்றேன்னா'ன்னு நான் கேட்டதுக்கு.. என் முகத்தைக் கூடப் பார்க்காம 'பின்னே.. வேற எதுக்கு வர்றீங்க.. எங்களை பேட்டியெடுக்கவா வர்றீங்க'ன்னு திமிரா கேட்டுட்டு அருவியில குளிக்கப் போயிட்டியே அதுகூட நினைவில் இருக்குடி.."

"என் மேல யாரோ மோதினாங்க.. அனிச்சையா நான் விலகி ஏதோ திட்டிட்டேன்.. இதைப் போய் இவ்வளவு பெரிசா நீங்க எடுத்துக்குவீங்களா..?"

"எனக்கு இது பெரிசுதாண்டி.. நீ அதை மட்டுமா பேசின..? கிராமத்தை மட்டமா பேசின... 'ச்சீ'ன்னு சொன்ன... கூட்டுக் குடும்பத்தில வாழ்க்கைப் பட மாட்டேன்ன... விவசாயக் குடும்பம்ன்னா பிடிக்காதுன்னு சொன்ன.. ச்சீ.. கிராமத்துப் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்க மாட்டேன்னு சொன்னது யாருடி..? நீதானே.."

"ஏங்க.. புரியாம பேசாதீங்க..."

"உன்னைப் புரிஞ்சுக்கிட்டு.. உன் குணத்தைத் தெரிஞ்சுக்கிட்டுத் தாண்டி பேசறேன்.. நீ பெரிய சாப்ட்வேர் என்ஜினியர்.. உனக்கு உன் அப்பா அமெரிக்கா மாப்பிள்ளையைப் பார்த்து வைப்பாரு.. பெங்களூரில் பிறந்து வளர்ந்தவ கிராமத்துப் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்ட.. நீ.. உன் ஹஸ்பெண்டுன்னு வாழற வாழ்க்கையைத்தான் உனக்குப் பிடிக்கும்.. நீ ஃப்ரீ பேர்டு.. தாத்தா.. பாட்டி.. மாமா.. அத்தை.. நாத்தனார்ன்னு கூட்டுக் குடும்பத்தில மாட்ட நீ முட்டாளில்லை.. இத்தனையும் நான் சொன்னதில்லை.. சாட்சாத் நீதான் சொன்ன.. என்னைத்தான் உனக்கு நினைவில் இல்ல.. நீ பேசின இந்த வார்த்தைளுமா நினைவில் இல்ல..?"

அவளுக்கு சுத்தமாக நினைவில் இல்லை.. அதைச் சொன்னால் அவன் கேட்டுக் கொள்ளவா போகிறான் என்ற ஆற்றாமையுடன் அவள் பெருமூச்சு விட்டாள்..

"ஆமாம்.. நீதான் பெங்களூரில் பிறந்து வளர்ந்த சாப்ட்வேர் இன்ஜினியராச்சே.. அமெரிக்கா மாப்பிள்ளையைக் கட்டிக்காம ஏண்டி இந்த பட்டிக்காட்டு உழவர் மகனுக்கு வாழ்க்கைப் பட்ட..?" அவன் நிதானமாக கேட்டான்..



'ஏன்னா.. எனக்கு இந்த உழவர் மகனைத்தான் பிடிக்கும்டா..' அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது..

"ஏன்னு நான் சொல்லவா..?"

நிச்சயமாக அவன் எதையோ வில்லங்கமாகத்தான் சொல்லி வைக்கப் போகிறான் என்பதை அவள் மனம் உணர்ந்தது.. அவனும் அதைத்தான் செய்தான்..

"ஏன்னா.. இந்த உழவர் மகன் பணக்காரன்.. அக்ரியில எம்.எஸ்.ஸி பட்டம் வாங்கினவன்.. சொந்தமா சுகர் மில்லை நடத்தறவன்.. இப்ப உனக்கு இந்த.. உழவர் மகனைக் கட்டிக்க கசக்காது.. இனிக்கும்.. ஏன்னா.. நான்தான் கோடிஸ்வரனாச்சே.. உன் டாடி பாத்து வைக்கிற அமெரிக்க மாப்பிள்ளை வாழ்நாள் பூராவும் சம்பாதித்தாலும் என் உயரத்தை தொடக்கூட முடியாது.. ஏணி வைத்து ஏறினாலும் எட்ட முடியாத உயரத்தில நான் இருக்கேனில்ல.. அதான்.. பெங்களூரு காத்து திசைமாறி கிராமத்துப் பக்கம் வீசிருச்சு.. இல்லைன்னா ஃப்ரீ பேர்டு எதுக்காக பொன்வயல் கிராமத்துப் பக்கம் பறக்கப் போகுது..?"

'போடா.. டேய்..' என்றிருந்தது அவளுக்கு..

அவள் அவனது பணத்தைப் பார்த்து ஆசைப் பட்டாளா..?

'நான் ஆசைப்பட்டது உன் மேலடா... மாங்கா மடையா..!' உரக்கக் கூவ வேண்டும் போல அவளுக்கு இருந்தது...

"ஸோ.. எனக்கு பணத்து மேலதான் ஆசைன்னு சொல்கிறீங்க..?"

"உனக்கு காது கேட்காதா..? செவிடா..? அதைத்தானே இவ்வளவு நேரமாச் சொல்லிக்கிட்டு இருக்கேன்..?"

"இல்லைன்னு புரூவ் பண்ண நான் என்ன செய்யணும்..?"

"எதுவும் செய்ய வேண்டாம்.." அமர்த்தலாக அவன் சொன்னான்..

"நீ எதைச் செய்தாலும் அது பொய்யானதாகத்தான் இருக்கும்..."

அவளால் தாள முடியவில்லை.. இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுகிறவனிடம் பேச்சு என்ன வேண்டிக் கிடக்கிறது என்று அவள் அவனுக்கு முதுகு காட்டிப் படுத்து விட்டாள்.. அவள் கண்களில் இருந்து கோடாக இறங்கி வழிந்த கண்ணீர் அவள் கன்னத்தில் விழுந்து தலையணையை நனைத்தது..

கண்மூடிப் படுத்திருந்தவளின் அருகில் அவன் படுப்பதை அவளால் உணர முடிந்தது.. கசப்புடன் உறங்க முயன்றவளின் இடுப்பில் அவன்கரம் விழுந்தது.. நடப்பது என்ன என்று அவள் உணரும் முன்னரே அவன் அவளை அவன் பக்கமாக திருப்பியிருந்தான்.. சூடான அவனுடைய உதடுகள் அவள்

கன்னத்தில் படிந்த அந்த நொடியை நம்ப முடியாமல் அவள் திகைத்தபோது அவள் காதோரமாக அவன் சொன்னான்..

"இதுக்காகத்தானே உன்னை இடிச்சேன்னு சொன்ன..? நல்லாக் கேட்டுக்கடி.. நான் இதுக்காக மட்டும் தான் உன்னைக் கட்டிக்கிட்டேன்.. மற்றபடி உன்மேல் ஆசையோ.. காதலோ.. வேற எந்தவிதமான மண்ணாங்கட்டியோ எனக்குள்ள இல்ல.. புரிஞ்சதா..?"

அவன் புயல்வேகத்தில் அவளை ஆக்ரமித்தான்.. சற்று முன்பு அவள் கேட்ட பாடலில் சொல்லப்பட்ட நிகழ்வுகள் அத்தனையும் அங்கே நடந்து முடிந்தன.. அவளது குங்குமம் அவன் தந்த முத்தத்தில் கலைந்தது.. அவளது கூறைப்பட்டுப் புடவை அவனோடு கூடியதில் கசங்கியது..

## 16

நிவேதிதாவின் உடல் அவள் வசத்தில் இல்லை.. அவன் கைகளை விலக்கிவிடத்தான் அவள் நினைத்தாள்.. அதற்காகத்தான் அவன் கையைத் தொட்டாள்.. ஆனால் ரோமங்கள் அடர்ந்த அவனது வலிமையான கையைத் தொட்ட போது விலக்கி விட மறந்து அவள் கைகள் நடுக்கத்துடன் அவன் கைகளில் மீதே படிந்து விட்டன..

அவள் முகம் நோக்கிக் குனிந்து அவளது அதரங்களை அவன் தேடியபோது முகம் விலகத்தான் அவள் நினைத்தாள்.. ஆனால்.. அவளது அதரங்களின் மீது சூடான அவனது இதழ்கள் படிந்தபோது முகம் விலக்க மறந்து மூச்சுத்திணறியவளாக கண்களை இறுக மூடிக் கொண்டாள்..

அவள் மேனி மீது அவன் கரங்கள் படர்ந்து பரவிய போது விலகி விடத்தான் அவள் நினைத்தாள்... ஆனால்... அவன் கைகள் பட்டவுடன் அவளுக்குள் எழுந்த உணர்வின் பேரலையில் அடித்துச் செல்லப் பட்டவளாய் அவன் மார்போடு ஒன்றிக் கொண்டாள்..

வாசுதேவன் அவளிடம் காட்டிய கோபமுகம் வேறானதாகவும்.. அந்த நிமிடங்களில் கட்டிலில் அவ்ளிடம் கீலந்து கொண்டிருந்தபோது காட்டிய வேட்கை முகம் வேறானதாகவும் இருந்தது..

அவள் நெற்றியால் தீட்டியிருந்த குங்குமம் அவனது பட்டுச்சட்டையிலும் பனியனிலும் தீற்றி அவன் மார்பில் படிந்தது.. அவள் உடுத்தியிருந்த கூறைப்பட்டுப் புடவை கசங்கி.. அவனது பட்டுச் சட்டையுடன் கலந்து சுருண்டது.. அவள் கூந்தலின் மலர்கள் உதிர்ந்து அவன் மீதும்.. தலையணையின் மீதும் பரவிப் படர்ந்தன...

அவன் கைகளுக்குள் அவள் மொத்தமாக அடங்கினாள்.. அவர்கள் தூங்க ஆரம்பித்த போது ஜன்னலுக்கு வெளியே மெலிதான விடியலின் வெளிச்சம் ஆரம்பமாகியிருந்தது..



குளித்து முடித்து.. தலையைச் சுற்றியருந்த ஈரத் துவாலையுடன் அறைக்கதவை திறந்து வெளியே வந்த நிவேதிதாவின் மனதில் குழப்பம் படிந்திருந்தது..

அந்தத் தொடுகையும்.. தழுவலும்.. அவளை கௌரவப் படுத்துமா..?

நிவேதிதாவின் கண்கள் கலங்கின.. அவளெதிரே வந்த சௌதாமினியைக் கண்டதும் இமை சிமிட்டிக் கண்ணீரை மறைத்தாள்.. சௌதாமினி.. ஈரமுடியைச் சுற்றிய துவாலையுடன் வந்த நிவேதிதாவைக் கண்டதும் கண்சிமிட்டினாள்..

"எப்படி..?"

நிவேதிதாவின் முகம் 'குப்'பென்று சிவந்து விட்டது.. சுற்றுமுற்றும் பார்த்தாள்.. அருகினில் யாரும் இல்லை.. சௌதாமினியின் கையைப் பிடித்துக் கிள்ளினாள்...

"ஸ்ஆஆ.." சௌதாமினி அலறினாள்..

"ச்சீ..! இப்படியாடி கேட்ப..? குரங்கே..!"

"எப்படின்னு கேட்டேன்.. வேற எப்படிக் கேட்டேன்..?" சௌதாமினி அப்பாவியாய் கேள்வி கேட்டாள்..

"உன்னை.." நிவேதிதா பல்லைக் கடித்தாள்..

"என்னடி இது வம்பாய் போச்சு.. புது வீடு.. புது இடம்.. புது ரூம்.. உனக்குத் தூக்கம் வந்துச்சோ.. வல்லையோங்கிற சந்தேகத்தில எப்படிடீ.. நிம்மதியாத் தூங்கினியா..? புது இடத்தில தூக்கம் வந்துச்சான்னு கேட்கிறதுக்காக எப்படின்னு கேட்டேன்.. நீ உடனே இந்தக் கிள்ளு கிள்ளறியேடி.. மகராசி.. உன்னை நம்பி உன் வீட்டுக்கு வந்ததுக்கு இதுதான் பரிசா..?" சௌதாமினியின் கண்கள் சிரித்தன..

"நீ..? தூக்கத்தைப் பத்தி விசாரிச்ச..?"

"பின்னே.. வேற 'எதை'ப் பத்தி விசாரிப்பேன்..?"

சௌதாமினி அந்த 'எதை' என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்து மீண்டும் நிவேதிதாவின் முகத்தை சிவக்க வைத்தாள்...

"உன்னைத் திருத்தவே முடியாதுடி.. பாவம் என் மாமா மகன்.. உன்கிட்ட மாட்டிக்கிட்டு என்ன பாடுபடப் போகிறாரோ.."

நிவேதிதாவின் மனதோரம் கசிந்த துயரத்தின் சாயலை தோழி அறிந்து விடாமலிருக்க சிரித்த முகமாய் இருக்க அவள் முயன்றாள்.. அதை முதல்நாள் இரவின் இன்ப நினைவில் அவள் உதிர்க்கும் வெட்கச் சிரிப்பாக சௌதாமினி நினைத்துவிட்டாள்..

"என்னவோ.. சேவல் கூவற சத்தத்தைக் கேட்ட பின்னாடிதான் நீங்க ரெண்டு பேரும் கண்ணை மூடினிங்களாம்..."

"அப்படி சேவல் வந்து உங்கிட்டச் சொல்லுச்சா..?"

"ஊஹீம்.. வீங்கிக்கிடக்கிற உன் கண்ணு இமை ரெண்டும் கதைகதையாய் சொல்லுது.."

"போடி.."

இப்போது உண்மையிலேயே நிவேதிதாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.. அவள் மீண்டும் சௌதாமினியின் கையைக் கிள்ள முனைய.. அவள் கைகளுக்கு அகப்படாமல் தள்ளி நின்று அழகு காட்டினாள் சௌதாமினி..

"இப்பத்தான் கால் கிலோ கறியைப் பேர்த்தெடுத்த.. திரும்பவும் உன் கைக்குள்ள மாட்டிக்க நானென்ன கேணச்சியா..?"

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருந்த போது மகளைத்தேடி மாளவிகா அங்கே வந்து விட்டாள்.. அவள் விழிகள் மகளின் முகத்தில் எதையோ தேடின...

"அதெல்லாம் விடியற வரை கொண்டாட்டம்தானாம்.." என்று விளக்கம் சொன்னாள் சௌதாமினி..

"அடச்சீ.. வாயை மூடு.." மாளவிகாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது..

நிவேதிதா மாளவிகாவின் பார்வையைத் தவிர்த்தாள்.. அதில் மாளவிகாவின் மனதில் சங்கடம் மூண்டது..

"என்ன ஆச்சு நிவி..?"

"நீங்க என்ன சொல்கிறிங்க மம்மி.. ஐ கான்ட் அன்டர்ஸ்டாண்ட்.."

"என்னன்னுதான் சொல்லேண்டா.."

"மம்மி.. அவர் என்னிடம் ஹஸ்பெண்டாத்தான் நடந்துக்கிட்டார்.."

"ஓ..."

மாளவிகாவுக்கு மகள் சொல்வதைப் புரிந்து கொள்ள முடிந்தது.. அந்த ஒரு வரியே போதுமென்று நாசுக்காக அவர்கள் அதைத் தாண்டினார்கள்..

"அப்புறம் என்ன..? எதுக்காக முகம் வாடித் தெரியற..?"

"ஆனா மம்மி... அவர் என்னிடம் ஐ லவ் யுன்னு சொல்லலை..."

"ஓ..."

மாளவிகாவின் ஒற்றை எழுத்து உச்சரிப்பில் ஒரு கோடி அர்த்தங்கள் பொதிந்திருந்தன.. அவளால் மகளின் மனவலியைப் புரிந்து கொள்ள முடிந்தது.. அந்த வலியை அவளும் தாண்டி வந்தவள்தானே...



# 17

"நிவி.."

"மம்மி..?"

"நீ இப்போத்தான் வாழ்க்கையை ஆரம்பிச்சிருக்கிற.. இது ஒருநாளில் முடியப் போகிற விசயம் இல்லை..."

நிவேதிதாவுக்கு எதுவோ புரிவதைப் போல இருந்தது.. அவள் குருவிடம் பாடம் கேட்கும் சிஷ்யையாக மாறிப் போனாள்.. தாய் சொல்லும் அறிவுரைகளை கூர்ந்து கேட்க ஆரம்பித்தாள்...

"அவரின் சுபாவம் எப்படிப்பட்டதுன்னு உனக்குத் தெரியுமா..? இப்பத்தானே ஒரு நாளைக் கடந்திருக்க..? அவர் போக்கிலேயே போ நிவி.. அதே சமயம் அவரை ஸ்டடி பண்ணு.. ஒருநாள் அவர் உன்னிடம் வந்து கட்டாயமாக ஐ லவ் யுன்னு சொல்லுவார்.."

"ம்ம்ம்..."

"மாப்பிள்ளையைப் பொறுத்த வரைக்கும் எந்த முடிவையும் தானா எடுக்கிறவரா இருக்கிறார்.. இவரோட தாத்தாவையும்.. அப்பாவையும் இவர்தான் கண்ட்ரோல் பண்றார்... இன்னாரோட பேரன்.. இன்னாரோட மகன்னு இல்லாமல் இவரோட தாத்தா... இவரோட அப்பான்னு இந்த டிஸ்டிரிக்ட் முழுக்கச் சொல்ல வைச்சிருக்கார்.. அப்பேற்பட்டவரோட மனதில் அவ்வளவு சீக்கிரமா இடம் பிடித்து விட முடியாதுதான்.."

"மம்மி..?" நிவேதிதா அச்சத்துடன் பார்த்தாள்...

"பொறு.. மற்ற எந்த உறவுகளை விடவும் 'வொய்ஃப்'ங்கிற உறவுக்கு பவர் ஜாஸ்தி.. மத்தவங்கள்ளாம் ஒரு வயதுக்கு மேலே.. தள்ளி நிற்க ஆரம்பிச்சுருவாங்க.. 'வொய்ஃப்' மட்டும் தான் தூக்கத்திலயும் அவனுடன் இணை பிரியாம சேர்ந்து தூங்குவா.."

இந்த புதுவகை கண்ணோட்டத்தில் நிவேதிதாவுக்குள் புதிய பாதை தெரிந்தது.. அவளால் மட்டுமே வாசுதேவனை அணுக முடியும் என்பதில் அவளுக்குள் தனிப்பட்ட கர்வம் தோன்றியது..

"இருபத்தி நாலு மணி நேரமும் அவர்கூட இணை பிரியாம இருக்கப் போகிறது நீ.. எந்த நேரத்தில அவர் மனசை மாத்தி.. உன்பக்கம் இழுக்கனும்னு நான் சொல்லிக் கொடுத்து நீ தெரிஞ்சுக்கனுங்கறதில்ல.."

நிவேதிதா லஜ்ஜையுடன் தோட்டத்துச் செடிகளில் மலர்ந்திருக்கும் பூக்களைப் பார்த்தாள்.. அவளின் ஈரத்தலையைச் சுற்றியிருந்த துவாலையை அவிழ்த்து அவள் முடியை விரிய விட்டு துவாலையில் அவள் தலையை துடைத்து விட்டபடி மாளவிகா பேசினாள்..

"உன் டாடியையே எடுத்துக்க.. முன்னைப் போலத் தான் 'கருக்' 'கருக்'ன்னு பேசுவார்.. ஆனா.. அவரும் ஒருநாள் என்னிடம் ஐ லவ் யுன்னு சொன்னார்.."

"ஆர் யு ஷ்யூர் மம்மி..?"

"நிஜம்தான் நிவி.. அவர் பேசறதெல்லாம் வீம்புப் பேச்சு.. மேரேஜ் சமயத்தில இவரோட பேரண்ட்ஸ் என் அப்பாம்மாவிடம் தலைக்கனமா நடந்திருக்காங்க.. என் அப்பா பட்டுன்னு.. இதுக்குத்தான் சொந்தத்தை விட்டுட்டு அன்னியத்தில பெண் கொடுக்கக் கூடாதுன்னு சொல்றதுன்னு சொல்லிட்டார்.. இவர் அதையே பிடிச்சுக்கிட்டு இன்னும் தொங்கறார்.."

"ஊ.. ஊ.." நிவேதிதா ரசித்துச் சிரித்தாள்..

மகளின் சிரிப்பில் மாளவிகாவின் மனம் மலர்ந்தது..

"இப்போச் சொல்லு.. இப்படியாப்பட்ட உன் டாடி கிட்டயே குடும்பம் நடத்தி.. அவர் வாயிலே ஐ லவ் யுன்னு என்னைப் பார்த்து நான் சொல்ல வைச்சிருக்கேன்னா.. உன் ஹஸ்பெண்ட் தங்கம்.. அவரை உன்னைப் பார்த்து ஐ லவ் யுன்னு சொல்ல வைக்க உன்னால் முடியாதா..?"

'ஏன் முடியாது..?'

நிவேதிதாவின் முகத்தில் அச்சமும்.. சஞ்சலமும் விலகி தெளிவு வந்தது.. அவள் நன்றியுடன் தாயைப் பார்த்தாள்..

"தேங்க் யு மம்மி..."

"இதைப் பாருடா.. என் பொண்ணு ரொம்பப் பெரியவளா ஆகிட்டா.."

மாளவிகா செல்லமாக மகளின் கன்னத்தில் தட்டினாள்.. அங்கே காபித்தம்ளர்களுடன் வந்த வாஸந்தியைக் கண்டதும்..

"உனக்கெதுப்பா சிரமம்..?" என்று வாத்சல்யத்துடன் சொன்னாள்..

"இதில சிரமப்பட என்ன இருக்கு..? அண்ணிகிட்ட பேச எனக்கும் சான்ஸ் வேணுமில்ல.. அதான் காபி கொடுக்கிற சாக்கில ஓடி வந்திட்டேன்.."

வாஸந்தி நிவேதிதாவின் அருகே உட்கார்ந்து பிரியத்துடன் அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்..

"நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்கண்ணி..."

"தேங்க் யு.." கூச்சத்துடன் சொன்னாள் நிவேதிதா..

"இப்பத்தான் அத்தைக்கு தேங்க்ஸ் சொன்னீங்க.. அடுத்து எனக்கா..? நீங்க என்ன தேங்க்ஸை கூடை கூடையா வைத்திருக்கீங்களா..?"

"வாஸந்தி.."



"என்னை வாசுன்னு தான் வீட்டில எல்லாரும் கூப்பிடுவாங்கண்ணி.. நீங்களும் அப்படியே கூப்பிடுங்க.."

"உன் அண்ணனை எப்படிக் கூப்பிடுவீங்க..?" அவள் தயக்கத்துடன் கேட்டபோது வாஸந்தி உரக்கச் சிரித்தாள்..

"பார்த்தீங்களா அத்தை.. வாசுன்னு உடனே அண்ணிக்கு வாசுதேவனை நினைவுக்கு வந்திருச்சு.. கவலையே படாதீங்க அண்ணி.. அண்ணனை இங்கே எல்லோரும் தேவான்னுதான் கூப்பிடுவாங்க.."

'அவன் தேவனா..?' நிவேதிதாவின் மனம் விகசித்தது..

## 18

"நாங்கள்ளாம் அண்ணனுக்குப் பெண்டாட்டியா வரப்போகிறவ.. அப்படியிருப்பா.. இப்படியிருப்பான்னு அண்ணனைப் பயமுறுத்திக்கிட்டே இருப்போம் அண்ணி.. ஆனா அண்ணி.. நிஜத்தில் அந்த பயம் எங்க எல்லார் மனசிலயும்தான் இருந்தது.. அண்ணன்தான் எதுக்கும் அலட்டிகவே அலட்டிக்காதே.. எவ வந்தா எனக்கென்னன்னு உதட்டைச் சுழிச்சுக்கிட்டே போயிரும்.."

'அடாவடிக்காரன்..'

நிவேதிதாவின் மனதில் இதம் பரவியது..

"எங்களுக்குத்தான் பயமா இருக்கும்.."

"எதுக்கு..?"

"வரப் போகிற அண்ணி எப்படியிருப்பாங்களோன்னு தான்..."

"நான் எப்படியிருக்கேன்..?"

நிவேதிதாவின் புருவங்கள் நெளிந்து.. வளைந்து.. உயர்ந்து வினவிய விதத்தில் அழகில் ஈர்க்கப் பட்டாள் வாஸந்தி...

"தேவதையைப் போல இருக்கீங்க அண்ணி..."

நிவேதிதாவை அவள் கட்டிக் கொண்டாள்.. மகள்.. தனது நாத்தனாருடன் பேசும் பாங்கினை ரசித்துக் கொண்டிருந்தாள் மாளவிகா..

"எம்பேத்தியென்ன என் பேரன்கூடப் போட்டி போடறாளா..?" என்ற கேள்வியுடன் அங்கு வந்து சேர்ந்தாள் பார்வதி..

"நான் என்ன போட்டி போடறேனாம்..?" வாஸந்தி பாட்டியுடன் சண்டைக்குப் போனாள்..

"பின்னே..? அவன் கட்டிக்கிட்ட பெண்டாட்டியை.. சரக்குன்னா நீ கட்டிக்கிறயே.. அவன் சண்டைக்கு வரமாட்டானா..?"

பார்வதியின் கேலியில் நிவேதிதாவின் முகம் குங்குமமானது.. பெரியவர்களின் முன்னால் என்ன பேசுவது என்று தெரியாதவளாய் அவள் குனிந்து பார்வதியின் பாதத்தைத் தொட்டு வணங்கினாள்.. அதை எதிர்பார்த்திராத பார்வதி ஆச்சரியப்பட்டுப் போனாள்.. நிவேதிதாவின் தலையில் கை வைத்து...

"நல்லாயிரும்மா.." என்று ஆசி வழங்கினாள்..

அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் மாளவிகாவை ஆதுரத்துடன் நோக்கி..

"பெண்ணை அருமையா வளர்த்து வைச்சிருக்கம்மா.. பட்டணத்தில பொறந்து வளர்ந்த பொண்ணாச்சே.. அதிலயும் இன்ஜினியர் படிப்பை வேற படிச்சிருக்கா.. நம்ம நாட்டுப் பழக்கமெல்லாம் தெரியுமோ.. தெரியாதோன்னு எனக்கும்.. சாவித்திரிக்கும் மனசு கிடந்து அடிச்சுக்குச்சு.. அப்படியில்லாம உன் மக அருமையான பொண்ணா இருக்கா.. வாசுதேவன் மட்டுமில்ல.. நாங்களும் கொடுத்து வைச்சவங்கதான்.." என்று சொன்னாள்..

மாளவிகாவிற்குப் பெருமையாக இருந்தது.. பெற்ற வளர்த்த பெற்றவர்களுக்கு இதைவிட சிறந்த பரிசு வேறெதுவும் இல்லை...

"காபி குடிச்சியாம்மா.." கனிவுடன் விசாரித்தாள் பார்வதி...

"அதெல்லாம் அப்பவே நான் கொண்டு வந்து கொடுத்திட்டேனாக்கும்.." வாஸந்தி நொடித்தாள்...

"கேட்டியாம்மா.. வயசான காலத்தில எழுந்திருக்க முடியாம ஒரு சொம்பு பச்சைத் தண்ணியக் கொண்டுக் கிட்டு வாடியம்மான்னு கரடியாக் கத்தினாலும் எம்பேத்தி காதில அது விழுகாது.. இப்ப என்னடான்னா புதுசா வந்திருக்க அண்ணிக்கு முத ஆளா காபித் தண்ணியக் கொண்டுக்கிட்டு வந்திருக்கா.." பார்வதி அதிசயப்பட்டாள்..

"போ.. பாட்டி.."

"எங்கேடி போகச்சொல்ற..?"

"தாத்தாகிட்டப் போ.."

"எதுக்கு.. விட்ட விடிகாலையிலயே அவரு கூட உறண்டை இழுக்கிறதுக்கா..? அதுக்கு வேற ஆளைப் பாரு.."

"நிசமாத்தான் சொல்றியா பாட்டி.."

"ஆமாண்டியம்மா.. இதில பொய் வேற சொல்லுவாங்களா..?"



"நல்லா யோசிச்சுப் பதில் சொல்லு பாட்டி.. அப்புறமா பேச்சு மாற மாட்டியே.."

"அது என்ன கழுதைக்கு மாறப் போறேன்.. இந்தப் பார்வதி வாயைத் திறந்து பேசினா ஒரே பேச்சுத்தான்.. அது மாறினதா சரித்திரமே இல்லைடி..."

"இந்த சரித்திரம்.. பூகோளமெல்லாம் எங்களுக்கும் தெரியும்.. ஆக.. நீ வேற ஆளைப் பாக்கறதுக்கு ஒப்புக்கிற..."

"அட.. ஆமாண்டிங்கறேன்.. இதுக்கு ஏன் இத்தனை இழுவையை இழுக்கிறவ..?"

"ம்ஹூம்.. தாத்தாவுக்கு இந்த வயசில இப்படியொரு ஜாக்பாட்டா..?"

"அவருக்கு ஏண்டி ஜாக்பாட் அடிக்குது..?"

"அடிக்காதா பின்னே..? நீதான் அவருக்குப் பொண்ணுப் பார்த்து புதுசாக் கல்யாணம் கட்டி வைக்கச் சொல்லிட்டயே..."

வாஸந்தி போட்ட அதிர்வெடியில் நிவேதிதாவே திகைத்து விட்டாள்.. மாளவிகா சிரிக்கலாமா.. வேண்டாமா என்ற யோசனையுடன் மகளைப் பார்த்தாள்.. நிவேதிதாவும் தாயைப் பார்த்தாள்.. அவர்களுக்கு அந்தப் பாட்டியும்.. பேத்தியும் போட்டுக் கொண்டிருந்த செல்லச் சண்டையில் சுவராஸ்யம் ஏற்பட்டது..

"அடிப்பாவி.. ஆட்டைக் கடிச்சு.. மாட்டைக் கடிச்சு.. கடைசியில் என் புருசனுக்கே ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்க வைக்க நீ கிளம்பிட்டியா..?"

"நீதானே பாட்டி வேற ஆளைப் பாருன்னு சொன்ன..?"

"அதுக்கு இதுதான் அர்த்தமா..?"

"பின்னே..? வேற என்ன அர்த்தமாம்.."

"உன் வாயிலயே ஒன்னைப் போட்டாத்தான் நீ அடங்குவ.. காலம் போனக் கடைசியில கிழவருக்குப் பெண் பார்க்க நீ கிளம்பிட்டியா..?"

பார்வதி பேத்தியை செல்ல அடி அடிக்க கை ஓங்க. அவள் நிவேதிதாவின் முதுகுக்குப் பின்னால் மறைந்து கொண்டாள்.. பார்வதி அவளைப் பிடிக்க முயல.. வாஸந்தி நிவேதிதாவின் பின்னால் மறைய என்று.. அவர்கள் இருவரும் நிவேதிதாவைச் சுற்றி வளைத்து ஓடிப் பிடிக்கும் விளையாட்டை ஆரம்பித்தார்கள்..

சிரித்தபடி அண்ணாந்து பார்த்த நிவேதிதாவின் பார்வையில் மாடி ஜன்னலில் இருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த வாசுதேவனின் முகம் தென்பட்டது..

அவளின் சிரிப்பு உறைவதைப் பார்த்தபடி ஜன்னலை விட்டு விலகிய வாசுதேவனின் முகத்தில் சிந்தனை படர்ந்தது..

அவனுடைய தங்கையுடனும்.. பாட்டியுடனும் குதூகலமாக விளையாடிக் கொண்டிருந்த நிவேதிதாவின் தோற்றத்தில் மனம் லயித்தான் அவன்..

கிராமத்தையும்.. விவசாயக் கூட்டுக் குடும்பத்தையும் விரும்பாதவளா அவ்வளவு இணக்கமாக அவனுடைய தங்கையுடனும் பாட்டியுடனும் விளையாடிக் கொண்டிருக்-கிறாள் என்ற கேள்வி அவன் நெஞ்சில் வந்தது..

அறைக்கதவு திறக்கப்படும் ஒலியில் தலை நிமிர்ந்தான்.. அவன் முன்னால் காபித் தம்ளருடன் வந்து நின்றாள் நிவேதிதா..

லேசான ஈரத்துடன் உலர வைப்பதற்காக விரித்து விடப்பட்டிருந்த அடர்ந்த கூந்தல் இடுப்பைத் தாண்டித் தோகை போலத் தொங்கிக் கொண்டிருந்தது அவன் கவனத்தில் பட்டது..

அவள் முகத்தில் தெரிந்த வெட்கச்சிகப்பு முதல் நாள் இரவை நினைவு படுத்தியதில் அவன் பார்வை நிதானமாக அவள்மேல் ஊர்ந்து.. மேய்ந்து.. இறங்கத் தொடங்கியது..

அவன் பார்வையில் அவளுக்குள் படபடப்பும்.. பரபரப்பும் சேர்ந்த கலவையொன்று தோன்றியது.. அது கொடுத்த இதமான இம்சையில் அவள் உதட்டைக் கடித்தாள்..

“என்னவோ.. தோட்டத்தில் ஓடிப்பிடிச்சு விளையாண்டுக்கிட்டு இருந்ததைப் போல இருந்துச்சே.. என்ன விசயம்..?” மிதப்பாக கேள்வி கேட்டான்..

இதில் என்ன விவரம் இருக்கப் போகிறது என்ற நினைவுடன்..

“நான்விளையாடலை.. நம்ம வாஸந்தியும்.. பாட்டியும்தான் செல்லமா விளையாடிக்கிட்டு இருந்தாங்க..” என்று அந்தச் சண்டையை நினைவு கூர்ந்த சின்னச் சிரிப்புடன் சொன்னாள் நிவேதிதா..

‘நம்..’ என்ற அவரின் அந்த வார்த்தைக் குறியீட்டில் அவன் புருவங்களை உயர்த்தினான்.. அவள் புரியாமல் பார்த்தாள்..

“முதல்நாளே கொண்டாட்டமா இருக்க போல..” அவன் காலிதம்ளரை நீட்டினான்..

அதை வாங்கிப் பக்கத்தில் இருந்த டீப்பாயில் வைத்த நிவேதிதா.. அவனுக்குப் பதில் சொல்லாமல் நகர முற்பட்டாள்...

“எங்கே போற..?” அவன் குரல் அவளை தடுத்து நிறுத்தியது..



“தலை பின்னப் போறேன்.. பாட்டி.. உங்களையும் என்னையும் கோவிலுக்குப் போய் விட்டு.. வரச் சொன்னாங்க..”

மெல்லிய குரலில் அவனை நிமிர்ந்து பார்க்காமல் பேசினாள் நிவேதிதா.. அவளுடைய கொடி போன்ற உடலின் வளைவுகள்.. முதல்நாள் இரவை நினைவு படுத்தி அவனை ‘வா’ வென்று அழைத்தன.. கோவிலுக்குப் போக வேண்டும் என்ற நினைவில் விலகியவன்... குளியலறைக்குள் நுழைந்து விட்டான்..

அவனையே பார்த்துக் கொண்டிருந்த நிவேதிதாவின் மனதுக்குள் காதல் வந்தது...




அழகான குளக்கரை அது.. குளத்தில் அடர்ந்திருந்த செந்தாமரைப் பூக்கள்.. அதன் படித்துறையில் இறங்கியவள் கால் வழுக்கி விழப் போனபோது தாங்கிப் பிடித்துக் கொண்டான் வாசுதேவன்... அவன் கைவளைவில் அவளும்.. அவள் முகம் பார்த்து அவனும் நின்றிருந்த அந்த மணித்துளிகளில் அவள் அவனுக்கு வேண்டாத மனைவி என்பதே அவனுக்கு மறந்து விட்டது.. அவன் முகம் பார்த்தவளின் விழிகளில் தெரிந்த காதலில் அவன் யோசனையானான்.. மெதுவாக.. மிக மெதுவாக.. அவளை அவன் விடுவித்தபோது விலக மனமில்லாமல் விலகினாள் நிவேதிதா...

“படியில் பாசம் படர்ந்திருக்கும்.. அதனால் காலை அழுத்தி ஊன்றி இறங்கு.. இல்லைன்னா வழுக்கி விட்டிரும்..” என்றான் அவன்...

“வழுக்கி விட்டாத் தாங்கிப் பிடிக்கத்தான் நீங்க இருக்கீங்களே..” உதட்டை மடித்து அழகாக சுழித்தபடி ஒயிலாகச் சொன்னாள் அவள்...

அவன் அவளை ஊன்றிப் பார்த்தான்.. அந்தப் பார்வையில் முகம் சிவந்தவளைக் கண்டதும் அவன் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்தன..

“இது கிராமம்..” கடுகடுத்தான் வாசுதேவன்..

அவன் அவளிடம் கடுகடுத்துக் கொண்டிருக்கிறான்.. அதை உணராமல் அவளோ அவன் காதல் மொழிகளைச் சொன்னதைப் போல முகம் ஜ்வலிக்க நிற்கிறாள் என்றால் அவளை எப்படித்தான் அவன் கடிந்து கொள்வது..?

“நீயென்ன செவிடா..?” அவன் முறைத்தான்...

“செவிடுகிட்ட யாராவது நீயென்ன செவிடான்னு கேட்பாங்களா..?” அவள் வாய் பொத்திச் சிரித்தாள்..

‘இவளென்ன என்னை சிரித்தே மயக்கிடனும்னு பிளான் பண்ணி வைச்சிருக்காளா..?’

“கெட்டிக்காரிடி.. நீ சரியா ஒரு விளக்கம் சொல்ற பார்த்தியா..?”

தப்பிக்கும் வித்தை அவளுக்குத் தெரிந்திருக்கிறது என்ற ரீதியில் அவன் சொன்னாலும் அவள் உண்மையாகத் தான் அந்த வார்த்தைகளைச் சொல்லுகிறாள் என்பதை அவன் மனம் கண்டு கொண்டது...

அவன் தண்ணீரில் இறங்கி கை கால் கழுவி விட்டு.. அவளுக்கு கை நீட்டினான்.. அவனது வலிய கரத்தை இறுக்கிப் பிடித்தபடி நீரில் இறங்கியவள் கை கால் கழுவியவுடன்.. அவன் படியில் ஏற கை கொடுத்தான்.. அவன் கரத்தை இறுக்கிப் பிடித்தபடி படியேறிய நிவேதிதாவுக்கு உலகமே வண்ணமயமானதாக இருந்தது.. வாய்விட்டுப் பாட வேண்டும் போல தோன்றியதில்..

“மல்லிகைப்பூ முகத்திலே..
மாம்பழத்து உதட்டிலே..
பன்னம் போட வந்தானே..
பரிசு ஒன்னு தந்தானே..
அந்த மச்சானா..? - அவன்..
ஆசை வைச்சானா...?”

என்று பாடி வைத்தாள்..

வாசுதேவன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான்.. அவள் புருவங்களை ஒயிலாக உயர்த்தி ஏனென்ற கேள்வியை அனுப்பினாள்..

“பெங்களூரில் பிறந்து வளர்ந்த சாப்ட் வேர் இன்ஜினியர் பாடற பாட்டாடி இது..?”

“ஏன்..? பெங்களூரில் பிறந்து வளர்ந்த சாப்ட் வேர் இன்ஜினியர் சாஃப்ட்டான மெலோடிப் பாட்டைப் பாடக் கூடாதுன்னு சட்டம் ஏதும் இருக்கா..?”

“அது இல்லைதான்.. ஆனா இது எங்க பாட்டி காலத்துப் பாட்டுடி...”

“உங்க பாட்டிதான் பாடிக் காட்டினாங்க..”

“எப்ப..?”

“இப்பத்தான்.. உங்க பாட்டி கூட பல வருசமா எனக்கு பழக்கமா..? காலையிலதான் அவங்க கூட உட்கார்ந்து பேசவே முடிஞ்சது.. ஹௌ நைஸ் ஷி இஸ்..!”

அவள் ஆங்கிலத்தில் வியந்ததை யோசனையுடன் கேட்டவனுக்கு அவள் மனதில் என்னதான் இருக்கிறது என்ற குழப்பம் ஏற்பட்டது.. கூட்டுக்குடும்பத்தைப் பிடிக்காதவள் அவனுடைய பாட்டியுடன் அரட்டை அடிக்கிறாள்.. அவள் பாடிய பாடலை இவளும் பாடிக் காட்டுகிறாள்...



அவர்கள் இருவரும் மலையடி வாசத்தில் இருந்த கைலாசநாதரின் கோவிலுக்குள் பிரவேசித்தார்கள்.. இயற்கை எழிலுடன் இருந்த கோவிலின் பக்கவாட்டில் இருந்த வில்வ மரத்தில் அவன் இலைகளைப் பறித்தான்..

“வில்வ இலை சிவபெருமானுக்கு பிடித்தமான இலை.. அப்படித்தானே..?” விளக்கம் கேட்டாள் நிவேதிதா,,

“ஆமாம்.. ஒரு சிவராத்திரியப்போ.. வில்வ மரத்தடியில பார்வதியும்.. பரமசிவனும் உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்தாங்களாம்.. அப்ப.. மரத்து மேலே இருந்த குரங்கு ஒன்னு தன் போக்கில வில்வ இலைகளைப் பறிச்சு.. பறிச்சு.. சிவபெருமான் மேலே போட்டுக்கிட்டே இருந்துச்சாம்.. விடியற வேளையில சிவபெருமான் அதில மகிழ்ந்து போய்.. அந்தக் குரங்குக்கு மறுபிறவியில் மகாராஜாவாகப் பிறக்கும் வரத்தைக் கொடுத்தாராம்...”

“ஹௌ.. நைஸ்..” நிவேதிதா வியந்து போனாள்..

இவளுக்கு எல்லாமே ‘ஹௌ நைஸ்..’ தான் என்று நினைத்துக் கொண்டான் வாசுதேவன்..

சிவபெருமானான கைலாச நாதரை வணங்கி.. தீபாதரணையைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு.. அம்மனை வணங்கினார்கள்.. கோவில் பிரகாரத்தைச் சுற்றி வந்த போது கோவிலின் பின்னால் தெரிந்த மலையைப் பார்த்த நிவேதிதா...

“அந்த மலையில் ஏறியிருக்கீங்களா..?” என்று கேட்டாள்...

கோவிலைப் பற்றியும்.. ஊரைப் பற்றியும் அவன் பேசியதால் அவனால் இடக்கு மடக்காக பேச முடிய வில்லை.. இயல்பாகத்தான் பேச வந்தது.. அது எதனால் என்று யோசித்தபடி..

“நிறைய முறை போயிருக்கிறேன்..” என்றான்..

“என்னையும் கூப்பிட்டுக்கிட்டுப் போறீங்களா..? ப்ளீஸ்.. ப்ளீஸ்..” அவள் சிறுமியைப் போன்ற ஆர்வத்துடன் கெஞ்சினாள்...

வாசுதேவனுக்கு வேடிக்கையாக இருந்தது.. இவளைக் கணிப்பது கடினம் என்று அவன் நினைத்துக் கொண்டான்...

“ம்ம்ம்.. பார்க்கலாம்..” அவன் கோவில் மண்டபத்தில் ஏறி அமர்ந்து கொண்டான்...

“ஊஹீம்.. பார்க்கலாம்ன்னு சொல்லக் கூடாது.. கட்டாயமாக் கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்னு சொல்லனும்..” அவள் சிணுங்கினாள்..

“சரி.. கூப்பிட்டுக்கிட்டுப் போறேன்.. போதுமா.. இப்ப உட்கார்ந்துட்டுப் போகனும்.. அதனால நீயும் இப்படி உட்காரு..” பக்கத்தில் கை காட்டினான்..

“நீங்க ஹைஜம்ப்.. லாங் ஜம்ப்பெல்லாம் கத்து வெச்சிருக்கிறவரு.. ஒரே ஜம்ப்பில் ஏறி உட்கார்ந்துட்டீங்க.. நான் அப்படியா.. இவ்வளவு உயரமான மண்டபத்தில எப்படி ஏறுவேனாம்..?” மலைத்தாள் நிவேதிதா..

“ஓ..அதுதான் உன் பிரச்னையா..?”

குதித்து இறங்கிய வாசுதேவன்.. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் அவள் இடுப்பைப் பற்றித் தூக்கி மண்டபத்தில் அமர வைத்தான்.. ஒரே தாவில் அவளருகில் அமர்ந்து விட்டான்...

“ஹப்பா..”

இரு கன்னத்திலும் கை வைத்து கணவனின் அந்த தீரத்தில் கண்கொட்டினாள் நிவேதிதா..

“நீங்க பெரிய ஆள்தான்..”

“அதனாலதான நீ ஆசையா பார்க்கிற.. இல்லைன்னா உழவர் மகனுக்கு கழுத்தை நீட்ட மாட்டேன்ங்கிற பிடிவாதத்தில நிலையா நின்றிருப்பேல்ல..” ஒரு தினுசான குரலில் அவன் சொன்னான்..

நிவேதிதாவின் முகம் வாடிவிட்டது.. அவள் கீழ்வானில் எழுந்து பவனி வர ஆரம்பித்திருந்த சூரியனை உற்று நோக்கினாள்.. அவளது முகவாட்டத்தில் வாசுதேவனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது..

“அந்த சூரியனிடம் ஒன்னு கேட்கனும்..” என்றான்..

‘என்ன’ என்பதைப் போல அவனை ஒரு பார்வை பார்த்து வைத்தாள் நிவேதிதா..

“உன் நிறமும்.. அவன் நிறமும் ஒன்னு போல இருக்கே அது எப்படின்னு கேட்கனும்..” நொடிப் பொழுதில் நிவேதிதாவின் முகம் மலர்ந்து சிவந்தது.. அதில் அவன் மனமும் நிறைந்தது..

## 20

வீட்டுக்கு அவர்கள் திரும்பிய போது.. நிவேதிதாவின் தாய்.. தந்தையர்.. அவளுடைய தம்பியுடன் பெங்களூருக்குக் கிளம்பத் தயாராகியிருந்தார்கள்.. ஹாலில் வைக்கப் பட்டிருந்த பெட்டிகளைப் பார்த்தபோது நிவேதிதாவின் தொண்டையில் துக்கப் பந்து அடைத்தது.. அவளது பிறந்தவீடு அவளை அவளுடைய புகுந்த வீட்டில் விட்டுவிட்டுக் கிளம்பப் போகிறது என்ற நினைவில் கண் கலங்கினாள்..



“பை நிவி..”

குடும்பம் மொத்தமும் கையாட்டி விடைபெற்று காரில் ஏறிச் சென்று விட்டபின் நிவேதிதா ‘வெறிச்’ சென்ற ஓர் உணர்வை உணர்ந்தாள்.. தாய்க்குத் தாயாக.. தோழிக்குத் தோழியாக இருந்த மாளவிகா இல்லாமல் அவள் மட்டும் பொன்வயலில் இருக்க நேர்ந்ததில் அவளுக்குள் தனிமையுணர்வு ஏற்பட்டது.. கடுப்பைக் கிளப்பி விட்டு வேடிக்கை பார்க்க சுந்தர் அங்கேயில்லை என்ற நினைவில் அவள் சோர்ந்து போனவளாக வீட்டின் முன்பக்கத்தில் அகன்டு நீண்டிருந்த வராண்டாவுக்கு வந்தாள்.. அங்கே பளிங்குக் கற்கள் பதிக்கப் பட்டிருந்தன.. குஷன் பதிக்கப்பட்ட பிரம்பு நாற்காலிகள் வரிசை கட்டியிருந்தன.. வராந்தாவின் கோடியில் தேக்கு மரத்தினால் ஆன மிகப்பெரிய நீண்ட.. ஊஞ்சலொன்று.. கனமான இரும்புச் சங்கிலிகளுடன் தொங்கிக் கொண்டிருந்தது..

நிவேதிதா அந்த ஊஞ்சலில் அமர்ந்தாள்.. கால்களால் தரையை உந்தினாள்.. ஊஞ்சல் அவள் மனதைப் போல இங்கும்.. அங்குமாக ஆடியது.. தோட்டத்தில் இங்கும் அங்குமாக பதிக்கப்பட்டிருந்த மரக் கூடுகளில் இருந்த பறவையினங்கள் சிறகடித்துப் பறப்பதும் மீண்டும் கூடுக்குத் திரும்பி இரையருந்தி தண்ணீர் குடிப்பதுமாக இருந்ததை வேடிக்கை பார்த்தாள்..

‘இனி நிரஞ்சன் யாரோடு சண்டை போடுவான்..’ நினைத்துப் பார்த்தவளின் விழியோரமாக நீர் அரும்பி வழிந்தது...

‘காலேஜ் விட்டு வந்தவுடனே என்கூட மல்லுக்கு நிப்பான்... அதுக்கப்புறம்தான் டென்னிஸ் மட்டையைத் தொடுவான்..’ அவள் மனம் நிரஞ்சனைத் தேடியது..

பேசாமல் தாய் தந்தையருடன் காரில் ஏறிப் போயிருக்கலாமோ என்று அவளுக்குத் தோன்றியது..

‘வாசுதேவனை விட்டு விட்டா..?’

அதற்கும் அவளுக்கு மனம் வரவில்லை.. இருவகையான மனப்போராட்டத்தில் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.. அலை பாய்ந்த மனதை ஊஞ்சலின் ஆட்டம் சமனப் படுத்துவதைப் போலத் தோன்றியதில் கனமான சங்கிலியில் தலை சாய்த்து கொண்டாள்.. அப்படியே சில நொடிகளைக் கழித்தவள்.. கண்திறந்த போது அவளுக்கு எதிரே ஊடுருவும் பார்வையுடன் வாசுதேவன் நின்றிருந்தான்..

‘அழுதா திட்டுவானோ..’

நிவேதிதா முகம் திருப்பிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.. ஊஞ்சலை விட்டு இறங்கி தலையைக் குனிந்தபடி அவனைக் கடந்து நடக்க முற்பட்டாள்.. அவளைக் கடந்து சென்றவளின் கையைப் பிடித்து தடுத்து

நிறுத்தினான் வாகதேவன்.. தவிப்புடன் அவன் கைக்குள் அகப்பட்டிருந்த தனது கையை விடுவிக்க முடியாமல் அப்படியே நின்றுவிட்டாள் நிவேதிதா.. அவன் பார்வை அவள் முகத்தின் மீதே படிந்திருப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

"ஊஞ்சலாடிக்கிட்டு இருந்தவ.. பாதியிலேயே ஏன் எழுந்திருச்சுப் போற..? ம்ம்ம்..?" எதுவும் நடக்காததைப் போல இயல்பாக அவன் வினவினான்..

"ச்சும்மா.." அவள் முணுமுணுத்தாள்..

"சும்மா ஊஞ்சலாடாம பணம் கொடுத்தா ஊஞ்சலாடுவாங்க.. வா.." அவள் கைபிடித்து இழுத்தான்..

"எங்கே..?" நிவேதிதா திகைத்தாள்..

"ஊஞ்சலாடத்தான்.."

இலகுவாகச் சொன்னவன்.. கோவிலில் செய்ததைப் போல அவள் இடுப்பில் கை கொடுத்து அவளைத் தூக்கி ஊஞ்சலில் உட்கார்த்திவிட்டான்.. என்ன நடக்கிறது என்று அவள் அனுமானிக்கும் முன்னரே ஊஞ்சலை பலமாக ஆட்டி விட்டுவிட்டான்...

இந்தக் கோடிக்கும்.. அந்தக் கோடிக்குமாக ஊஞ்சல் உயர்ந்து ஆடியதில் நிவேதிதா பயந்து போனவளாக கண்களை இறுக மூடிக்கொண்டு

"அம்மா.." என்று அலறியபடி ஊஞ்சல் சங்கிலியை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்..

ஊஞ்சலாட்டம் நின்றது.. நடுக்கத்துடன் விழித்துப் பார்த்தாள்... வாகதேவன்தான் ஊஞ்சலின் பலகை விளிம்பை இறுக்கிப் பிடித்து ஊஞ்சலின் ஆட்டத்தை நிறுத்தியிருந்தான்..

"இப்படியா ஆட்டி விடுவீங்க..?" பயத்துடன் முறைத்தாள்...

"ஆளைப் பாத்தா மகா தைரியசாலியைப் போல தெரியற.. கடைசியில பாத்தா இம்புட்டுப் பயந்தாங் குளியாய் இருக்கியே.. என்ன..? உன் தெனாவெட்டெல்லாம் வெளிவேசம் தானா..?"

வாகதேவன் வெகு சுவாதீனமாக ஊஞ்சலில் ஏறி அவளை உரசியபடி அமர்ந்தான்.. நிவேதிதாவிற்குள் கிறக்கம் வந்தது.. அவன் சும்மாவும் இருக்காமல் அவள் தோளைச் சுற்றிக் கையைப் போட்டு அவளை இன்னும் அருகாக இழுத்துக் கொண்டான்.. தலையைச் சாய்த்து அவள் கூந்தலின் மல்லிகை வாசத்தை முகர்ந்தவன்...

"மல்லிகைப் பூவின் வாசனையே தனி..! இல்ல..?" என்று அவளிடம் அபிப்ராயம் கேட்கவேறு செய்தான்..

நிவேதிதா அவளின் தாய் வீட்டை மறந்து போனாள்...



# 21

"என்னடா.. பேராண்டி.. ஊஞ்சலாட்டமெல்லாம் பலமாய் இருக்கு போல..?"

உமாபதி அங்கே வந்தார்.. வாகதேவன் அவரை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான்.. அவர் அதைவிட அதிகமாக பலமார்க்கமாக அவனை பார்த்து வைத்தார்..

"இளசுக ஆடற ஊஞ்சலாட்டம் பலமாத்தான் இருக்கும்.. பின்னே.. இந்தக் கிழவர் ஆடற ஊஞ்சலாட்டமா பலமா இருக்கப் போகுதுன்னு கேளுடா பேராண்டி.."

முந்தானைச் சேலையை இழுத்துச் செருகியபடி அங்கே வந்து நின்ற பார்வதியின் பார்வை பற்பல மார்க்கங்களாக உமாபதியின் மீது படிந்தது...

'ஆஹா.. கிழவி வந்திட்டாளே.. இவ இருக்கிறாளன்னு பார்த்துட்டு பேராண்டிகிட்ட வாய் கொடுத்திருக்கணுமோ...'

தன் அவசரப் புத்தியை நொந்து கொண்டார் உமாபதி.. வீட்டுக்கு வந்த மருமகளுக்குத்தான் அவரிடம் பயமில்லாமல் போய் விட்டது.. மருமகளுக்கு மருமகளாக வந்திருக்கும் பேரனின் மனைவி முன்னாலாவது தனது பிம்பத்தை உயர்த்திக் கொள்ளலாமென்று அவர் முனைந்தால் இந்தக் கிழவி அதற்கும் வழி விட மாட்டேன் என்று வழியை மறிக்க வந்து விட்டாளே.. இது அடுக்குமா..?

அவர் நிராசையுடன் பார்வதியைப் பார்த்தார்.. அவரது பார்வையின் இறைஞ்சுதலைக் கண்டு கொள்வேனா என்று அடம் பிடித்த பார்வதி.. பேரனைப் பார்த்து கம்பீரமாக புன்னகைத்தாள்..

'எப்படி..?' அவள் விழிகள் கேட்க..

'தூள்..' என்று பதில் கொடுத்தான் பேரன்..

"ஹி.. ஹி.. பார்வதி.. நீ தோப்புப் பக்கம் போகல..?"

"அந்த வேலையை உங்களைச் செய்யச் சொல்லலா முன்னுதான் வந்தேன்.."

"நான் உரக்கடையை பார்க்க போக வேணாமா..?"

"இதுதான் உரக்கடையா..?"

"சாப்பிட வந்தேண்டி.. மனுசனுக்கு பசி வராதா..?"

"வரும்.. வரும்.. ஆனா சாப்பாடை சமையல்கட்டில சமைச்சு.. சாப்பாட்டு மேசையில பரத்தி வைச்சிருப்பாங்க.. இப்படி வராண்டாவில ஆடற ஊஞ்சலிலேயா பரத்தி வைச்சிருக்காங்க..?"

"நீ என்னதான் சொல்லவர்ற..?"

"சின்னஞ்சிறுசுக ஊஞ்சலாடிக்கிட்டு இருக்கிற இடத்தில உங்களுக்கு என்ன ஜோலின்னேன்..?"

"இதென்னடி வம்பாப் போச்சு.. வீட்டுக்கு சாப்பிட வந்தேன்.. இங்கே வந்து பாத்தா.. பேரன் புதுப் பெண்டாட்டி கூட ஊஞ்சலாடிக்கிட்டு இருந்தான்.. என்னடா பேராண்டின்னு கேட்டுக்கிட்டு இருந்தேன்.."

"இதில என்னடா பேராண்டின்னு கேக்க என்ன இருக்குண்ணேன்..? பேரன் இல்லாத வீட்டுலதான் கிழவன் ஊஞ்சல் விளையாடணும்.. இங்கே பேரனும் இருக்கான்.. பேத்தியும் இருக்கா.. அதனால ஊஞ்சலாட்டத்தை மறந்திட்டு உரக்கடையைப் பார்க்கப் போங்க.."

பார்வதியே கோபமாக இருந்தாள்.. பேரனின் புது மனைவி பெற்றவர்களின் பிரிவில் கண் கலங்கிக் கொண்டிருக்கும் போது பேரன் அனுசரணையாக அருகில் இருந்ததை மனதில் பாராட்டிக் கொண்டிருந்தவளுக்கு.. அதைக் கலைக்க முனைந்த கணவரின் மீது கோபம்.. கோபமாக வந்தது..

அதை உணராத உமாபதி வாயை மூடிக் கொண்டு சாப்பிடப் போகாமல் வாய் விட்டு மாட்டிக் கொள்வதிலேயே குறியாக இருந்தார்.. செல்லமாக மனைவியிடம் பேசுவதாக நினைத்துக் கொண்டு..

"எதைப் பார்க்கப் போகச் சொல்ற பார்வதி.." என்று மனைவியிடம் குழைந்து வைத்தார்...

"ஊம்..? அரசகுளத்தைப் பார்த்துப் போகச் சொல்றேன்.. போதுமா..? இப்பத்தான் ஒன்னுக்கு ஆறா காருக வீட்டில நிக்குதே.. ஆனாலும் உங்க அரச குளத்துக்குப் போகணும்னா காரில போக முடியாதே.. கூட்டு வண்டியைத் தேடிப் பிடிச்சுக் கட்டச் சொல்லவா..? எலே காத்தவராயா.. எங்கேலே அந்தக் கூட்டு வண்டி..?"

அவ்வளவுதான்..உமாபதி ஊஞ்சலை மறந்து வீட்டுக்குள் ஓடியே போய்விட்டார்..

'அஃது..' என்ற வெற்றிப் பார்வையை உமாபதியின் முதுகுப் பக்கம் வீசிவிட்டு வாத்சல்யமான பார்வையை இளையவர்களின் மீது வீசி வைத்தாள் பார்வதி..

"நீங்க ஊஞ்சலாடுங்க.." என்று அவர்களிடம் சொல்லி விட்டு

"இங்கிதம் தெரியாத மனுசன்.." என்று கணவரை முணுமுணுப்பாக அர்ச்சித்தபடி அவள் வீட்டுக்குள் போய் விட்டாள்..

"கில்லாடிப் பாட்டி.." பார்வதியை மெச்சிப் போனான் வாசுதேவன்..

மீண்டும் ஊஞ்சலாட்டம் தொடர்ந்தது.. தோட்டத்தின் சிலுசிலுப்பான காற்றில் அவளின் முந்தானைச் சேலை அவன் முகத்தின் மீது படிந்தது.. கிறங்கிப் போன வாசுதேவனின் கை அவளின் இடுப்பின் மீது படிந்து அழுத்தியது..

நிவேதிதா சங்கடத்துடன் அவன் கையை நகர்த்தி விட்டாள்..



"ஏன்..?" அவன் முகம் சுளித்தான்..

"வெராண்டாவில இருக்கோம்.. திடீர்னு தாத்தா வந்து நின்னதைப் போல மத்தவங்களும் வந்து நின்னுட்டா என்ன செய்யிறது..?"

'இதுவும் சரியாத்தான் இருக்கு..'

அவன் காரணமில்லாமல் ஆட்சேபிக்கவில்லை என்ற நினைவில் அவன் கை விலகியது.. ஆனாலும் அவளை உரசியபடிதான் அவன் அமர்ந்திருந்தான்.. அவனிடமிருந்து வந்த பிரத்யேக வாசனையில் முதல் நாள் இரவை நினைவு கூர்ந்தாள் நிவேதிதா.. அவளுக்குள் வெப்பம் பரவியது.. கடுமூச்சுக்களுடன் கூடிய அந்த நேரத்தை மனதிலிருந்த் அகற்ற முனைந்தவள் பேச்சை மாற்ற விரும்பியவளாக...

"ஆமா.. அரசகுளம் எங்கேயிருக்கு..?" என்று கேட்டாள்..

வாசுதேவனுக்கு தூக்கிவாரிப் போட்டது.. அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.. இவளுக்கு அரச குளத்தைப் பற்றி என்ன தெரியும் என்ற நினைவுடன்

"ஏன்..? உனக்கு அந்த ஊரைப் பற்றித் தெரியுமா..?" என்று கேட்டான்..

"இல்லையே.. பட்.. அங்க நம்ம ரிலேடிவ்ஸ் இருக்காங்கன்னு நினைக்கிறேன்.. ஆம் ஐ கரெக்ட்..?"

"இங்கிலீசை விடவே மாட்டியே.. ஆமாம்.. பயம் வந்தப்ப மட்டும் 'அம்மா'ன்னு தமிழ்ல அலறிவைச்சியே.. அப்ப மட்டும் எப்படி தமிழ் வந்தது.. நீ உன் அம்மாவை 'மம்மி' 'மாம்'ன்னெல்லாம் கூப்பிடுகிற ஆளாச்சே..."

"அது.. அது.. வந்து.."

"விட்டுத்தள்ளு.. ஆனா அரசகுளத்தில நம்ம சொந்தக்காரங்கன்னு யாருமே இல்லை..."

"ஈஸிட்..? அப்புறம் எதுக்காக தாத்தா கூட்ஸ் வண்டியைக் கட்டிக்கிட்டு அங்கே போனார்..?"

"நிறுத்து.. நிறுத்து.. இப்ப என்ன வண்டின்னு சொன்ன..?"

"கூட்ஸ் வண்டி..."

"கூட்ஸ் வண்டியா..? ஹா.. ஹா.."

வாசுதேவன் சிரித்த சிரிப்பில் வீட்டில் உள்ளவர்களெல்லாம் அங்கே வந்து நின்று விடுவார்களோ என்று பயந்து போனாள் நிவேதிதா..

"மெல்லச் சிரிங்க.. யாராவது வந்துடப் போறாங்க.."

"மெல்லச் சிரிக்கிறதா..? நீ கேக்கிற சந்தேகத்துக்கு மெல்லவா சிரிக்க முடியும்..? ஹா.. ஹா..."

"ப்ளீஸ்.. ப்ளீஸ்.."

"கூட்ஸ் வண்டியைக் கட்டிக்கிட்டு.. ஹா.. ஹா.. அரச குளத்துக்கு போறதா..? ஹா.. ஹா..."

நிவேதிதா கெஞ்சக் கெஞ்சக் கேட்காமல் வாகதேவன் சிரித்த சிரிப்பில் நிவேதிதா பயந்ததைப் போலவே நிகழ்ந்து தொலைத்தது...

வாகதேவனின் உரத்த சிரிப்பில் வாஸந்தி அங்கே வந்து நின்றாள்.. அவளைக் கண்டதும் அவசரமாக நிவேதிதா நகர்ந்து உட்கார்ந்தாள்.. வாஸந்தி அதைக் கவனிக்காமல் தமையனின் உரத்த சிரிப்பைக் கவனித்தாள்..

"ஏண்ணே.. எதுக்காக இப்படி வீட்டையே ஆட்டம் காண்பிக்கிறதைப் போலச் சிரிக்க வைக்கிற..?"

"உன் அண்ணி இருக்காளே.. ஹா.. ஹா..."

"அண்ணிதானே.. அவங்க இங்கேதான இருக்காங்க.. அதுக்காக கொண்டாட்டம் வந்தா இந்தச் சிரிப்பு சிரிக்கிற..?"

"அவ இங்கேயில்லாம எங்கே போகப் போறா..? அதுக்குப் போயி கொண்டாடணுமா..? இது வேற வாசு.. ஹா.. ஹா.."

"வேறன்னா என்ன..? சொல்லிட்டுத்தான் சிரியேன்.."

"இவ சொல்றா வாசு..."

"என்னத்தைச் சொல்றாங்க..?"

"நம்ம தாத்தா.. கூட்ஸ் வண்டியக் கட்டிக்கிட்டு அரச குளத்துக்கு எதுக்காகப் போனாருன்னு கேக்கிறா.. ஹா.. ஹா..."

"என்னது..? கூட்ஸ் வண்டியா..?"

இப்போது வாஸந்தி விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்.. 'போச்சுடா..' என்றிருந்தது நிவேதிதாவுக்கு..

'இதுவரைக்கும் இவர் மட்டும்தான் சிரிச்சுக்கிட்டு இருந்தார்.. இப்ப வாஸந்தியும் கூட்டுச் சேர்ந்தாச்சா.. வீடே கூடி வந்து நிற்கப் போகுது..'

வீடு மொத்தமும் வரவில்லை.. கோபிநாதன் வேலையின் நிமித்தம் வெளியே சென்றிருந்தார்.. சாவித்திரி ஸ்டோர் ரூமில் இருந்ததால் அவள் காதுகளை அண்ணன் தங்கையின் சிரிப்புச் சப்தம் எட்டவில்லை.. உமாபதியின் செவிகளை அந்தச் சிரிப்புச் சப்தம் எட்டினாலும்.. வகை தொகையான சாப்பாட்டை விட்டு விட்டு எழுந்து வந்து ஏனென்று கேட்க அவருக்கு மனமில்லை.. அவருக்குப் பரிமாறிக் கொண்டிருந்த பார்வதிக்கு மட்டும் மனமிருந்ததால் அவள் கணவரை அம்போவென்று விட்டு விட்டு வராண்டாவுக்கு வந்து விட்டாள்..



# 22

பார்வதியைக் கண்டதும் அண்ணன்.. தங்கையின் சிரிப்பு அதிகமாகியது.. நிவேதிதாவோ.. பார்வதி.. சம்பந்தப் பட்டக் கேள்வியொன்றைதான் கேட்டுவிட்டது வெளிப்பட்டு விடுமே என்று மனதுக்குள் பயந்தாள்.. பார்வதி இடுப்பில் கைகளை ஊன்றி நின்று சிரித்துக் கொண்டிருந்த பேரனையும்.. பேத்தியையும் பார்த்தாள்...

"அடியாத்தி.. இப்ப எந்தக் கோமாளி வந்து வித்தை காட்டினான்னு அண்ணனும் தங்கச்சியும் இந்தச் சிரிப்பு சிரிக்கிறிங்க..?"

"கோமாளி கூட இம்புட்டுச் சிரிப்பை மூட்டியிருக்க மாட்டான் பாட்டி.. எல்லாம் உன்னால வந்தது.." வயிற்றைப் பிடித்துக் கொண்டு அங்கிருந்த கூடை நாற்காலியில் உட்கார்ந்து விட்டாள் வாஸந்தி..

"என்னால வந்துச்சா..? எது..? சிரிப்பா..?"

"ஆமாம் பாட்டி.. ஹா.. ஹா..."

"இதென்னடி கூத்தா இருக்குது..? நான் பாட்டுக்கு சிவனேன்னு என் புருசனுக்கு சாப்பாட்டப் போட்டுக்கிட்டு இருந்தேன்.. நான் வந்து அண்ணனுக்கும்.. தங்கசிக்கும்.. 'கிச்சுக்கிச்சு' மூட்டிச் சிரிக்க வைச்சேனா..?"

"இனிப் புதுசாத்தான் 'கிச்சுக்கிச்சு' மூட்டணுமாக்கும்..? அதான் அரசகுளத்துக்கு தாத்தா கூட்ஸ் வண்டியக் கட்டிக்கிட்டுப் போன கதை இருக்கே.. அது ஆயிரம் 'கிச்சுக்கிச்சு'க்கு சமானம் பாட்டி.. ஹா.. ஹா.."

"என்னடா பேராண்டி சொல்ற..? உங்க தாத்தன் அரசகுளத்துக்கு கூட்ஸ் வண்டியக் கட்டிக்கிட்டுப் போனாரா..?"

"ஆமா.. ஹா.. ஹா.."

"அப்படின்னு யார் சொன்னது..?"

"வேற யாரு சொல்லுவா..? எல்லாம் கூட்ஸ் வண்டிக்கும்.. கூட்டு வண்டிக்கும் வித்தியாசம் தெரியாத என் அருமைப் பெண்டாட்டிதான் சொல்லுவா.. ஹா..ஹா.."

பார்வதிக்கும் சிரிப்பு வந்தது.. அவளும் கூட்டுச் சேர்ந்து கொண்டு சிரித்ததில் நிவேதிதாவுக்கு நிம்மதி பரவியது..

'அப்பாடி.. பாட்டி கோவிச்சுக்கலை..'

"ஏம்மா நிவேதா.. அப்படியா கேட்ட..?"

"இல்லை பாட்டி.. அது வந்து.."

அரசகுளத்தைப் பற்றித் தான் கேள்வி கேட்டது தவறுதான் என்ற நினைவில் நிவேதிதா தடுமாற.. பார்வதியோ..

"அது கூட்டு வண்டிம்மா.. கூட்ஸ் வண்டியில்ல.. இப்படிச் சொன்னா என் பேரனும் பேத்தியும் சிரிக்கமாட்டாங்களா..?" என்று சிரித்தபடி விளக்கம் சொன்னாள்..

அவள் கோபித்துக் கொள்ளாமல் பேசியதில் நிவேதிதாவுக்கு ஆறுதலாக இருந்தது..

'இந்தப் பாட்டியால் எப்படிக் கோபப் படாமல் இருக்க முடிகிறது..' அவளுக்கு ஒருபக்கம் வியப்பாகவும் இருந்தது.

வாஸந்தியையும் அவள் கடிந்து கொள்ளவில்லை.. வாசுதேவனையும்... அதற்குக் காரணம் இருந்தது.. அவர்கள் இருவரும் அவளுக்குச் சொந்தப் பேரன் பேத்திகள்..

நிவேதிதா அப்படியல்லவே.. அவள் பார்வதியின் பேரன் மனைவி.. அந்த வீட்டுக்கு வாழ வந்திருப்பவள்.. அவள் அந்த வீட்டுக்குப் பெரியவளான பார்வதி பேசிய ஒரு பேச்சிற்கு விளக்கம் கேட்கிறாள் என்றால் அதில் பார்வதிக்கு கோபம் வர வேண்டாமா..?

பார்வதி கோபித்துக் கொள்ளவில்லை.. மாறாக சிரித்த முகத்துடன் அதற்கான விளக்கத்தையும் சொன்னாள்..

"ஏண்டி.. பெரிசா சாப்ட் வேர் இன்ஜினியர்ன்னு பீத்திக்கற.."

"நானொன்னும் பீற்றிக்கலை..."

"சரி.. நீ பீத்திக்கலை.. உன் அப்பா பீத்தினாரே.."

"அதுக்கு இப்ப என்னாங்கறிங்க.."

"அடேங்கப்பா.. அரட்டலெல்லாம் பலமாய் இருக்கு.. பார்த்துக்க பாட்டி.. உன் முன்னாலேயே இவ என்னை இந்த அரட்டு அரட்டறா..."

"போடா.. டேய்.. நிவேதா தங்கமான பொண்ணுடா.. நீதான் இவ வாயைக் கிண்டிக்கிட்டு இருக்க.. யாரு நீ..?"

"நான் யாரு பாட்டி..?"

"அரசகுளத்துக்கு வண்டியைக் கட்டிக்கிட்டுப் போன உன் அருமைத் தாத்தாவோட பேரனாச்சே.. அந்தப் புத்தி அப்படியே இருக்கத்தானே செய்யும்..?"

"என்ன வண்டி பாட்டி..? கூட்ஸ் வண்டியா.. ஹா.. ஹா..."

வாசுதேவன் மீண்டும் சிரிக்க.. தாள மாட்டாத நிவேதிதா.. அவன் கையில் ரகசியமாக கிள்ளினாள்.. அவன் அதற்கும் சிரித்தான்...

"ஏண்டி.. கூட்ஸ் வண்டியை நீ பார்த்ததே இல்லையா..?"

"பார்த்திருக்கேன்.." வெட்கத்துடன் அவள் முணுமுணுத்தாள்...

"நீ பிளைட்டையே பார்த்திருக்கிற ஆளு.. ரயில் வண்டியைப் பார்த்திருக்க மாட்டியா..? அப்புறமும் ஏண்டி கூட்ஸ் வண்டியக் கட்டி இழுத்த..?"



"இல்லை.. இங்கேயிருக்கிற வண்டிக்கும் அந்தப் பெயர்தானோங்கிற எண்ணம்தான்.."

"ஹா.. ஹா.. நீயா எதையாவது நினைக்கக்குவியா..?"

இவன் இன்று முழுவதும் இதை வைத்தே ஓட்டப் போகிறான் என்ற நினைவுடன் முகம் சிவந்தாள் நிவேதிதா.. அதற்குள் வகை தொகையான சாப்பாட்டை ஒரு பிடி பிடித்து விட்டு..

"ஹாவ்.." என்ற ஏப்பத்துடன் அங்கு வந்து சேர்ந்தார் உமாபதி..

வாஸந்தியும் பார்வதியும் அங்கே இருப்பதைப் பார்த்தவர் தானும் அந்த அரட்டைக் கச்சேரியில் சங்கமிக்க விரும்பியவராக டகாலென்று அங்கிருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்து விட்டார்.. வாஸந்தி ஒரு தினுசாக அவரைப் பார்த்து விட்டு வாய் பொத்திச் சிரித்தாள்.. பேத்தியின் பார்வையில் திருதிருத்தவர் மனைவியைப் பார்த்தார்.. அவளோ முறைத்தாள்..

'இவ என்னைக்குத்தான் குளுகுளுன்னு பார்த்திருக்கிறா..? ம்ஹூம்.. என் பேரன் கொடுத்து வைத்தவன்..'

காதலுடன் வாசுதேவனை ரகசியப் பார்வை பார்த்துக் கொண்டிருந்த நிவேதிதாவை பொறாமையுடன் பார்த்து வைத்தவர்... பேச்சில் கலந்து கொள்ள விருப்பம் கொண்டவராக...

"என்னடா தேவா.. கட்டிடமே கலகலத்துப் போகிறாப்புல வீரபாண்டிய கட்ட பொம்மன் சிரிப்பை சிரிச்ச.. என்ன விசயம்..?" என்று கேட்டார்..

அவனோ அவருக்குப் பதில் சொல்லாமல் பார்வதியைப் பார்த்து

"கேட்டுக்கிட்டியா பாட்டி.. 'வீரபாண்டிய கட்ட பொம்மனாம்'" என்று எடுத்துக் கொடுத்தான்...

"கவனிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன்டா பேராண்டி.." அவள் பல்லைக் கடித்தபடி சொன்னாள்..

"இவ என்னத்துக்குடா பவளக்கொடி நாடகத்துல வர்ற அல்லி ராணியப் போல இந்த முறைப்பை முறைக்கிறா.." அவர் விளங்காமல் கேட்டார்.. அவனோ..

"பார்த்துக்க பாட்டி.. 'பவளக் கொடி'யாம்" என்று அடுத்து எடுத்துக் கொடுத்தான்..

"பாக்காம இருப்பேனாடா.. அன்னைக்கு பாக்காம விட்டதினாலதான இந்த வீட்டுக் கூட்டு வண்டி அரசகுளத்தப் பாத்து ஓடுச்சு..? அதுக்கப்புறமும் பாக்காம இருக்க இந்தப் பார்வதி என்ன கேணச்சியா..?" பார்வதி பதில் குரல் கொடுத்தாள்...

உமாபதிக்கு அப்போதுதான் சுர்ரென்று புத்தியில் விவரம் உறைத்தது.. அவர் யதார்த்தமாகச் சொன்ன வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகத்திலும்..

பவளக் கொடி நாடகத்திலும் நடித்த நடிகையைத்தான் அவர் பார்க்கப் போனதாக பார்வதி சொல்லிக் கொண்டிருந்தாள்.. அதை மறந்து போய் வாய் விட்டு விட்டவர்.. அதை மீட்க முடியாத ஏக்கத்தோடு பேரனைப் பார்த்தான்...

"இப்படி என்னைப் பார்த்து வைச்சா என்ன அர்த்தம்..?" அவன் கேள்வி கேட்டான்..

"நாடகத்தப் பத்திக் கேட்டுக்கிட்டும்.. பார்த்துக் கிட்டும் இருக்கிறது பாட்டிதான்.. அதனால பார்வையை அந்தப் பக்கமா திருப்புங்க..." என்று கறாராக அவன் சொல்லி விட்டதும்.. பேத்தியிடமிருந்து உதவிக்கரம் நீளாதா என்று வாஸந்தியின் பக்கமாக பார்த்து வைத்தார் உமாபதி...

"ஆயிரம் தான் நான் உங்க ஆசை பேத்தியா இருந்தாலும் தாத்தா.. அரசகுளத்துக்கு கூட்டு வண்டிய ஓட்டிக்கிட்டுப் போனதுக்கெல்லாம் சப்போர்ட் பண்ண மாட்டேன்.. தாத்தா.. ஏன்னா.. நானும் ஒரு பொண்ணாச்சே... உங்க காலத்தில நீங்க கட்டின கூட்டு வண்டிய என் காலத்தில நாளைக்கு என் கழுத்தில தாலிகட்டப் போகிற ஆளு.. காரைக் கட்டி ஓட்டிட்டுப் போனா நானென்ன பண்றது..? அதனால இந்த விசயத்தில நான் பாட்டிக்குத் தான் சப்போர்ட்..." என்று சொல்லி விட்டாள் வாஸந்தி..

'வேறு எந்த விசயத்தில் தான் நீ எனக்கு சப்போர்ட் பண்ணியிருக்க..?' என்று கேட்கத்தான் ஆசைப்பட்டார் உமாபதி...

ஆனால் அந்த வீட்டின் மிகப்பெரும் பலம் கொண்ட சக்தியான வாசுதேவனுக்கு அவள் அன்புத்தங்கை என்பதினாலும்.. அடுத்த பெரும் சக்தியாக விளங்கும்.. பார்வதியுடன் அவள் கூட்டணி போட்டிருப்பவள் என்பதினாலும் கேட்க ஆசைப்பட்டதை கேட்காமலே தொண்டையில் விழுங்கினார்...

புதிதாக வந்திருக்கும் மருமகளாவது அவர்மீது அனுதாபம் காட்ட மாட்டாளா என்ற துளியூண்டு நம்பிக்கையுடன் அவர் நிவேதிதாவைப் பார்த்தபோது அவள்.. மரியாதையுடன் எழுந்து நின்று..

"என் தாத்தா.. நீங்க அரச குளத்துக்கு கட்டிக்கிட்டுப் போன வண்டிக்குப் பெயர் கூட்ஸ் வண்டியா.. இல்லை கூட்டு வண்டியா..?" என்று கேட்டு வைத்தாள்..

இந்தப் பொண்ணுக்கு எப்படி.. இப்படியொரு சந்தேகம் வந்தது என்று அவர் திகைத்துப் போனார்..

'கேட்டதும்தான் கேட்டுச்சு.. இப்பப் போயா இப்படியொரு சந்தேகத்த கேட்டு வைக்கனும்..? இவ சும்மாவே சாமியாடுவா.. இப்ப உடுக்குச் சத்தம் கூட்டும் சேர்ந்திருச்சா.. இனி விடிய விடிய வேப்பிலைதான்..'



மலையேறப் போகும் பார்வதியை நினைத்து அவர் தலையில் கை வைத்தபடி அப்படியே உட்கார்ந்து விட்டார்..

"கேட்டுக்கிட்டிங்களா..?" பார்வதி வெடித்தாள்..

"அந்த பாழாப் போன நாடகங்கள இன்னும் மறக்காம நினைவில வைச்சிருக்கீங்களே.. இதுக்கு என்ன அர்த்தம்..?"

"என்னடி அர்த்தம்..?"

"வீட்டுக்கு வந்திருக்கிற பேரன் பொண்டாட்டி சந்தேகம் கேக்கிறாளே.. அந்த சந்தேகத்துக்கு என்ன பதிலைச் சொல்லப் போறிங்க..?"

"அவ சந்தேகப் பட்டுக் கேட்டது என்னையில்லைடி.. வண்டியைத் தான்டி.. அது கூட்ஸ் வண்டியா.. இல்ல கூட்டு வண்டியாங்கிறதுதான் அவளோட சந்தேகம்..."

அவர் அழமாட்டாத குறையாக விளக்கம் சொல்லியும் அந்த விளக்கம் அங்கே எடுபடவில்லை..

## 23

நினைத்து நினைத்துச் சிரித்துக் கொண்டிருந்தான் வாசுதேவன்... அவன் சிரிப்பதைப் பார்த்தபடி அறைக்கதவைத் தாழிட்டு விட்டு கட்டிலுக்கு அருகே வந்து தயங்கி நின்றாள் நிவேதிதா.. அவள் நிற்பதை நிமிர்ந்து பார்த்தவன்...

"கட்டில்ல உட்கார காலம் நேரம் பாக்கறியா..?" என்று சிரித்தபடி கேட்டான்..

அன்று முழுவதும் அவன் சிரித்துக் கொண்டிருக் கிறான் என்று நினைத்தபடி கட்டிலின் ஓரமாக ஓடத் தயாராக இருப்பதைப் போல் நுனிப் பகுதியில் அமர்ந்தாள் நிவேதிதா..

"என்ன..? விட்டா பெங்களூருக்கு ஓடிப் போயிருவ போல இருக்கு..."

வாசுதேவன் கைநீட்டி.. அவள் இடைப்பகுதியில் கைகொடுத்து இழுத்து அணைத்துக் கொண்டான்.. அவன் கைபிடிக்குள் சிக்கியவளின் முகச் சிகப்பில் எதைக் கண்டானோ.. அவன் சிரிப்பு மறைந்து அங்கே சிருங்காரம் குடியேறியது..

அவள் கன்னத்தில் விரல் வைத்து கோடிழுத்தவன்..

"புரியலைடி..." என்றான்...

எது என்று அவள் கேட்கவில்லை.. அவனே அதைச் சொல்லட்டும் என்ற நினைவுடன் பதில் சொல்லாமல் படுத்திருந்தாள்..

"இன்னைக்குப் பூராவும் உன்னைப் பார்த்துக்கிட்டுத் தான் இருக்கேன்.. கூட்டுக் குடும்பம்னா பிடிக்காதுன்ன சொன்னவ.. என் தாத்தா.. பாட்டி.. தங்கைகூட.... இத்தனை இணக்கமா பேசிப் பழகற.. என் அம்மாகிட்ட பாசமா இருக்கிற.. என்னடி ஆச்சு..? நான்தான் பணக்கார உழவர் மகனாப் போயிட்டேன்.. போதாக்குறைக்கு மில் அதிபன் வேறு.. உரக்கடை.. செங்கல் சூளைன்னு நீ பெருமையாப் பீத்திக்கிறதுக்கு ஏத்தாப்புல பிஸினெஸ் மேனா இருக்கேன்.. அதனால இந்த உழவன் மகனைக் கட்டிக்கிட்டதில உனக்கு எந்தவிதமான மனக்குறையும் இருந்திருக்காதுதான்.. சீச்சீ கிராமமான்னு சொன்னவளுக்கு கிராமத்தில இருக்கிற என் வீட்டைப் பிடித்துப் போயிருக்கும் தான்.. வீடா இது.. பளிங்கு மாளிகையாச்சேன்னு உன் அப்பா.. யார்கிட்டயோ போனில் பெருமை பீற்றிக்கிட்டு இருந்தார்.. உங்களுக்கெல்லாம் இதுதாவே வேணும்..? நாலு பேரிடம் பெருமை பீற்றிக்கனும்.. பார்.. நான் என்ன மாதிரியான வாழ்க்கையை வாழறேன் பார்ன்னு சொல்லிக்கனும்.. அதுக்காகத்தானே நீங்கள்ளாம் ஆசைப் படறிங்க..? வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழ்ந்து பார்க்கனும்ன்னு உங்கள்ல யாராவது நினைச்சுப் பார்த்திங்களாடி..?"

'நான் நினைத்துப் பார்த்தேன்..' நினைத்துக் கொண்டாள் நிவேதிதா...

'வாழ்க்கையை வாழ்க்கையாய் வாழனுமுன்னு நான் நினைத்துப் பார்த்தேன்.. கான்க்ரிட் பூசின மனுச மனங்களின் மத்தியிலே உயிர்ப்பூவாய் உயிர்ப்போடு வாழனும்னு நான் நினைத்துப் பார்த்தேன்.. செயற்கையாய் எல்லாவற்றையும் நான்கு சுவர்களுக்குள் கொண்டு வரும் மனிதரின் மத்தியில் இயற்கையோடு இசைந்து வாழனும்னு நான் நினைத்துப் பார்த்தேன்.. இதெல்லாம் உனக்குத் தெரியாது.. உன்னைத்தவிர மத்தவங்களுக்குத் தெரியும்.. இப்ப இதையெல்லாம் நான் சொன்னால் நீ பொய்யின்னு சொல்வ.. உன் பணத்திலயும்.. சொத்திலயும்.. ஸ்டேட்டஸிலயும்.. செல்வாக்கிலயும் மயங்கிப் போய் அதைத் தக்க வைச்சுக்கறதுக்காக நான் சொல்கிறேன்னு சொல்லுவ.. என்னால தாங்கிக்கவே முடியாது.. அதுக்குப் பதிலா உன் பார்வையில் திமிர் பிடிச்சவளாவே நான் இருந்துட்டுப் போறேன்...'

நிவேதிதா புரண்டு படுத்தாள்.. அவன் பக்கமாக திரும்பி.. அவன் முகத்தைப் பார்த்தாள்.. அதில் கோபமோ.. வெறுப்போ.. இல்லாததில் வாசுதேவன் குழம்பிப் போனான்..

"வாய்க்கு வாய் உங்க வீடு.. உங்க வீடுன்னு சொல்கிறிங்களே.. இது உங்க வீடு மட்டும்தானா..?"

"பின்னே..? உன்வீடா..?"

"ஆமாம்.. நேத்துக் காலையில வரைக்கும் தான் இது உங்கவீடு.. நேத்துக் காலையில என் கழுத்தில தாலி ஏறினதுக்கு அப்புறமா இது தான் என்வீடு.."



அவன் வேட்கையுடன் அவளை இறுக்கிக் கொண்டான்.. அவனது நெருக்கத்தில் கிளர்ச்சியுற்ற நிவேதிதாவின் முகத்தில் தெரிந்த நெருக்கத்தில் அவனது வேகம் அதிகமானது...

மறுநாள் காலையில் அவர்களின் தோப்பையும்.. தோட்டத்தையும் அவளுக்குச் சுற்றிக்காட்ட அழைத்துப் போனான் வாசுதேவன்..

## 24

"மௌனமான நேரம்...
இளமனதில் என்ன பாரம்..?
மனதில் ஓசைகள்..
இதழில் மௌனங்கள்..
ஏனென்று கேளுங்கள்..."

தோப்பு வீட்டிலிருந்த ரேடியோவில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.. கிணற்றோரமாக இருந்த கயிற்றுக் கட்டிலின் மீது அருகருகே அமர்ந்திருந்த வாசுதேவனையும்.. நிவேதிதாவையும் அந்த மௌனம் ஆக்ரமித்து ஆளுகை செலுத்திக் கொண்டிருந்தது.. வேலய்யன் வெட்டிக் கொடுத்த இளநீரை.. கையில் வாங்கிக் கொண்ட நிவேதிதாவின் மனம் ததும்பிக் கொண்டிருந்தது...

சற்றுமுன் நடந்த ஆலிங்கனத்தில் அவள் மனம் நிலை கொண்டிருந்தது.. வாசுதேவனின் ஆண்மை நிறைந்த நெருக்கத்தின் சுவையை அவள் மனம் ரசித்து ருசித்துக் கொண்டிருந்தது...

" இளமை சுமையை - மனம்
தாங்கிக் கொள்ளுமோ...
புலம்பும் அலையை - கடல்
மூடிக் கொள்ளுமோ.."

பாடல் தவழ்ந்து அவர்களின் மனம் வருடிக் கொண்டிருந்தது.. இளநீரை அருந்திக் கொண்டிருந்த வாசுதேவனின் துளைக்கும் விழிகளைப் பார்க்க முடியாமல் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள் நிவேதிதா.. தென்னந் தோப்பின் தென்றல் காற்று.. மார்கழி மாதத்தின் ஊதக் காற்றைப் போலக் குளிர் தந்து அவர்களின் உடலைத் தழுவிச் சென்றது.. வாசுதேவனின் விழிகளில் தெரிந்த தாகத்தில் நிவேதிதா கிளர்ந்தாள்.. அவன் பார்வை காட்டிய வேகத்தில் அவள் தேகம் தகித்தது...

"கொழிக்கும் ஓர் கிளி...
கொதிக்கும் நீர் துளி..
ஊடலான மார்கழி..
நீளமான ராத்திரி..
நீயும் வந்து ஆதரி..."

அவன் இமைகள் மூடித்திறந்து அவளின் ஆதரவை வேண்டின.. அவன் அழைப்பில் கிளர்ந்து எழுந்த உணர்வின் அலைகளில் நிவேதிதா தவித்தாள்.. ஏதோ வேலையாக அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்த செல்வியைக் காட்டி அவள் விழிகள் அவனிடம் கெஞ்சின.. அவன் பிடிவாதமாய் தலையாட்டி அதை மறுத்தான்.. அந்த மறுப்பில் தெரிந்த பிடிவாதத்தில் அவள் மனதில் இரவின் நினைவுகள் வந்து இம்சை செய்தன.. அவன் விழிகள் அவள் முகத்தையே ஊடுறிவித் துழாவியதில் அவள் முகம் வெட்கத்தில் சிவந்தது..

"இவளின் மனதில் - இன்னும்
இரவின் தேமோ..
கொடியில் மலர்கள் - குளிர்
காயும் நேரமோ..."

வாசுவேதன் மெதுவாக நகர்ந்து அவளருகில் ஒட்டி உட்கார்ந்தான்.. நிவேதிதாவின் கைகள் நடுங்க ஆரம்பித்தன.. அவள் விழிகள் கள்ளத்தனத்துடன் அலை பாய்ந்தன...

வேலய்யனும் செல்வியும் அவர்களின் நெருக்கத்தைக் கண்டு கொண்டால் என்ன செய்வது என்ற லஜ்ஜையுடன் அவள் நகர முயன்றாள்.. வாசுதேவனின் கை மெதுவாக ஊர்ந்து அவளின் தளிர் விரல்களைப் பற்றிக் கொண்டன.. பஞ்சு போல மிருதுவாக இருந்த அவளின் உள்ளங்கையில் அவன் கைகள் பதிந்து அவள் விரல்களோடு பின்னிக் கொண்டன...

"பாதை தேடியே...
பாதம் போகுமோ..
கூடலான நேசமோ..
கனவு கண்டு கூசுமோ..
தனிமையோடு பேசுமோ..
இது மௌனமான நேரம்..
இளம் மனதில் என்ன பாரம்..?"

பாடல் முடிவடைந்து விட்டது.. நிவேதிதா நகர்ந்து எழுந்து கொட்டிக் கொண்டிருந்த பம்ப்பு செட்டின் அருகில் சென்று நீர் விழுந்து ததும்பி ஓடிக் கொண்டிருந்த அகன்ற சிமிண்டுத் தொட்டியை எட்டிப் பார்த்தாள்..

"நீச்சலடிக்கலாம்.. அவ்வளவு பெரிய தொட்டி.."

அவள் காதோரமாக கேட்ட வாசுதேவனின் குரலில் திடுக்கிட்டுத் திரும்பியவளை கீழே விழுந்து விடாமல் அவன் தாங்கி அணைத்துக் கொண்டான்.. செல்வி பார்த்து விடுவாள் என்ற நினைவில் விலகிக் கொண்டாள் நிவேதிதா.. அவன் கண்கள் ஏமாற்றத்தைப் பிரதிபலித்தன..

"நீ என் பெண்டாட்டிடீ.." அடிக்குரலில் சீறினான்..

"யார் இல்லேன்னு சொன்னது..?" கன்னங்கள் சிவக்க அவள் கூறினாள்..



அவளின் பதிலில் அவன் மனம் திருப்தி கொள்வதை உணர்ந்தான் வாசுதேவன்... அவன் அவளுக்குத் தனிப்பட்டவன்.. பிரத்யேகமானவன்... அவளுடைய கணவன் என்ற நினைவில் அவன் மனம் கனிந்தது.. இந்த ரீதியில் போனால் எப்படி அவளை பழிவாங்குவது என்று அவன் அறிவு கேட்க.. அதையெல்லாம் அப்புறமாக பார்த்துக் கொள்ளலாம் என்று அவன் மனது அறிவை அசட்டை செய்தது...

சட்டென்று அவன் நிவேதிதாவை தண்ணீர் தொட்டிக்குள் தள்ளி விட்டு விட்டான்.. அவள் மூழ்கி மூச்சுத்திணறி தண்ணீருக்கு மேல் தலைதூக்கிய போது அவனும் உள்ளே குதித்து விட்டான்...

"என்னங்கத்தான்.. இப்படித் தள்ளி விட்டுட்டிங்க.."

முகத்தில் வழிந்த நீரை வழித்து விட்டபடி கேட்டவளை ஆசையுடன் நெருங்கினான்.. அவனுடன் நீரில் அமிழ்ந்த போது நிவேதிதா அவளாக இல்லை.. ஆனந்த லாகிரியில் அவள் அமிழ்ந்து கொண்டிருந்தாள்.. வாசுதேவனின் இறுகிய அணைப்புக்குள் அடங்கிய போது அவளுக்கு அனைத்தும் மறந்து விட்டது..

"இப்படின்னு சொல்லியிருந்தா மாற்று டிரெஸ் கொண்டு வந்திருப்பேன்.." என்று சிணுங்கினாள்..

"என் டிரஸ்ஸை மாற்றிக்க.." அவன் இலகுவாகச் சொன்னான்..

"உங்க டிரெஸ்ஸா..? எங்கேயிருக்கு..?" அவள் திகைத்தாள்...

"இங்கேதான்.. தோப்பு வீட்டின் மாடியில எனக்குன்னு ரூம் இருக்கு.. வாரத்துக்கு ஒரு தடவையாச்சும் நாங்க குடும்பத்தோட இங்க வந்து நாள் பூராவும் இருந்துட்டுப் போவோம்.. அதனால மாடி ரூமில கட்டில்.. மெத்தை.. தலையணை.. பாய்ன்னு எல்லாம் இருக்கும்.. பொதுவா எல்லாருமே கயிற்றுக் கட்டில்களை இழுத்துப் போட்டு போர்வையை விரிச்சு தலையணையைப் போட்டு படுத்து உறங்கிருவாங்க.. எனக்கு மாடி ரூம்தான்..."

"நீங்களும் வாரத்துக்கு ஒருதரம் இங்கே வருவீங்களா..?"

"ஊஹூம்.. ரெண்டு நாளைக்கு ஒரு தடவையாது இங்கே வந்திட்டுத்தான் போவேன்.. முதல்லயெல்லாம் தினமும் வருவேன்.. மில்லை ஆரம்பிச்சபின்னாலே ஒருநாள் விட்டு ஒருநாள்தான் இங்கே வர முடியுது.."

இயல்பாகத்தான் அவன் சொன்னான்.. நிவேதிதாவும் அவளை விட இயல்பாகத்தான் அந்தச் செய்தியைக் கேட்டுக் கொண்டாள்.. சாதாரணமான விவரம் சொல்லி.. விரவம் கேட்டுக் கொள்ளும் உரையாடலாகத்தான் அது இருந்தது.. ஆனால் அதன் விதை நிவேதிதாவின் மனதில் ஆழமாக ஊன்றிவிடும் என்றோ.. ஒரு நாளின் ஒரு பொழுதில் அது மரமாக வெளிப்பட்டு விடும் என்றோ அவனும் நினைக்கவில்லை.. அவளும் நினைக்கவில்லை..

நினைத்துப் பார்க்காததெல்லாம் நடந்து விடுவதுதான் வாழ்க்கை.. யார் நினைவு எப்படிப் போகுமென்று யாரறிவார்..?

அதை அறிந்து கொண்டு விட்டால் வாழ்க்கையின் ருசியே மாறிப் போய் விடும்தானே.. அடிகள் விழுந்தாலும் அதுவும் வாழ்வின் கொடைதானே...

## 25

தோப்பு வீட்டின் மாடியறை மிகப் பெரியதாக பால்கனியுடன் கூடிய அறையாக இருந்தது.. மாடிப் படிகளின் முடிவில் இருந்த ஹாலில் தான் அந்த அறைக்கான கதவு இருந்தது.. ஹாலுக்கென்று தனிப்பட்ட கதவு எதுவும் இருக்கவில்லை.. சில கூடை நாற்காலிகள் போடப்பட்டிருந்த அந்த ஹாலில் நண்பர்கள் வந்தால் உட்கார்ந்து பேசுவார்களென்று வாசுதேவன் கூறினான்.. அப்போது அவர்களுக்கான சாப்பாட்டை செல்விதான் சமைத்துத் தருவாளென்றும் அவன் சொன்னான்...

பெரியதாக இருந்த அறையின் சாவி வாசுதேவனிடம் தான் இருந்தது.. அதைத் திறந்தபடியே.. அவள் முகம் பார்த்தவன்..

"நான் வந்திருக்கிறப்ப மாடிக்கு வரும் வேலைக்-காரம்மா கூட்டிப் பெருக்கி வைச்சிருவாங்க.." என்றான்..

அறையின் சுவர் அலமாரியைத் திறந்து அதிலிருந்த கைலியையும்.. சட்டையையும் எடுத்து அவளிடம் தந்தவனின் கண்களில் மயக்கம் இருந்தது...

"இங்கேயே மாத்திக்கடி.." என்றான்..

"ஆசை.. தோசை.. அப்பளம்.. வடை.." அவள் குளியலைறக்குள் ஓடி விட்டாள்..

வாசுதேவனின் முகத்தில் சிரிப்பு இருந்தது.. அவளுடன் விளையாடுவதை அவன் மனம் விரும்பி ரசிப்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. இதுதான் பழிதீர்க்கிற லட்சணமா என்று தன்னைத்தானே அவன் கேட்டுக் கொண்டிருந்த போது.. ஈரப் புடவையை அலசிப் பிழிந்து தோளில் போட்ட வண்ணம் அவனது கைலியையும் சட்டையையும் உடுத்திக் கொண்டு நிவேதிதா அறையை விட்டு வெளியே வந்தாள்..

அவளைத்தின்று விடுவதைப் போலப் பார்த்த அவன் பார்வையில் முகம் சிவந்தபடி பால்கனிக்குப் போய் சேலையை விரித்துக் காயப்போட்டாள்..

தொளதொளவென்ற அவன் சட்டையும்.. கைலியுமாக விரித்து விடப்பட்ட கூந்தலுடன் இருந்தவளை ரசனையுடன் பார்த்தான் அவன்..

"என்னவோ.. தீவுப் பெண் போல இருக்கேடி.."



அவன் நெருங்க முற்பட்டபோது அவள் அறைக்குள் ஓடிவிட்டாள்.. நிதானமாக பால்கனிக் கதவையும்.. ஹாலின் கதவையும் அடைத்து விட்டு அவளை அவன் நெருங்கிய போது.. அவள் பலவீனமாக மறுத்தாள்...

வாசுதேவன் அவளது பலவீமான மறுப்புக்களை அலட்சியம் செய்து முன்னேறினான்.. அவனது வெற்று மார்பில் படிந்த அவளது முகத்தின் ஈரத்திவலைகளில் அவனுக்குள் மோகத்தீ பற்றிக் கொண்டது.. குளிர்ந்த நீர்.. வெப்பத்தை உண்டாக்குவது கூடலில் மட்டுமே கூடும்..

அவர்கள் திரும்பவும் குளித்து உடைமாற்றி.. ஈரக் கூந்தலைத் துவட்டிய போது..

"இது மூணாவது குளியல்.." என்று முணுமுணுத்தாள் நிவேதிதா..

"இருந்தா என்ன..?" புருவங்களை உயர்த்தி மிரட்டுதலாக அவளை வினவினான் வாசுதேவன்...

"ஹப்பா.. எல்லாமே அடாவடிதான்.." ரசித்துச் சொன்னாள் நிவேதிதா..

"எல்லாமேன்னா..? ஊம்..?" அவன் கேட்டபோது அவளுக்கு வெட்கம் பிடுங்கித்தின்றது..

பிற்பகலில் வீடு திரும்பிய போது.. நிவேதிதாவுக்கு கால்கள் தரையில் பாவாமல் மிதக்கும் உணர்வு ஏற்பட்டது.

"கொஞ்சம் ரெஸ்ட் எடு.. நான் மில் வரைக்கும் போயிட்டு வந்திடறேன்.."

அவள் கன்னம் தட்டி அவன் சொன்னபோது அவள் பூரிப்புடன் தலையை ஆட்டிச் சம்மதம் சொன்னாள்..

"சமத்து.." அவன் மெச்சிப் போனான்...

அவன் சொன்ன சமர்த்து எதுவென்று அவன் கண்கள் சொல்லிய ரகசியச் செய்தியில் அவள் முகம் இன்னும் அதிகமாக சிவந்து போனது.. வெட்கச் சிகப்புடன் அவனுக்கு கையாட்டி விட்டு.. வீட்டுக்குள் போனாள் நிவேதிதா.. ஹாலில் யாரோ ஒரு பெண்மணியுடன் பேசிக் கொண்டிருந்த சாவித்திரி இவளைக் கண்டதும் ஆதுரத்துடன் புன்னகைத்தாள்..

"வாம்மா.. தோப்பைச் சுத்திப் பார்த்துட்டியா..?"

"ம்ம்ம்.." வெட்கச் சிகப்பு கன்னத்தில் பிரதிபலிக்க செம்மையான முகத்துடன் தலையாட்டினாள் நிவேதிதா..

வந்திருந்த பெண்மணியின் கூரிய பார்வை அதைக் கண்டு கொண்டது.. அவளின் கண்களில் கோபம் தெரிந்தது...

'இந்தம்மா எதுக்காக என்மேல் கோபப்படறாங்க..?' நிவேதிதா திகைத்தாள்..

"சொர்ணம்.. என் மருமகளைப் பார்க்கனும்.. என் மருமகளைப் பார்க்கனுமுன்னு இத்தனை நேரமாத் தவிச்சுக்கிட்டு இருந்தியே.. இவதான் என் மருமகள்.." பெருமையோடு அறிமுகப்படுத்தி வைத்தாள் சாவித்திரி..

"காலையிலே தோப்பைச் சுத்திப் பாக்கப் போன உன் மருமகள்.. சாயங்காலமா திரும்பி வந்திருக்காளே.. ஒருநாள் பொழுது முழுக்கவா தோப்பைச் சுத்திப்பார்த்தா..? கால் வலிச்சிருக்கப் போகுது சாவித்திரி.. தைலம் தேச்சு விடு.." இடக்காகச் சொன்னாள் அந்த சொர்ணம்..

நிவேதிதா ஒருநாள் முழுவதும் தோப்பைச் சுற்றிப் பார்த்ததில் சொர்ணத்திற்கு எதற்காக அவ்வளவு ஆட்சேபனை வரவேண்டும் என்று புரியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டாள் நிவேதிதா..

"தைலத்தை என் பேத்திக்குத் தேச்சுவிட வேணாம் சொர்ணம்.. என் பேரனுக்குத்தான் தேச்சு விடனும்.." என்றபடி மாடியிறங்கி வந்தாள் பார்வதி...

அவள் பின்னாலேயே வால் பிடித்துக் கொண்டு வந்த வாஸந்தி..

"அண்ணி.." என்று நிவேதிதாவைக் கட்டிக் கொண்டாள்...

நிவேதிதாவும் பதிலுக்கு பிரியத்துடன் புன்னகை செய்ய.. அந்த அண்ணி.. நாத்தனாரின் பிரியத்தை எரிச்சலுடன் பார்த்து வைத்தாள் சொர்ணம்...

"ஏன் பெரியம்மா.. தென்னமரத்தில தேள் கொட்டினாத்தான் பனமரத்தில நெறி கட்டும்.. உன் பேரன் பெண்டாட்டி தோப்பச் சுத்திப் பாத்தா உன் பேரனுக்கா கால்வலி வரும்..?" சொர்ணம் பார்வதியிடம் கேட்டாள்..

"வரும்டியாத்தா.. சுத்திப் பாத்தது என் பேத்தியா இருக்கலாம்.. ஆனாச் சுத்திக்காட்டினது என்பேரனாச்சே.. அவன் பெண்டாட்டியை நடக்கவா விட்டிருப்பான்..? இடுப்பில கை கொடுத்து அலேக்கா தூக்கிக்கிட்டு இல்ல சுத்திக் காட்டியிருப்பான்..? அப்ப கால்வலி யாருக்கு வரும்..?""

பார்வதி சொன்ன விதத்தில் நிவேதிதாவின் வெட்கச் சிகப்பு அதிகமானது.. சொர்ணத்தின் முகம் கடுகடுத்தது.. நிவேதிதாவை ஒரு சொல் சொல்ல விடாமல் பார்வதி அவளை அடைகாத்ததில் வந்த கோபத்தை அவள் வேறு விதத்தில் காண்பித்தாள்..

"அது சரி பெரியம்மா.. பெரியப்பாவ கண்ணிலயே பாக்க முடியறதில்ல.. திரும்பவும் அரசகுளத்துப் பக்கம் வண்டியக் கட்டிட்டாரா..?"

சொர்ணத்தின் கேள்வியில் சாவித்திரி முகம் ஜிவுஜிவுக்க ஏதோ பேசப் போனாள்.. நிவேதிதாவுக்கு அரசகுளத்து வண்டியைப் பற்றி முழுவதுமாக எதுவும் தெரியாவிட்டாலும் அந்த சொர்ணம் பார்வதியின் மனைதப் பாதிக்கும் எண்ணத்தில் எதையோ கேட்டு விட்டாள் என்பது மட்டும் புரிந்தது...



# 26

எப்படி அடுத்தவரின் வீட்டுக்குள் வந்து சட்டமாக அமர்ந்து கொண்டு அவர்களைப் பத்தியே அவதூறாய் பேச முடிகிறது என்று ஆச்சரியப்பட்டுப் போனாள் நிவேதிதா.. சொர்ணத்தின் மனோ தைரியத்தில் ஏனோ நிவேதிதாவுக்கு அந்த சொர்ணத்தைப் பிடிக்காமல் போய் விட்டது..

பார்வதி அதைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளவேயில்லை.. சாவித்திரியை அமைதிப் படுத்தும் விதமாக இமை மூடித் திறந்தவள்.. சொர்ணத்தைப் பார்த்து..

"அரச குளத்தில அவருக்கு என்னடியம்மா வேலை இருக்கப் போகுது..? அதான் உன் புருசன் இப்ப வேற திக்கில தாவிக்கிட்டு இருக்காராமே..? அதனால கூட்டு வண்டியில போனா உன் புருசனை வலை போட்டுத் தேடிப் பிடிக்கிறது கஷ்டம்ன்னு.. மனுசன் காரைப் போட்டுக்கிட்டு ஊர் ஊராத் தேடிப் போயிருக்கார்.. உன் புருசம் எம்புட்டா உனக்குத் தகவல் சொல்லுவார்.. நீ கவலைப்படாம உன் வீட்டைப் பார்த்துப் போ.." என்று சொர்ணத்தை விட படு இடக்காகப் பதில் சொன்னாள்..

சொர்ணத்தின் முகம் வெளுத்து விட்டது.. அவள் நிவேதிதாவை சங்கடத்துடன் பார்த்தாள்..

'வீட்டுக்கு வாழ வந்திருக்கிற பேரன் பெண்டாட்டி முன்னாலே இந்தக்கிழவி என்னச் சொல்லிக் காட்டுதே..' மனம் காய்ந்தாள்..

"என்னடிம்மா.. பதிலைக் காணோம்..? காலையில பெரியப்பா வீட்டுக்கு வந்தவ சாயங்காலம் வரைக்கும் சிராடிக்கிட்டு இருக்கியே.. உனக்கு வீட்டில வேலை ஏதும் இல்லியா..? அதுசரி.. உனக்கு என்ன வேலை இருக்கப் போகுது..? உன் பொண்ணு காலேஜிகேண்டினே கதின்னு கிடக்குறா... உன் புருசன் இன்னைக்கு ஒரு ஊரு... நாளைக்கு ஒரு ஊருன்னு.. உலகம் சுத்தற வாலிபனா ரங்கராட்டினம் ஆடிக்கிட்டு இருக்காரு.. நீ உன் பங்குக்கு வீடு வீடாப் போய் வம்பிழுத்துக்கிட்டு இருக்கிற.. ம்ஹீம்.. கொடுத்து வைச்ச பிழைப்பு.. போ..."

பார்வதி விட்ட பெருமூச்சில் அந்த சொர்ணம் அவசரம் அவசரமாக இடத்தைக் காலி செய்து விட்டாள்..

"வர்றேன் சாவித்திரி.. வர்றேன் பெரியம்மா.." ஓட்டமும் நடையுமாக அவள் ஓடியே போக..

"வராதே... அப்படியே போயிடு.." என்று அவள் போன திக்கைப் பார்த்துக் கருவினாள் பார்வதி..

"இவளெல்லாம் ஒரு ஆளுன்னு உக்கார வைச்சுப் பேசிக்கிட்டு இருக்கியே.. உன்னைச் சொல்லனும்.." சாவித்திரியைக் கடிந்து கொண்டாள்...

“என்ன செய்றது அத்தை..? நாத்தனாராப் போயிட்டா.. நான் கொஞ்சமா முகம் மாறிப் பேசினாலும்.. நீங்க இல்லாத சமயத்தில வீட்டுக்கு வந்தேன்னா.. அண்ணி முகம் கொடுத்துப் பேசலைன்னு உங்க மகன்கிட்ட போட்டுக் கொடுத்துடறா.. அவரு என்கிட்ட முகத்தக் காட்டறாரு.. அதுக்குப் பயந்து உக்காந்து பேச வேண்டியிருக்கு..” சாவித்திரி விளக்கம் சொன்னாள்..

“இங்கேயும் அந்தக் கதைதான்.. அந்த மனுசனப் பத்தி அரசகுளத்துக்கு வண்டியக் கட்டிக்கிட்டுப் போயிட்டாரான்னு நம்மகிட்டக் கேட்டுட்டு.. அவருகிட்டப் போயி.. பெரியப்பா எங்கேன்னு கேட்டா.. அவரு எங்கே வீடு தங்கறாரு.. அரசகுளத்துக்கு வண்டியக் கட்டிக்கிட்டு போயிட்டாருன்னு பெரியம்மா சொல்லுது பெரியப்பான்னு சொல்லி வைப்பா.. இவளையெல்லாம் எதுல சேக்கறது..?” பார்வதி கோபத்துடன் எழுந்து போய் விட்டாள்...

“காபி.. பலகாரம் சாப்பிட வாம்மா..”

சாவித்திரி அன்புடன் அழைக்கவும் நிவேதிதா வாஸந்தியுடன் பேசியபடியே சமையலறைக்குப் போனாள்.. சாவித்திரி கொடுத்த பலகாரத்தையும்... காபியையும் வாங்கிக் கொண்டு இருவரும் வீட்டின் பின்பக்கத்து படிக்கட்டில் அமர்ந்தார்கள்...

“யாரு அவங்க..?” பலகாரத்தை மொக்கியபடி கேட்டாள் நிவேதிதா...

“சொர்ணத்தை..! அப்பாவோட ரெண்டு விட்ட தங்கை..” வாஸந்தி சொன்ன பதிலில் தலையும்.. காலும் நிவேதிதாவுக்குப் புரியவில்லை..

“ரெண்டுவிட்ட தங்கைன்னா..?” அப்பாவியாய் விழிவிரித்தாள்..

“அதாவது அண்ணி.. எங்க தாத்தாவோட... சித்தப்பா மகனோட பொண்ணுதான் இந்த சொர்ணா அத்தை.. என் தாத்தாவுக்கு ஒன்று விட்ட தம்பியோட மகள்.. என் அப்பாவுக்கு என்னவாகனும்..? ரெண்டு விட்ட தங்கச்சியாகனுமா இல்லியா..?”

“என்னவோ போ.. எனக்கு ஒரு மண்ணும் புரியலை..”

“புரியலைன்னா விட்டுருங்க.. சொர்ணத்தையைப் போல இருக்கிறவங்களைப் புரிஞ்சுக்காம இருக்கிறதே பெட்டர்..”

“அவங்க எதுக்காக வாஸந்தி இப்படியெல்லாம் பேசறாங்க..?”

“வேற என்ன..? பொறாமைதான்..”

“பொறாமையா..? எதுக்கு..? யார் மேல பொறாமை..?”

“வேற யாரு மேல பொறாமை..? எல்லாம் உங்க மேலதான்..”

வாஸந்தி சுவாதீனமாகச் சொல்ல.. நிவேதிதாவுக்குதூக்கிவாரிப் போட்டது..

“என்மேல பொறாமையா..? அது எதுக்கு வாஸந்தி..? நான் அவங்களை என்ன செய்தேன்..?”



“நீங்க ஒன்னும் செய்யலை அண்ணி.. அண்ணன் தான் உங்களைக் கல்யாணம் செய்துகிட்டு இருக்குதே..”

“அதுக்கு எதுக்காக இவங்க கோபப்படனும்..?”

“ஏன்னா.. இவங்களுக்கும் ஒரு பொண்ணு இருக்குதே.. வர்ணான்னு பேரு.. இந்த அத்தை போல இருக்காது.. நல்ல குணம்தான்.. அழகா வேற இருக்கும்.. அதைத்தான் அண்ணன் கல்யாணம் செய்துக்குவார்ன்னு நாங்களே நினைச்சோம்.. திடிர்ன்னு அண்ணன் உங்க போட்டோவோட வந்துச்சு.. அது பிரண்டோட அப்பாவோட பிரண்டோட பொண்ணுன்னு சொல்லுச்சு.. அதுக்கு பிடிச்சிருக்குன்னுச்சு.. கல்யாணத்தை தள்ளிப் போட்டுக் கிட்டு இருந்த பெரியவங்களும் தலையை ஆட்டிட்டாங்க.. நீங்க அண்ணனுக்கு பெண்டாட்டியா வந்துட்டிங்க.. உங்களுக்கு ஒன்னு தெரியுமா.. அண்ணனும் வர்ணாவும் தோப்பில அடிக்கடி சந்திச்சுக்குவாங்கன்னு இந்த சொர்ணா அத்தையே பலதடவை வீடுதேடி வந்து எங்ககிட்டச் சொல்லியிருக்கு..”

வாஸந்தி சாவித்திரி அழைப்பதாகச் சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள்.. நிவேதிதா அசைவற்று அமர்ந்திருந்தாள்.. யாருமற்ற தோப்பும்.. அந்தத் தோப்பு வீட்டின் தனிமையும்.. மாடியறையும்.. முதலாளியைத் தொந்தரவு செய்யாமல் விலகிப் போய் விடும் வேலையாள் களும் அவள் கண்முன் சுழன்றதில் அவளுக்குக் கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது..

வாஸந்தியிடம் அந்த விவரத்தைப் பற்றி ஒரு அளவுக்கு மேல் அவளால் கேட்க முடியவில்லை.. வாஸந்தி வாசுதேவனை விட வயதில் மிக.. மிக.. இளையவள்.. பத்து வயது இடைவெளியில் பிறந்தவள் என்பதினால் அவளிடம் விளையாட்டுத்தனமும்.. குறும்புத்தனமும் அப்படியே இருந்தன...

வாஸந்தியிடம் கேட்க முடியாத நிவேதிதா.. அன்றைய இரவின் தனிமையில் வாசுதேவனிடம் கேட்டாள்..

“வர்ணான்னா யாரு..?”

அவன் சட்டென்று அவளிடமிருந்து விலகினாள்.. அவள் முகம் பார்த்தவனின் முகத்தில் கோபம் இருந்தது..

“அவளைப் பத்தி ஏன் கேட்கிற..? யார் உனக்குச் சொன்னது..?”

அவனது அந்த கோபத்தில் நிவேதிதா பயந்து போனாள்.. தைரியத்தை வரவழைத்துக் கொள்ள மென்று விழுங்கியபடி..

“இல்லை.. இன்னைக்கு சொர்ணாம்மா வந்திருந்தாங்க...” என்று சொன்னாள்..

“ஓ...”

அவன் முகத்தில் கோபம் குறைந்து சிந்தனை பரவியது..

சற்று நேரத்திற்கு மௌனமாக விட்டத்தை வெறித்துப் பார்த்தபடி படுத்திருந்தவனைப் பார்த்த நிவேதிதாவின் மனம் வலித்தது...

இந்த அளவிற்கு வாசுதேவன் பாதிக்கப் படுகிறான் என்றால் எந்த அளவிற்கு அந்த வர்ணா அவன் மனதில் இடம் பிடித்திருக்க வேண்டும்..?

நிவேதிதா மூச்சடக்கி அவன் பதிலுக்காக காத்திருந்தாள்.. சற்றுப் பொறுத்து பெருமூச்சுடன் அவள் பக்கம் திரும்பிய வாசுதேவன்..

“அவ சொர்ணத்தையோட பெண்..” என்றான்.. கண்மூடிப் படுத்துத் தூங்கி விட்டான்...

‘அவ்வளவுதானா..?’ அவள் மனம் விம்மியது...

அதற்குமேல் எதுவுமேயில்லையா..? ஏன் அவளைத் தனிமையில் தோப்பில் சந்தித்தான்...? அங்கே அவர்களுக்குள் என்ன நடந்தது..? இது எதையும் அவன் சொல்ல வேண்டாமா..?

மறுநாள் முழுவதும் நிவேதிதா அவனுடன் எதுவும் பேசாமல் மௌனமாகவே இருந்தாள்.. அவனும் அதை கண்டு கொள்ளாத சிந்தனையுடன் மில்லுக்கு கிளம்பிப் போய் விட்டான்...

அன்று மாலையில் மறுவீட்டு விருந்திற்காக அவர்கள் பெங்களூருக்குக் கிளம்பினார்கள்.. மனதில் உற்சாகமில்லாமல் வீட்டுப் பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டுக் கிளம்பினாள் நிவேதிதா..

பெங்களூரில் அவள் வீட்டில் உற்சாகமாக அவர்களை வரவேற்றார்கள்.. திருமணத்திற்கு வர முடியாத நண்பர்கள் குடும்பத்துடன் வந்து வாழ்த்திவிட்டுப் போனதில்.. முதல்நாள் முழுவதும் வீடு கலகலப்பும்.. பரபரப்பும் நிறைந்த சூழலில் காணப்பட்டது..

“ஒரு சின்ன ரிசப்சனுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன்..” தயக்கத்துடன் சொன்னார் சுந்தர்..

“அது எதுக்கு தேவையில்லாம..?” முகம் சுருங்கினான் வாசுதேவன்..

“தொந்தரவுக்கு மன்னிச்சுக்கனும்.. என் ஆபிஸ் ஸ்டாப்பில பாதிப் பேரால மேரேஜில கலந்துக்க முடியலை.. அவங்களுக்காகவும் இந்த ஏரியாவில இருக்கிறவங்களுக் காகவும்தான் இந்த ரிசப்சன்.. தயவுசெய்து நீங்க மறுக்கக் கூடாது..”

மருமகனின் காலில் விழுந்து விடுகிறவரைப் போலக் கெஞ்சினார் சுந்தர்.. அதில் நிவேதிதாவுக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை.. போனல் போகிறது என்று இறங்கி வந்தவனாக சம்மதம் சொல்லி வைத்தான் வாசுதேவன்..



## 27

அந்த நட்சத்திர ஹோட்டலின் ஹால்.. அழகாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.. கோட்சூட்டுடன் கம்பீரமாக இருந்த வாசுதேவனின் அழகில் நிவேதிதாவின் மனம் மயங்கியது.. அழகாக கொண்டையிட்டு.. அந்தக் கொண்டையில் வெண்மைநிறப் பாசிகளைச் செருகியிருந்த தலையலங்காரத்துடன் இருந்த நிவேதிதாவின் புதிதான அந்தத் தோற்றத்தை விழுங்குவதைப் போல பார்வையிட்டுக் கொண்டிருந்தான் வாசுதேவன்...

“அழகாயிருக்கேடி..” என்று ஜொள்ளினான்..

‘அந்த வர்ணாவை விடவா..?’

கேட்கத் துடித்த மனதை அடக்கிக் கொண்டாள் நிவேதிதா..

‘வேண்டாம்.. ஒரு வாரத்துக்குப் பின்னால் இப்போது தான் அவன் உன்னிடம் முகம் கொடுத்துப் பேசுகிறான்.. இந்த இணக்கமான மனநிலையை கெடுத்துக் கொள்ளாதே..’ அவளது அறிவு அவளை எச்சரித்தது...

நிவேதிதா மெலிதான புன்னகையை பதிலாகத் தந்தாள்..

அன்றைய இரவில் பழைய நெருக்கத்தையும்.. வேகத்தையும் காண்பித்தான் வாசுதேவன்.. நிவேதிதாவின் மனதில் வர்ணாவைப் பற்றிய கேள்விகள் அடி ஆழத்தில் அமிழ்ந்து கிடந்தன.. அதை வாசுதேவனிடம் கேட்க முடியாமல் அவள் தவித்தாள்.. அதைப்பற்றிக் கேட்டால் அவன் பழையபடி இறுக்கமாகி விடுவானோ என்ற பயத்துடன் மனதை செல்லரிக்க வைத்த அந்தக் கேள்விகளை வெளிப்படுத்தாமல் புதைத்து வைத்தாள்.. அவளைப் பழிவாங்கத் தேடி வந்து திருமணம் செய்து கொண்டவன் அந்தப் பழியுணர்வை மறந்து அவளுடன் குடும்பம் நடத்த ஆரம்பித்ததே பெரிது.. அதையும் வர்ணாவைப் பற்றிய சந்தேகங்களைக் கேட்பதினால் கொடுத்துக் கொள்ள வேண்டடுமா என்ற எண்ணம் அவளுக்கு...

அத்துடன் வேறு ஒன்றும் இருந்தது.. வர்ணாவைப் பற்றி அவள் தூண்டித் துருவிக் கேட்கப் போக.. அவன் ஆமாம்.. அப்படித்தான் என்று சொல்லி விட்டால் அவள் என்ன செய்வாள்..?

அதற்குப் பின்னால் வாசுதேவனுடன் இசைந்து வாழ அவளால் முடியுமா..?

மறுவீட்டு விருந்து முடிந்து.. மறுநாள் காலையில் அவர்கள் சீர்வரிசைகளையும்.. பலகாரக் குடங்களையும் கொண்டு செல்வது என்று முடிவானது.. வாசுதேவனுக்கு ஏதோ வேலையிருக்கிறது என்று வெளியே சென்று விட்டான்.. மாளவிகாவின் பின்னாடியே பொன்வயலைப் பற்றிய கதைகளைப் பேசியபடி சுற்றிக் கொண்டிருந்த நிவேதிதா செல்போன் ஒலிக்கவும் எடுத்துப் பார்த்தாள்..

"சௌதா பேசறா மம்மி.." என்று மாளவிகாவிடம் சொல்லிவிட்டு.. பாடியேறினாள்...

"சொல் சௌதா.." என்றபடி மாடிஹாலின் சோபாவில் உட்கார்ந்தாள்..

"உன் மனசு போல வாழ்க்கை அமைஞ்சிருக்கன்னு ஜாலியா இருக்கியே.. கொஞ்சமாச்சும் என் நிலைமையைப் பத்தி யோசிச்சுப் பார்த்தியா..?" மறுமுனையில் சௌதாமினி சண்டைக்கு வந்தாள்..

"ஏண்டி.. என்வாச்சு..?"

"என்னென்னவோ ஆகப் போகுது.. நிவேதிதா.. உன் மாமன் மகன் கோவர்த்தனன் சரியான மண்குதிரையா இருந்து தொலைக்கிறான்..."

"அவன்.. இவன்ங்காதே..."

"இது ஒன்னுதான் குறைச்சல்.. ஏண்டி நீவேற.. அவனோட அம்மா பார்த்து வைச்சிருக்கிற பொண்ணை இவன் பார்க்கக் கிளம்பறாண்டி.."

"எப்ப..?"

"இன்னைக்குச் சாயங்காலம்.."

"உனக்கு நிச்சயமாத் தெரியுமா சௌதா.."

"தெரியாமலா உனக்குப் போன் பண்றேன்..?"

முதன் முதலாக சௌதாமினியின் வார்த்தைகளில் கண்ணீர் கலந்திருந்தது...

## 28

"அவன் மட்டும் அந்தப் பெண்ணைப் பார்க்கப் போனான்னு வைச்சுக்க.. இந்தச் சௌதாமினி உயிரோடயே இருக்க மாட்டா.. ஆமாம்.. அவன்கிட்ட இதைச் சொல்லிரு.."

சௌதாமினி பொருமினாள்.. நிவேதிதாவிற்கு மனது சங்கடப்பட்டது.. கோவர்த்தனன் சௌதாமினியின் பின்னால் சுற்றியதையும்.. பழகியதையும் அவள் நன்கு அறிவாள்.. இருந்தும் மாமன் மகனிடம் இதைப்பற்றி எப்படிப் பேச என்று அவள் தயங்கினாள்...

"என்னடி நிவி.. சொல்லிருவல்ல..?"

சௌதாமினியின் கேள்வி அவளின் தயக்கத்தை துரத்தியது...

"கட்டாயம் சொல்கிறேன்.." என்று வாக்குக் கொடுத்து விட்டாள்...

சௌதாமினியின் கண்ணீருக்கு சமாதானம் சொல்லி விட்டு செல்போனை அணைத்தவள்.. கோவர்த்தனனை அழைத்தாள்..

"அத்தான்.." என்று அழைத்தவள் எப்படிப் பேசுவது என்று தெரியாமல் தடுமாறினாள்..



"சொல் நிவேதா.." ஊக்கப் படுத்தினான் கோவர்த்தனன்..

"நீங்க வேற ஒரு பெண்ணைப் பார்க்கப் போகிறதா.."

"சௌதா சொன்னாளா..?"

"ம்ம்ம்..."

"என்னை என்னதான் செய்யச் சொல்ற..? அம்மா இன்னைக்குப் பெண் பார்க்க வர்றதா வாக்குக் கொடுத்திருச்சாம்.. அதை மாத்றவேணாம்.. போய்ப் பார்த்துட்டு பெண் பிடிக்கலைன்னு சொல்லிட்டு வந்திடறேன்னு சொன்னாக் கேட்க மாட்டேங்கிறா.. இப்ப பெண் பார்க்க வர்றதா வாக்குக் கொடுத்தாங்க.. அதை நிறைவேத்தப் பெண் பார்க்கப் போறிங்க.. நாளைக்கு நீங்க கட்டாயம் அந்தப் பெண்ணோட கழுத்தில தாலியைக் கட்டுவீங்கன்னு வாக்குக் கொடுப்பாங்க.. அதையும் நிறைவேத்தப் போகத்தான் செய்வீங்கன்னு கேட்கிறா.."

அதுவும் நியாயம்தானே என்று தோன்றியது நிவேதிதாவுக்கு.. சௌதாமினி எதைக் கேட்டாலும் டாண்.. டாணென்று மிகச் சரியான கேள்விகளாக கேட்டு வைப்பாள்.. அதில் நியாயம் இருக்கும்.. கோவர்த்தனன் உண்மையிலேயே சௌதாமினி சொன்னதைப் போல மண்குதிரையாகத்தான் இருக்கிறான் என்று நிவேதிதா-விற்குத் தோன்றியது..

"நீங்க பெண் பார்க்கப் போகிறதில எனக்கு இஷ்டமில்லை அத்தான்.."

"எனக்கு மட்டும் இஷ்டமமா நிவேதா...? அம்மா சொல்லைக் தட்ட முடியல.. இதை சௌதா புரிஞ்சுக்க மாட்டேங்கிறா.. நடந்ததையே சொல்லிக்கிட்டு இருக்கிறா.."

"நடந்ததை யெல்லாம் எப்படி அத்தான் மறந்தீங்க..?"

"யார் மறந்தது நிவேதா..? நீயும் அவளைப் போலவே கேக்கறியே.. இப்ப சௌதாவுக்கு நான் என்ன துரோகம் செய்து விட்டேன்னு இப்படிப் பேசற..?"

"இதை என்னைப் பார்த்துக் கேட்காதீங்க அத்தான்.. உங்க ஊரு ஆத்தங்கரையைப் பார்த்துக் கேளுங்க.. அது கதை கதையாய் சொல்லும்..."

"நிவேதா.. இதில நீதலையிடாதே.. எங்களை மறந்துவிடு.. உனக்கு கல்யாணமாகிருச்சு.."

"மேரேஜ் ஆனா எல்லாம் மறந்து போகுமா..? நான் மறக்க மாட்டேன் அத்தான்.. என்னால மறக்க முடியாது.."

"பிடிவாதம் பிடிக்காதே நிவேதா.. நானே எனக்கும் சௌதாமினிக்கும் கல்யாணம் நடக்குமோ.. நடக்காதோங்கிற குழப்பத்தில இருக்கேன்.."

"எப்படி அத்தான் உங்களால இப்படிப் பேச முடியுது..? நீதான் என் உயிர்ன்னு நீங்க சொன்னதெல்லாம் பொய்யா அத்தான்..?"

“பொய்யில்லைதான்.. ஆனா நான் என்னதான் செய்யிறது.. நான் சௌதாவுக்கு என்னதான் செய்யணும்..? அவளுக்கு என்னதான் வேணும்..”

“நீங்கதான் வேணும் அத்தான்..”

“அது அம்மா கையில இருக்கே நிவேதா..”

“அப்படின்னா என்னோட நீங்க பேசாதீங்க..”

“இதில நீ ஊடே வராதே நிவேதா.. இந்தப் பேச்சை விட்டுவிடு...”

“உங்களை விட மாட்டேன் அத்தான்.. என்னால விட முடியாது..”

“என்ன நிவேதா.. இப்படிப் பேசற.. ஊம்.. நான் யோசிச்சுப் பதில் சொல்றேனே...”

“நல்ல பதிலைச் சொல்லுங்க.. உங்க பதிலுக்காக காத்திருக்கேன்...”

“சௌதாவுடன் ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கலாம்.. ஆனா மத்தவங்களுக்காக பாக்கறேன்..”

“மத்தவங்களைப் பத்தி நாம கவலைப்படக் கூடாது அத்தான்.. நமக்கு நம்ம வாழ்க்கைதான் முக்கியம்.. வாழ்கிறது ஒரு தடவைதான் அத்தான்.. அந்த வாழ்வை நம்ம மனசு போல வாழ்ந்திரனும்...”

பேசி முடித்து விட்டுத் திரும்பிப் பார்த்த நிவேதிதா.. அங்கே ரௌத்திரமாக நின்ற வாசுதேவனின் கோபத்தில் நிலை குலைந்தாள்..

‘ஏன் இவன் கோபமா இருக்கான்..?’

புரியாமல் புன்னகைக்க முயன்றவளின் அருகே வந்தவன்..

“சுமுக்கு வாடி..” என்று அடிக்குரலில் சீறினான்..

என்னவோ.. ஏதோ.. என்று அவனைப் பின்பற்றிச் சென்றாள் நிவேதா.. அறைக்கதவை மூடியவன் அழுத்தமான குரலில்..

“யாருடி அவன்..?” என்று அதிகாரமாக அதட்டினான்.

‘யாரைச் சொல்றான்..?’ நிவேதாவுக்கு புரியவில்லை..

“யாருங்க..?” அவனிடமே கேட்கவும் செய்தாள்..

“இப்ப வாழ்ந்தா உன்னோடதான் வாழ்வேன் அத்தான்னு வசனம் பேசினயே. அவனைத்தான் கேட்கிறேன்.. யார் அவன்..?”

‘கோவர்த்தன அத்தானையா கேட்கிறான்..?’

அதற்கு எதற்காக அவன் இந்த அளவுக்கு கோபப் படவேண்டும் என்ற நினைவுடன் அவன் வார்த்தைகளில் பொதிந்திருந்த அர்த்தம் தந்த கோபத்துடன்..

“உளராதீங்க.. அவர் என்னோட மாமன் மகன்..” என்று பதிலுக்கு இவளும் சீறினாள்...



“ஓ.. இந்த அத்தான் உனக்குத் தாலிகட்டின கேணயன்.. அந்த அத்தான் உன் ஆசைக்கு உரியவன்.. பேஷ்.. பேஷ்.. இது ரொம்ப நன்னாயிருக்கு..” பாராட்டினான் வாசுதேவன்..

அவனின் அந்த நக்கலும்.. நையாண்டியும் மிகுந்த பாராட்டுதலில் நிவேதிதாவின் முகம் சிவந்து போனது..

“தப்பாப் பேசாதீங்க.. ஐ டோண்ட் லைக் இட்.. நீங்க என் ஹஸ்பெண்டுங்கிறதுக்காக எதை வேண்டும்னாலும் பேசிரலாம்னு நினைச்சிராதீங்க..” என்று கோபப்பட்டாள்

“பாருடா.. நீ எதை வேணும்னாலும் பேசலாம்.. நான் அதை ஏன்னு கேட்கக்கூடாதா..?” அவன் புருவங்களை உயர்த்தினான்..

“நான் என்ன பேசினேன்னு உங்களுக்குத் தெரியுமா..?”

“ஏன் தெரியாது..? நீ அத்தான்னு கொஞ்சலாப் பேச ஆரம்பிச்சப்பவே நான் வந்திட்டேன்.. என்னடா.. என் ஆசைப் பெண்டாட்டி நான் இல்லாதப்பவும் என்னையே நினைச்சுக்கிட்டு இருக்காளேன்னு மகிழ்ந்து போயிட்டேன்.. இதோ வந்திட்டேண்டி தங்கமேன்னு உன் பின்னாலே வந்து கண்ணைப் பொத்தலாம்னு நினைச்சா.. நீ செல்போனில கொஞ்சிக்கிட்டு இருக்க.. யார்கிட்டப் பேசறான்னு நின்னு கேட்டா.. நீ வேற ஒரு பொண்ணைப் பாக்கலாமாங்கிற.. நீங்க பொண்ணு பாக்கப் போறதில எனக்கு இஷ்டமில்லைங்கிற.. நடந்தையெல்லாம் எப்படி அத்தான் மறந்தீங்கன்னு கேள்வி கேட்கிற.. இதை என்னைப் பார்த்துக் கேக்காதீங்க.. உங்க ஊரு ஆத்தங்கரையைப் பார்த்துக் கேளுங்க.. அது கதை கதையாய்ச் சொல்லும்ங்கிற.. மேரேஜ் ஆகிட்டா எல்லாம் மறந்திருமா..? நான் மறக்க மாட்டேன் அத்தான் என்னால மறக்க முடியாதுங்கிற.. எப்படி அத்தான் உங்களால இப்படியெல்லாம் பேச முடியுது..? நீதான் என் உயிர்ன்னு நீங்க சொன்னதெல்லாம் பொய்யான்னு உருகற.. நீங்கதான் வேணும் அத்தான்னு கெஞ்சற.. அப்படின்னா என்னோட பேசாதீங்கன்னு ஊடல் காட்டற.. உங்களை விடமாட்டேன் அத்தான். என்னால விட முடியாதுங்கிற.. நல்ல பதிலைச் சொல்லுங்க.. உங்க பதிலுக்காக காத்திருக்கேன்ங்கிற.. இத்தனைக்கும் மேலே அடிச்சியேடி ஒரு செஞ்சுரி.. அதுதாண்டி டாப்பு.. மத்தவங்களைப் பத்தி நாம கவலைப்படக்கூடாது அத்தான்.. நமக்கு நம்ம வாழ்க்கைதான் முக்கியம்.. வாழ்கிறது ஒருதடவைதான் அத்தான்.. அந்த வாழ்வை நம்ம மனசு போல வாழ்ந்திரனும்னு சொன்னியே.. அட.. அட.. அட.. அங்கேதாண்டி நீ நிக்கிற..”

வாசுதேவன் பேசப் பேச நிவேதிதாவுக்கு மயக்கம்.. மயக்கமாக வந்தது.. அவள் பேசியதாக அவன் சொல்வ தெல்லாம் உண்மைதானே.. ஆனால்..? மறுமுனையில் யார் பேசினார்கள்.. என்ன பதிலைப் பேசினார்கள் என்பதை அவன் அறிய வேண்டாமா..?

"அது வந்து.." அவள் விளக்கம் சொல்ல முற்பட்ட போது..

"ச்சீ.." என்று அருவெறுத்தான் அவன்..

"ச்சீயா..?" நிவேதா குன்றிப் போய்விட்டாள்..

"வேற எப்படிச் சொல்வேன்னு எதிர் பார்த்த..? கொஞ்சுவேன்னு நினைத்தியா..? கடைசியில் உன் புத்தியைக் காட்டிட்ட பார்த்தியா..?"

'என்ன புத்தி.. என்புத்தி..?' நிவேதிதா கொதித்துப் போய் விட்டாள்..

"அது உங்க புத்தி.." சீறிவிட்டாள்..

"என் புத்தியா..?" அவன் முகம் பயங்கரமாக மாறியது

"ஆமாம்.. உங்க புத்திதான்.. அந்த வர்ணாகூட திருட்டுத்தனமா தோப்பு வீட்டில கொஞ்சிக் குழாவினிங்கள்ல.. அந்தப் புத்தி.. அதுதான் இப்படி ஒரு பக்க பேச்சை மட்டும் கேட்டுட்டு நம்மப் போல இவளும் இருப்பாளோன்னு சந்தேகப்பட வைக்குது.. ஆனா.: என் புத்தி உங்க புத்தியைப் போல இல்லை..."

நிவேதிதா சொல்லி விட்டாள்..

"என்னடி சொன்ன..?" வாசுதேவன் கையை ஓங்கி விட்டான்...

அசையாமல் நின்ற நிவேதிதாவின் கண்களில் எதைக் கண்டானோ அவனது ஓங்கிய கை இறங்கியது.. வெறுப்பு உமிழும் விழிகளால் அவளைப் பார்த்தவன்..

"நினைச்சேன்டி.." என்றான்...

அவன் என்ன நினைத்தான் என்று நிவேதிதா கேட்க வில்லை.. அவன் பேசிய பேச்சில் அவளது உயிர்துடித்துக் கொண்டிருந்தது.. கோவர்த்தனன் அவளுக்கு மாமன் மகன்தான் என்றாலும் சகோதர வாஞ்சையைக் காண்பித்தவன்...

'அவனைப் போய்..' அவளுக்கு மனம் வெறுத்து விட்டது...

எடுத்தவுடன் பழி போடலாமா..? என்னவிவரமென்று கேட்க வேண்டாமா..? ரகசியம் பேச நினைக்கிறவள் மாடி ஹாலில் உட்கார்ந்து தான் ரகசியம் பேசுவாளா..? அவனைக் கண்டதும் இயல்பாக புன்னகைக்க முயன்றாளே.. அதிலிருந்தாவது அவன் தெரிந்து கொள்ள வேண்டாமா..?

அவளது மனப் போராட்டத்தைப் பற்றி அவன் எந்தவிதக் கவலையும் கொள்ளவில்லை.. அவன் போக்கில் பேசித் தீர்த்துக் கொண்டிருந்தான்..

"என்னடா.. பெங்களூர்காரி அடக்கி வாசிக்கிறாளே.. நிசமாவே என் மேல காதலாகி கசிந்துருகிட்டாளோன்னு தோணினாலும் ஏதாவது ஒரு காரணத்தை வைச்சு.. நீ உன் சுயரூபத்தைக் காட்டுவன்னு நினைச்சேன்டி.. சாக்குக் கிடைச்சிருச்சா..? இனி வெளுத்துக் கட்டுவேயில்ல.."



"நான் காரணத்தைத் தேடினேனா..? எதுக்கு..?"

"வேற எதுக்கு..? உன் குணத்தைக் காட்டத்தான்.. நான்கூட மஞ்சள் கயிறு மகிமையோன்னு நம்பப் பார்த்தேன்.. எங்க அம்மா.. பாட்டி கிட்ட மரியாதை காட்டறா.. அப்பா.. தாத்தாவக் கண்டாலே எழுந்திருச்சு நிக்கிறா.. தங்கச்சியைக் கண்டா ஓடிப் பிடிச்சு விளையாடறா.. கூட்டுக் குடும்பத்த பிடிக்காதவளா இதையெல்லாம் செய்வான்னு திகைச்சுப் போயிருந்தேன்.. நீ மொத்தமாவே துண்டிச்சுக்கிட்டு ஓட பிளான பண்ணியிருக்க..."

"வேண்டாங்க.. வார்த்தைகளைக் கொட்டாதீங்க.. அள்ள முடியாது..."

"ஏய்.. நிறுத்துடி.. உனக்கே கிராமத்தைப் பிடிக்காது.. விவசாயக் குடும்பத்தைப் பிடிக்காது.. கூட்டுக் குடும்பம்னா கட்டோட பிடிக்காது.. அப்படியிருக்கப்ப எதுக்குடி என்கிட்ட காதல் நாடகம் ஆடின..?"

## 29

நிவேதிதா ஒரு முடிவுக்கு வந்தவளாக செல்போனை எடுத்தாள்.. கோவர்த்தனனின் நம்பரை அழுத்தினாள்.. ஸ்பீக்கரை ஒலிக்க விட்டாள்..

"என்ன நிவேதா..?" கோவர்த்தனனின் குரல் ஒலித்தது..

"என்ன முடிவு பண்ணியிருக்கீங்க அத்தான்..?" வாசுதேவனை முறைத்தபடி கேட்டாள் நிவேதிதா..

"அம்மா.. அப்பாகிட்ட விசயத்தைச் சொல்லிராம்னு முடிவு பண்ணியிருக்கேன் நிவேதா.. பெண் பார்க்க போகிறதாயில்லை.."

"தட்ஸ் குட்.."

"சௌதாமினி சொல்றதிலயும் நியாயம் இருக்கு நிவேதா.. அவளை யாராவது பெண் பார்க்க வந்தா என்னால தாங்கிக்க முடியுமா..? அது போலதானே அவளுக்கும் இருக்கும்..?"

"புரிந்துக்கிட்டாச் சரி அத்தான்.. இப்பத்தான் சௌதா போன் பண்ணினாள்.. உன்னோட மாமா மகன் என்னைக் கை விட்டுருவாரோன்னு பயமாயிருக்குன்னு அழுதா.. நான் அவளுக்காகத்தான் உங்களிடம் பேச வேண்டியதாகிப் போச்சு அத்தான்.."

"எனக்குத் தெரியாதா நிவேதா.. நீ எனக்கு அத்தை மகளா இருந்தாலும் தங்கச்சியப் போலத்தான் உன் மேல பாசம் வைச்சிருக்கேன்.. புதுசா கல்யாணமான பொண்ணு.. உன் வாழ்க்கையை நீ சந்தோசமா ஆரம்பிச்சிருக்கிறப்ப எங்க கவலையை சௌதா உன்கிட்ட கொண்டு வந்திட்டாளேங்கிறதுதான் எனக்கு.."

"அவ என்ன செய்வா..? வேற வழி எதுவுமில்லாமத் தான் என்னிடம் விவரத்தைக் கொண்டு வந்திருக்கா..?"

"இனி நான் பார்த்துக்கிறேன்.. நீ கவலைப்படாம இரு.. கூடிய சீக்கிரத்தில் எங்க கல்யாணப் பத்திரிக்கையை அனுப்பி வைக்கிறேன்..."

நிவேதிதா செல்போனை அணைத்து விட்டு 'போதுமா' என்ற மௌனப் பார்வையினை பார்த்து வைத்தாள்.. வாசுதேவன் கடுமை குறையாமல் அறைக்குள் போய் விட்டான்.. அன்றைய இரவில் அவர்கள் இருவரும் பேசிக் கொள்ளவில்லை..

மறுநாள் வாசுதேவனின் காரில் அவனும் நிவேதிதாவும் ஏறிக் கொள்ள.. சுந்தரின் காரில் மாளவிகாவும்.. நிரஞ்சனும் ஏறினார்கள்.. சீர்வரிசைகளையும்.. பலகார வகைகளையும் சுமந்த லாரி.. கார்களைப் பின் தொடர்ந்தது..

அன்றைய தினத்திற்குப் பின்னால் அவளும் வாசுதேவனும் பேசிக் கொள்வதில்லை.. வாசுதேவன் வீட்டிற்குள் இருந்தால் நிவேதிதா தோட்டத்தில் இருப்பாள். அவன் வாசலுக்கு வந்தால் வீட்டுக்குள் வேலையிருப்பதைப் போல ஓடி விடுவாள்..

வாசுதேவன் அவளைச் சமாதானப் படுத்த முனைய வில்லை.. விளையாட்டைப் போல இரண்டு மாதங்கள் ஓடி விட்டன.. பார்வதியுடன் கோவிலுக்குப் போயிருந்த நிவேதிதா மயக்கம் போட்டு விட.. பார்வதி குய்யோ.. முறையோ என்று அழுது வாசுதேவனை கோவிலுக்கு ஓடி வர வைத்தாள்..

மயக்கத்திலே இருந்த நிவேதிதாவிற்கு முகத்தில் தண்ணீர் தெளிக்கும் முயற்சியில் பெண்கள் குழுமியிருக்க.. கூட்டத்தை விலக்கிக் கொண்டு பார்வதியின் மடியில் கிடந்த நிவேதிதாவை அள்ளிக் கொண்டான் வாசுதேவன்..

"என்னன்னு தெரியலையேடா தேவா.."

"முதல்ல சத்தம் போட்டு ஊரைக் கூட்டாம காருக்கு வந்து சேரு பாட்டி.. அங்கேயிருக்கு கச்சேரி உனக்கு.."

"நான் என்னடா பண்ணினேன்..?"

"இவளுக்கு உடம்புக்கு சரியில்லைன்னா ஊரைக் கூட்டிருவியா..?"

"நான் எங்கேடா கூட்டினேன்..? அதுவாக் கூடிருச்சு.. அது தானா வந்த கூட்டம்டா தேவா.. நானாக் கூட்டின கூட்டமில்ல.."

"நீ பெரிய அரசியல் கட்சித் தலைவி.. உனக்கு தொண்டர் கூட்டம் தானாக் கூடுது.."

வாசுதேவன் பார்வதியை கடிந்தபடி மருத்துவ மனைக்கு காரை விட்டான்.. சோர்ந்து கிடந்த நிவேதிதாவைக் கவலையுடன் பார்த்துக் கொண்டான்.. அவள் வாடிப் போன மாலையை நினைவு படுத்திக் கொண்டிருந்தாள்..



'ஏன் இப்படிக் கிடக்கிறா..?'

மருத்துவமனையின் லேடி டாக்டரோ அவர்களின் பதட்டத்தில் சிரித்தாள்..

"உங்க வொய்ஃப் அம்மாவாகப் போகிறாங்க.. நீங்க அப்பாவாகப் போறிங்க.. மார்னிங் சிக்னெஸ்.. அதனாலதான் இந்த மயக்கம்.. வாந்தி எடுத்தாங்களா..?"

"தெரியலையே..."

லேடி டாக்டரின் வார்த்தைகளில் மகிழ்ந்து போயிருந்த வாசுதேவன் பார்வதியைப் பார்க்க..

"அதையேன் கேட்கறிங்க டாக்டரம்மா.." என்றாள் அவள்..

"ஓகே.. லீவ் இட்.. நீங்க என்ன சொல்லப் போறிங்க.. வேலை டென்சன்ம்பிங்க.. இந்தக் கதையையெல்லாம் இனிமே சொல்லக்கூடாது வாசுதேவன்.. உங்க வொய்ப் வீக்கா இருக்காங்க.. கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக்கனும்.."

கண்ணுக்குள்ளே எப்படி நிவேதிதாவை கொண்டு போய் வைப்பது என்று கேட்க நினைத்து.. லேடி டாக்டரின் தயவு என்றென்றும் அவன் மனைவிக்குத் தேவைப்படும் என்பதால் அதை மறைத்து தலையசைத்து விட்டு எழுந்தான் வாசுதேன்.. நிவேதிதாவைத் தோளில் சாய்த்து நடக்க வைத்த போது.. அவன் மனதுக்குள் பூப்பூத்தது.. அவன் தகப்பனாகப் போகிறான் என்ற மகிழ்வில் அவன் உள்ளம் பூரித்தது..

அன்றைய இரவு வரைக்கும் அவள் குடும்பத்தினரின் கண்காணிப்பிலேயே இருந்தாள்.. இரவில் படுக்கை-யறையில் நுழைந்தவள் எப்போதும் போல வாசுதேவனின் முகம் பார்க்காமல் அவனுக்கு முதுகு காட்டி படுக்க யத்தனித்த போது அவன் கரம் அவள் தோளில் விழுந்தது...

## 30

நிவேதாவிற்கு மூச்சுத் திணறியது.. அவளது தோள்மீது படிந்திருந்த அவனது கையின் ஸ்பரிசத்தில் அவளது மேனி மெலிதாக நடுங்கியது.. மிகவும் பிரயத்தனப் பட்டு அவனது கையை அவள் தள்ளி விட்டாள்.. அவள் தள்ளி விட்ட வேகத்தைவிட பன்மடங்கு அதிகமான வேகத்துடன் அவள் மீது படிந்து அவன் பக்கமாக முரட்டுத் தனமாக திருப்பியவன் சீறினான்..

"ஏன்..?"

அவன் அழுத்தமான கை பதிவிலும்.. முரட்டுத்-தனமாக திருப்பியதிலும் ஏற்பட்ட வேதனையில் முகம் சுளித்தவளைக் கண்டதும்தான் அவனுக்கு அவனுடைய தவறைப் புரிந்தது.. பழைய நினைவில் அவளிடம் முரட்டுத்தனத்தை பிரத்யேகித்து விட்டதில் உதட்டை மடித்துக் கடித்தவன்..

"ஸாரி.." என்றான்..

'இவனுக்கு ஸாரி சொல்லக் கூடத் தெரியுமா..?' நிவேதிதா பேசாமல் இருந்தாள்..

"எவ்வளவு சந்தோசமான விசயம் நடந்திருக்கு.. இதை என்கூடப் பகிர்ந்துக்கனும்னு கூட உனக்குத் தோணலை.. ஏண்டி..? பிறக்கப் போகிறது என் புள்ளைடி.."

அவனது வார்த்தைகள் சூட்டுக் கோலாய் மனதைச் சுட்டதில் கண்மூடி அந்த வேதனையை ஜீரணிக்க முயன்றாள் நிவேதிதா..

'இவன் இப்படியேதான் பேசுவானா..?'

"தாயறியாத சூல் இல்லைடி.. உன் மனசுக்கு பட்டவுடன் நீ முதல்ல என்கிட்டத்தான் விசயத்தைச் சொல்லியிருக்கனும்..?"

'சொல்கிறதைப் போலதான் நாம் வாழ்ந்துக்கிட்டு இருக்கோமா..?'

"ஆயிரம் கோபம் இருக்கட்டும்டி.. நான் ஆயிரம் சொல்லியிருக்கட்டும்.. இந்த விசயத்தை எப்படி டீ நீ மறைப்ப...?"

திரும்பத் திரும்ப அவளையே அவன் குற்றவாளிக் கூண்டில் ஏற்றியதில் அவளுக்குச் சுள்ளென்று கோபம் வந்து விட்டது..

"சும்மா.. மறைச்சேன்.. மறைச்சேன்னு சொல்லக் கூடாது.. சொல்லலை.. அவ்வளவுதான்.. அதுக்கு மறைச்சதா அர்த்தமில்லை..."

"விதண்டாவாதமா பேசாதே..."

"இது விதாண்டாவாதமில்ல.. என்பக்கமிருக்கும் நியாயத்தைச் சொல்கிற வாதம்.. ஏன்னு நான் சொல்லவா..?"

"சொல்லனும்னு ஆரம்பிச்சிட்டேயில்ல.. அதையும் ஏன் மிச்சம் வைக்கிற..? சொல்லித் தீத்திரு.."

"ஏன்னா.. உங்களுக்கு எப்பவுமே என்மேல நம்பிக்கையிருந்ததில்ல..."

நிவேதிதா புயலை உள்ளடக்கிய அமைதியுடன் சொன்னாள்.. அவள் சொன்னதில் இருந்த உண்மை அவனைச் சுட்டது..

"என்னை விட்டுருங்க.. நம்ம வாஸந்தியை எடுத்துக்கங்க.. அவமேல தெரியாத்தனமா ஒருத்தன் மோதறான்.. அவ தன்னிச்சையா.. அது யார்ன்னு கூடப் பார்க்காம 'த்ச்சு'ன்னு சொல்லிருவாளா இல்லையா..? அதைத்தானே நானும் செஞ்சேன்.. அதுக்கு மேலே இடித்தவங்க தெரியாம இடிச்சிருப்பாங்கங்கிற யோசனையில்லாம இதுக்குன்னே வர்றாங்கன்னு நான் சொன்னது தப்பு.. அதை நான் சொல்லியிருக்கக் கூடாது.. அந்தத் தப்புக்கு இவ்வளவு பெரிய தண்டனையா..?"



வாகதேவனின் நெற்றி சுருங்கியது.. அவனது பார்வை சிந்தனையுடன் நிவேதிதா பேசிய போது வெளிப்பட்ட அவளின் முகபாவங்களையே கணித்தது.. அதில் தெரிந்த தார்மிகக் கோபத்தில் யோசனையானான்..

"நான் மோதினதுக்கு நீ பேசின பேச்சுக்கு நியாயம் சொல்லிட்ட... கிராமமா.. ச்சீன்னு சொன்னயே.. அதுக்கு என்ன சொல்லப் போற..? கூட்டுக் குடும்பமா.. உவ்வேன்னு சொன்னயே.. அதை எப்படி மாத்தப் போற..? விவசாயியா.. வேண்டாவே வேண்டாம்ன்னு சொன்னதுக்கு என்ன பதிலைச் சொல்லப் போற..?"

இப்படி அவன் மடக்கி கேள்வி கேட்டால் அவள் என்ன பதிலைச் சொல்லுவாள்.. சோர்வுடன் அவள் தலையை அசைத்தாள்..

"முடியலை.. என்னால உங்க கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல முடியலை.. என் கழுத்தில் தாலியைக் கட்டிட்டதால மட்டும் நீங்க என்னைப் புரிஞ்சுக்கிட்டவரா ஆகிருவிங்களா..? என் குழந்தைக்கு அப்பாங்கிறதினால மட்டும் நீங்க என்னைச் சேர்ந்தவரா ஆகிருவிங்களா..?"

"ச்சீ..."

அருவெருப்புடன் அவளைத் தள்ளி விட்டான்.. அவள் தலையணையில் சரிந்தாள்.. வாகதேவனின் கோபம் கட்டுக்கடங்காததாக இருந்தது.. நிவேதிதாவின் கோபமும்.. துயரமும் அதற்குக் குறையாததாக இருந்தது..

"தப்புப் பண்ணிட்டேண்டி.. உன்னைப் பழிதீர்க்கன்னு தாலி கட்டினவன் உன்னைத் தொட்டிருக்கக் கூடாது.. என் மனசில ஏதோ ஒரு மூலையில உன்மேல எந்தத் தப்பும் இல்லையோன்னு ஒரு பட்சி சொல்லிக்கிட்டே இருந்துச்சுடி.. அதனால உன்னைத் தொட்டுட்டேன்.. என்னைப் பார்த்தாவுடனே உன் கண்ணில பல்ப் எரிஞ்சுச்சே.. அதனால உன்னைத் தொட்டுட்டேன்.. என்கிட்ட மயங்கி நின்னயே.. அதனால உன்னைத் தொட்டுட்டேன்.. என்னைச் சுத்திச்சுத்தி வந்தியே.. அதனால உன்னைத் தொட்டுட்டேன்.. நான் தொட்டவுடன் உருகினியே.. அதனாலதாண்டி உன்னைத் தொட்டுத் தொலைச்சிட்டேன்..."

"இங்கேயும் அப்படித்தான்.. என்னைத் தப்பாப் புரிஞ்சுக்கிட்டு இருக்கிங்க.. ஒருநாள் என்னைச் சரியாப் புரிஞ்சுக்கிற காலம் வரும்ன்னு நானும் நினைத்துத் தொலைச்சிட்டேன்.."

"இதுவரை புரியாததையும் சேர்த்து இப்ப புரிய வைச்சிட்டியேடி..."

"வெல்.. எனக்கும் அப்படித்தான்..."

"இனி உன் இஷ்டப்படி நீ இருந்துக்க.."

"உங்க விருப்பப்படி நீங்களும் இருந்துக்கலாம்.. அதாவது.. என் இஷ்டம்ங்கிறது இந்த வீட்டின் எல்லைக் குள்ளே உங்ககிட்ட இருந்து தள்ளி

நீக்கிற சுதந்திரம் வரைக்கும்தான் வரையறுக்கப்பட்டது.. உங்க விருப்பம்ங்கிறது அப்படியில்லை..."

நிவேதிதாவின் பூடகப் பேச்சில் அவன் முகம் சுருங்கினான்..

"வேற எப்படிங்கிறது உனக்குத் தெரிஞ்சிருக்கும் போல இருக்கே..."

அவனது நெருப்புப் பார்வை அவளைத் துளைப்பதைப் போலப் பார்த்ததை அவள் பொருட்படுத்த வில்லை.. அவளை அவன் தன் கண்ணோட்டத்தில் சித்தரித்திருந்த விதத்தில் அவள் கொதித்துப் போயிருந்தாள்..

கறந்த பாலின் தூய்மையைக் கொண்டவளைத் தண்ணீரின் தன்மையுடன் ஒப்பிட்டால் கூட அவள் பொறுத்துப் போகலாம்.. தண்ணீரை விட உயர்ந்தது எது..? தங்கை என்பவள் தூய்மையின் வடிவம் ஆனவளாயிற்றே.. கள்ளுடன் ஒப்பிட்டால் எப்படிப் பொறுத்துக் கொள்வது..?

# 31

"ஆமாம்ன்னுதான் வைத்துக்கங்களேன்..."

'வைத்து' என்ற சொல்லில் நிவேதிதா கொடுத்த அழுத்தத்தில் வாசுதேவனின் விழிகளில் தீப்பொறி பறந்தது.. அவன் கண்கள் இடுங்கின...

"ஓ.. நான் தாலி கட்டின என் அருமைப் பெண்டாட்டி என் விருப்பங்களப் பத்தி இப்ப பிட்டுப் பிட்டு வைக்கப் போகிறா..."

"செய்துட்டாப் போச்சு.. நீங்கள்ளாம் ஆண்குலம்.. உங்க விருப்பப்படி சிறகடிக்கிற உரிமை உங்களுக்கு மட்டும்தான் இருக்கு.. வீட்டுக்குள்ளே பெண்டாட்டியை பூட்டி வைச்சிட்டு நீங்க உலகம் சுற்றும் வாலிபனா சுற்றலாம்..."

"அட.. இது கூட நல்லாயிருக்கே.. அப்புறம்..?"

"ஆத்தங்கரையும்.. தோப்பு வீடும் உங்களுக்காத் தானே இருக்கு.."

"தோப்பு வீடு..? அங்கே யாரைச் சந்திப்பேன்னு நினைக்கிற..?"

"அது உங்க மனதுக்குத் தெரியும்..."

"உன் மனதுக்கு என்னடி தெரியும்..?"

அவன் புயலை உள்ளடக்கிய அமைதியுடன் கேட்டான்.. அவள் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. அவள் முகத்தைப் பற்றித் தன் பக்கமாக திருப்பி அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான் வாசுதேவன்.. துளைக்கும் அவன் பார்வை அவள் மனதை படிக்க முயன்றது..

"அந்தப் பெண் வர்ணா - காலேஜில சேருகிறதுக்கு என் உதவி வேண்டும்ன்னு கேட்டு என்னைப் பார்க்க மில்லுக்கு வந்திருந்தா.. நானும் எனக்குத் தெரிந்த காலேஜில உறவுக்காரப் பெண்ணுன்னு சொல்லி சேர்த்து விட்டேன்.. அதைத்தவிர அவளை நான் வேற எங்கேயும் சந்திச்சுப் பேசினதில்லை.. அவளுக்கும் எனக்குமான சம்பந்தம் அவ்வளவேதான்.."

"ஏன்..? அவளைக் காலேஜில் சேர்த்துவிட அவள் வீட்டில் யாரும் இல்லையா..?"

"யார் இருக்கிறாங்க..? அவளோட அப்பா உல்லாசப் பேர்வழி.. இருக்கிற சொத்தை ஜல்சா வாழ்க்கையில கரைச்சுக்கிட்டு இருக்கார்.. எப்ப எந்த ஊரில் சுத்துவாருன்னு யாருக்கும் தெரியாது.. அவளோட அம்மா வீடு விடாப் போய்.. பொய்.. பொய்யா கதை பேசும்.. வேற ஒன்னும் தெரியாது.. அந்தப் பரிதாபத்திலதான் உதவி செய்தேன்.."

"ஆனா.. உங்க சொர்ணாத்தையே வர்ணாவும்.. நீங்களும் அடிக்கடி தோப்பில சந்திக்கிறதா உங்க வீடு தேடி வந்து சொல்லியிருக்காங்களாமே.. உங்க வீட்டில் இருக்கிறவங்க அதனாலதான் நீங்க வர்ணாவைத்தான் மேரேஜ் பண்ணிக்குவீங்கன்னு நினைச்சாங்களாமே..."

"சொர்ணாத்தை அதை மட்டும் சொல்லலை.. வர்ணாவை படிக்க வைக்கிறதே நான்தான்னு ஊர் பூராவும் சொல்லிக்கிட்டு அலையுது.. அதுக்காக வர்ணாவே எனக்கு போன் பண்ணி மன்னிப்புக் கேட்டிருக்கா.."

"ஓ..."

நிவேதிதா உச்சரித்த அந்த ஒற்றை எழுத்தில் ஓராயிரம் அர்த்தங்கள் ஒளிந்திருந்தன...

"எதுக்காக இப்படியொரு 'ஓ' வைப் போடறேன்னு தெரியுது.. ஒன்னை மனசில வைச்சுக்கடி.. நான் ஒன்னையே நினைச்சு அதிலேயே வாழ்கிற ரகம்.. வர்ணாவைக் காதலிச்சிருந்தா அவளைத்தான் கட்டியிருப்பேன்.. பழி தீர்க்கன்னு உன் கழுத்தில் தாலி கட்டியிருக்க மாட்டேன்.. நான் மட்டுமில்ல.. என் அப்பா.. தாத்தான்னு எங்க குடும்பத்து ஆம்பளைக.. பெண்டாட்டிக்கு மட்டும் புருசனா இருக்கிறவங்கடி.. என் தாத்தாவ அரச குளத்துக்கு வண்டி கட்டிக்கிட்டுப் போனார்ன்னு ஒட்டு மொத்தக் குடும்பமும் கூட்டுச் சேர்ந்துக்கிட்டு கிண்டலடிப்போம்.. ஆனா.. அதைச் சொல்கிற பாட்டிக்கே தாத்தா தப்பான எண்ணத்தோட வண்டியக் கட்டிக்கிட்டுப் போகலைங்கிற உண்மை தெரியும்.. அதைச் சொல்லிக் கிண்டல் பண்ணும் போது எங்க தாத்தா முகத்தில வழிகிற அசடை ரசிக்கிறதுக்காகவே நாங்க வம்பிழுப்போம்.. மத்தபடி.. நாங்க மனசு சுத்த மானவங்க.. என் தோப்பு வீட்டில என் குடும்பத்தைத் தவிர வேற யாரும் காலடி வைத்ததில்ல..."

நீளமாகப் பேசியவன் அவள் முகத்துக்கு நேரே குனிந்து..

"அந்தத் தோப்பு வீட்டின் மாடி ரூமில உன்கூடக் கொஞ்சிக் குழாவினதைப் போல வேற யார்கூடவும் நான் கொஞ்சிக் குழாவினதில்ல.." என்று மெதுவாக ஆனால் அழுத்தமான குரலில் சொன்னான்...

அதன் பின்பு.. வாசுதேவன் அதிகமாக அவளிடம் பேசுவதில்லை.. வீட்டிலும் தூங்குவதில்லை.. புதிதாக ஜவுளிக்கடையைத் திறக்கப் போவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டவன் அதைக் காரணம் காட்டி வெளியூர் பயணங்களை அடிக்கடி மேற்கொண்டான்.. பயணங்கள் இல்லாத சமயங்களில் மற்ற வேலைகளே கதியென்று இருந்து விட்டு நள்ளிரவில் வீடு திரும்புவான்.. அவன் வரும் வரைக்கும் நிவேதிதா காத்திருந்து உணவு பரிமாறுவாள்.. அதை உணர்வுகள் துடைத்த முகத்துடன் பார்த்தபடி சாப்பிட்டு விட்டு எதுவும் சொல்லாமல் போய் விடுவான்..

"பாவம்.. புள்ளைத்தாய்ச்சிப் பொண்ணுடா.. உனக்காக கண் விழிச்சுக் காத்திருக்கா.. அவ உடம்புக்கு என்னவாகும்..?"

சாவித்திரியும்.. பார்வதியும் அவனை கடிந்து கொண்ட ஓர் தினத்தின் இரவில் அவன் அவளிடம் சொன்னான்..

"எனக்காக நீ காத்திருக்க வேணாம்..."

அதற்கான உடனடியான பதிலை அவளும் சொல்லி விட்டாள்..

"நான் உங்களுக்காக காத்திருக்கலை.. உங்க வீட்டுக்காக காத்திருக்கேன்.."

"புரியலை.."

"இந்த வீட்டைப் பொறுத்தவரை... நான் உங்க வொய்ஃப்... உங்களுக்காக காத்திருந்து சாப்பாடு போட வேண்டியது என்னோட கடமை அதை நான் செய்யலைன்னா உங்க குடும்பத்தில சந்தேகப் பட்டிருவாங்க..."

அவன் சட்டென்று அவளை கூர்ந்து பார்த்தான்.. அந்தப் பார்வையில் இருந்து அவன் மனதில் என்ன நினைக்கிறான் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் திகைத்தாள் நிவேதிதா..

மறுநாள் அவன் சீக்கிரமாகவே வீடு திரும்பி விட்டான்.. ஹாலில் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக குடும்பத்தில் இருந்த அனைவரும் குழுமியிருந்தார்கள்.. அன்று நடந்த பஞ்சாயத்தைப் பற்றி கோபிநாதனிடம் கதை கேட்டுக் கொண்டிருந்தார் உமாபதி.. அந்தக் கதை கேட்கும் பழக்கம் தான் அவரை அரசகுளம் வரைக்கும் விரட்டிக் கொண்டு போனது என்று சாவித்திரியிடம் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள் பார்வதி.. அது எதையும் கவனிக்காமல் டிவியின் திரையை ஊன்றிப் பார்த்தபடி அதைப்பற்றி நிவேதிதாவிடம் விமரிசனம் செய்து கொண்டிருந்தாள் வாஸந்தி...



"நாளன்னைக்கு.. நிவேதிதாவோட வீட்டில இருந்து கட்டிச்சோறு கொடுத்து அவளை அழைச்சுக்கிட்டுப் போக வர்றாங்க..."

பொதுப்படையாக அவன் அறிவித்ததில் அனைவரும் அவனை நிமிர்ந்து பார்த்தார்கள்.. பார்வதியும்.. சாவித்திரியும் முகம் மாறிப் போனார்கள்...

"என்னடா தம்பி இது.. இப்பத்தானே இவளுக்கு ஏழாம் மாசம் ஆரம்பிக்குது.. நேத்துத்தானடா ஆறாம் மாசக் கணக்கு முடிஞ்சுச்சு.. அதுக்குள்ள கட்டிச்சோறு குடுக்கணுமுன்னா எப்படிடா..? இப்பவே இவளை பிறந்த வீட்டுக்கு அனுப்பினா.. குழந்தை பிறந்து மூணாம் மாசம் தானே நாம கூப்பிட்டுக்கிட்டு வர முடியும்..? ஏழு மாசமா இவள விட்டுட்டு எப்படிடா இருக்கிறது..?" பார்வதி படபடத்தாள்..

'இவன் அதற்காகத்தானே இந்தத் திட்டம் போட்டிருக்கான்..' என்ற நினைவில் நிவேதிதா உதட்டைக் கடித்தாள்..

ஆனாலும் வாசுதேவன் அசைந்து கொடுக்கவில்லை.. அவன் முடிவெடுத்து விட்டால் மாற மாட்டான்.. என்பதை அனைவரும் தெரிந்து வைத்திருந்ததால்.. மறுநாளுக்கு அடுத்த நாளில் வரும் விஷேச தினத்தை எதிர்கொள்ளும் ஏற்பாடுகளில் இறங்கினார்கள்..

அன்று இரவு.. மாடியறைக்கு தூங்க வந்த நிவேதிதாவிடம்..

"இனி யாரும் உன் மேல என் பெண்டாட்டிங்கிற கடமையைத் தூக்கிப் போட மாட்டாங்க.. எனக்காக காத்திருந்து சாப்பாடு போட வேண்டிய வேலை உனக்கு இல்லை.." என்று சொன்னான் வாசுதேவன்..

"ஏழு மாதம்தானே.. அதுக்கப்புறம்..?"

அவனைக் காயப் படுத்தும் வேகத்தில் கேள்வி கேட்டு விட்டு படுத்துத் தூங்கி விட்டாள் நிவேதிதா.. வாசுதேவன் புருவச் சுளிப்புடன் விழித்திருந்தான்..

## 32

"ஏங்க.. காய்கறிக் கடைக்குப் போன் போட்டிங்களா..?"

சாவித்திரி... வாஸந்திக்கு தலை வாரிப் பின்னலிட்டபடி கோபிநாதனிடம் கேட்டாள்.. அவர் அவசரமாக செல்போனை கையில் எடுத்தார்.. வாஸந்தி தலையை அசைத்தாள்.. அவள் தலையில் ஒரு குட்டு வைத்தாள் சாவித்திரி..

"அசையாதேடி.." மகளை அதட்டினாள்..

"தலை முடிய இறுக்கிப் பிடிக்காதேம்மா.. வலிக்குது.." வாஸந்தி சிணுங்கினாள்..

"எழுகழுதை வயசாகுது.. இன்னும் தானா எதையும் செய்யத் தெரியலை.." மகளைத் திட்டியபடி கோபிநாதனை பார்த்தாள் சாவித்திரி...

அந்தப் பார்வையில் அந்தத் திட்டு மகளுக்கானதா.. இல்லை.. அவருக்கானதா என்ற சந்தேகத்தில் ஆழ்ந்தார் கோபிநாதன்.. அந்த சந்தேகத்திற்கே இடம் வைக்காமல்..

"கல்யாணமாகிப் போனா என்னடி செய்வ..? அங்கே எல்லாத்தையும் நினைப்புக்கூட்டி நீதான் எடுத்துச் செய்தாகனும்.. தானாச் செய்யற ஆம்பளைகள நீ கனவில கூடப் பார்க்க முடியாது.. தலைமுடிய பின்னல் போடவே தெரியலைனா.. நீயெல்லாம் என்னத்த குப்பை கொட்டப் போறியோ.. உனக்கெல்லாம் எனக்கு வாய்ச்ச வாழ்க்க மாதிரி வாய்ச்சுட்டா அம்புட்டுத்தான்.." என்று சொல்லி அனைத்து திட்டுக்களும் அவருக்கானதே என்பதை உறுதிபடுத்தினாள் சாவித்திரி..

சாவித்திரிக்கு வாய்த்த வாழ்க்கை எத்தகையது.. அதனால் அவளுக்கு என்னகுறைவந்து விட்டது என்பதை கேட்டறிய ஆவல் கொண்டார் கோபிநாதன்.. அவ்வாறு கேட்டு விட்டால் அவள் பட்டியலிடும் குறைகளை அவ்ரால் அந்த ஜென்மத்துக்குள் கேட்டு விட முடியுமா.. என்று அவரது அறிவு அவரைக் கேட்டு வைத்ததால் அதைக் கண்டு கொள்ளாமல் காய்கறிக் கடைக்காரரிடம் போனில் பேச ஆரம்பித்தார்..

"சமையல்காரன வரச்சொல்லியிருந்தீங்களே.. என்ன இன்னும் காணோம்.." உமாபதியிடம் மண்டகப்படியை ஆரம்பித்துவைத்தாள் பார்வதி..

"நான் எப்படி வரச்சொன்னேன்..?" என்று வாய்விட்டு தானாகத் தூண்டிலில் மாட்டித் தொலைத்தார் உமாபதி..

"நினைச்சேன்.. நீங்க இப்படித்தான் செஞ்சு வைப்பீங்கன்னு.. ஒரு வீடான வீட்டில.. விசேசம் நடக்கப் போகுதே.. பெரிய மனுசனாய் லட்சணமாய் சமையலுக்கு ஆள் சொல்லி விடனும்கிற அறிவு இருக்க வேண்டாம்..?" பார்வதி பிலுபிலுவென பிடித்துக் கொண்டாள்..

"சொன்னாத்தானடி செய்ய முடியும்..?" பரிதாபமாக கேட்டு வைத்தார் உமாபதி..

"ஓ.. ஐயா சொன்னத்தான் எதையும் செய்வீங்களோ.. சொல்லாம எதையும் செய்ய மாட்டிங்களோ... அன்னைக்கு அரசகுளத்துக்கு வண்டியைக் கட்டிக்கிட்டுப் போணிங்களே.. அதை யார் சொல்லி செஞ்சீங்க..?" பார்வதி கேட்ட கேள்விக்கு திருதிருத்தார் உமாபதி..

"அத மட்டும் தானாச் செஞ்சவருக்கு.. இத தானாச் செய்யத் தெரியாதா..?" பார்வதி சரியான இடத்தை பிடித்து விட்டாள்..



உமாபதி போனை காதுக்கு கொடுத்தபடி வாசலுக்கு பாய்ந்து அங்கே ஏற்கனெவே காய்கறிக்காரருடன் போனில் பேசிக் கொண்டிருந்த மகனிடம் அடைக்கலமானார்..

நடந்து கொண்டிருந்த களேபரங்களைப் பார்த்தபடி மாடியிறங்கி வந்த நிவேதிதாவின் மனம் கனத்தது.. அந்த உயிர்ப்பு ததும்பும் வீட்டை விட்டு அவள் கிளம்பிப் போக வேண்டும்.. வாத்சல்யத்துடன் அவளைப் பார்த்துப் புன்னகைக்கும் பார்வதியையும்.. சாவித்திரியையும் அவள் பிரிந்தாக வேண்டும்.. அண்ணி.. அண்ணியென்று சுற்றிச் சுற்றி வரும் வாஸந்தியிடமிருந்து விலகி அவள் பெங்களூருக்குச் சென்றாக வேண்டும்..

'எதைச் சொன்னால் இவன் எதைச் செய்கிறான்.. பார்..' அவள் மனம் பொருமியது..

வாசலில் யாரையோ உமாபதி வரவேற்கும் சப்தத்தைக் கேட்ட சாவித்திரி.. மகளின் பின்னலை பின்னி முடிந்தவளாக அவளை

"போடி.." என்று தள்ளிவிட்டு..

"யாரு அத்தை..?" என்று பார்வதியிடம் கேட்டாள்..

"தெரியலையே.. உன் மாமனாருக்கு பேச ஆள் வேணும்னு தெருவில போறவரை வாங்க.. வாங்கங்கிறாரோ.." பார்வதி உமாபதியின் மீதான அவளது உயர்ந்த அபிப்ராயத்தைத் தெரியப்படுத்தினாள்..

"சேச்சே.. அப்படியெல்லாம் இருக்காது அத்தை.." என்று மறுத்த சாவித்திரி..

"மத்த நாளில வேணும்னா அப்படிச் செய்வாராயிருக்கும்.. நாளைக்கு விசேசத்த தல மேல வைத்துக்கிட்டு இன்னைக்குப் போயி வம்பு மடத்தைக் கூட்டுவாரா என்ன..?" என்று கேட்டு வைத்ததில் நிவேதிதாவுக்கு சிரிப்பு வந்தது..

"வாங்க.. வாங்க.." என்றபடி வந்த உமாபதியைத் தொடர்ந்து வந்தவர்களைக் கண்டதும்..

"மாமா.. அத்தை.. அத்தான்.." என்று பரபரப்புடன் வரவேற்றாள் நிவேதிதா..

"அத்தை.. இவங்க என் தாய்மாமா.." நிவேதிதா அறிமுகப்படுத்தியதும்..

"ஓ.. மாளவிகாவோட அண்ணன் குடும்பமா..?" என்று கண்டு கொண்ட சாவித்திரி.. பார்வதியைப் பார்த்து..

"நான் சொன்னேனில்ல.." என்றாள்..

"என்ன சொன்னீங்க..?" நிவேதிதாவின் அத்தை கேட்டதும்..

"மொட்டை மாடியில காக்கா கத்துது அத்தை.. இன்னைக்கு விருந்தாளி வரப் போறாங்கன்னு என் மருமக சொன்னா.. இல்லே சாவித்திரி.." என்று சமாளித்தாள் பார்வதி..

“ஓ..” தலையாட்டி வைத்தாள் நிவேதிதாவின் அத்தை..

மில்லுக்குக் கிளம்பும் அவசரத்துடன் வந்த வாசுதேவனிடம் வந்திருந்த விருந்தாளிகளை அறிமுகப் படுத்தி வைத்தாள் நிவேதிதா..

“இவர்தான் உன் அத்தானா..?”

கோவர்த்தனனை முறைத்தபடி ஒரு தினுசாக வினவினான் வாசுதேவன்.. அவனது இடக்கு நிவேதிதாவுக்கு மட்டுமே புரிந்தது.. கோவர்த்தனன் வெள்ளையாகச் சிரித்தபடி வாசுதேவனுக்கு கை நீட்டினான்.. பதிலுக்கு வேண்டா வெறுப்பாக கை கொடுத்த வாசுதேவனுக்கு கடுப்பாக இருந்தது..

“நிவேதிதா வளைகாப்புக்கு முதல்நாளே நீங்க வந்திருக்கிறதில எங்களுக்கு ரொம்ப சந்தோசம்..” உபசாரமாக சொன்னாள் சாவித்திரி..

“இல்லைங்க.. நாங்க எங்க மகன் கல்யாணத்துக்கு பத்திரிக்கை வைக்க வந்தோம்.. நாளைக்கு வளைகாப்பு முடிஞ்சதும் நிவேதிதா பெங்களூருக்கு கிளம்பிப் போயிருவா.. அவ இங்கே இருக்கிறப்பவே அவளுக்கும் சேர்த்து நாங்க பத்திரிக்கை வைக்கணுமில்ல.. என்னதான் இருந்தாலும் இதுதான அவ வீடு..?” என்று கேட்டாள் நிவேதிதாவின் அத்தை..

வாசுதேவனின் பார்வையும் நிவேதிதாவின் பார்வையும் சந்தித்து விலகின...

“ஆமாமாம்..” பெருமிதத்துடன் ஆமோதித்தாள் சாவித்திரி...

“நாளைக்கு விசேச நாளில வந்து பத்திரிக்கை வைச்சா.. வந்த இடத்தில நாங்க பத்திரிக்கை வைச்சோம்கிற பேரு வந்திரும்.. இதுக்குன்னு தனியா வந்து நாங்க பத்திரிக்கை வைக்கிறதுதான் முறை..” வினயமாகப் பேசினாள் கோவர்த்தனனைப் பெற்றவள்..

“அதுவும் சரிதான்..” ஆமோதித்தாள் பார்வதி..

வெள்ளித்தாம்பாலத்தட்டில் வெற்றிலைபாக்கு.. பழம்.. இவற்றுடன் பணக்கட்டையும் சேர்த்து வைத்து அதன் மேல் பத்திரிக்கையை வைத்து தான் நிவேதிதாவிற்கு தாய்மாமன் என்பதைக் காட்டினார் மாளவிகாவின் அண்ணன்...

முறையான அந்த மரியாதையில் உமாபதியும்.. கோபிநாதனும் திருப்தி பட்டுப் போனார்கள்..

“வளமை தெரிஞ்சவங்க..” உமாபதியின் முணுமுணுப்பை லேசான தலையசைவின் மூலம் அங்கிகரித்தார் கோபிநாதன்..

வாசுதேவன் கைக்கடிகாரத்தை பார்த்து விட்டு எழுந்து கொண்டான்.. மில்லுக்கு நேரமாகிவிட்டதாகச் சொல்லி விட்டுக் கிளம்பியவன் நிவேதிதாவை ஓர் பார்வை பார்க்க... அந்தப் பார்வையின் அழைப்பில் அவனைப் பின் தொடர்ந்தாள் நிவேதிதா..



“என்ன..?” எங்கோ பார்த்தபடி அவள் கேட்க..

“நாளைக்கு நீ கிளம்பணுமில்ல.. உனக்குத் தேவையான மெடிசின்.. மத்த சாமான்கள்ன்னு என்னென்ன வேணும்னு சொன்னேன்னா நான் வர்றப் வாங்கிட்டு வந்திடுவேன்..” என்றான் வாசுதேவன்..

“எதுவும் தேவையில்லை.. எல்லாத்தையும் டாடி பார்த்துக்குவார்..” மறுத்தாள் நிவேதிதா..

“பிறக்கப் போகிறது என் குழந்தை.. அதுக்கு நான் தான் செலவு பண்ணணும்..” வாசுதேவன் சீற்றத்துடன் சொன்னான்..

“ஆனா.. நான் எங்க டாடியோட குழந்தை.. என்னை அவர் பார்த்துக்குவார்..” நிவேதிதா பதிலுக்கு சீறினாள்..

“அது கல்யாணத்துக்கு முந்தின சொந்தம்டி.. இப்ப நீ எனக்கு பொண்டாட்டி..” வாசுதேவனின் கண்கள் சிவந்தன...

“அதைக் கடமையிலிருந்து கழட்டி விட்டிருக்கிறதா சொல்கிறவர் சொல்லக் கூடாது..” நிவேதிதாவும் சொல்லி விட்டாள்..

வாசுதேவனின் கண்கள் மின்னின.. நிவேதிதா நாக்கைக் கடித்துக் கொண்டாள்.. வாயை விட்டு விட்டோமே என்று தனக்குத்தானே மானசிகமாக குட்டிக் கொண்டாள்..

அவன் எதையோ சொல்ல வாயெடுத்தான்.. அப்போது அங்கே வேகமாக வந்த கோவர்த்தனம்..

“நல்ல வேளையா நீங்க இன்னும் கிளம்பலை..” என்றான்..

வாசுதேவனின் முகம் சுருங்கியது.. லேசான கடுமையுடன்..

“என்ன விசயம்..?” என்று கேட்டான்..

அதை இப்படியா கேட்பது என்று மனம் புழுங்கினாள் நிவேதிதா.. இதை அவனிடம் யார் சொல்வது..?

“நன்றி சொல்ல வந்தேங்க.. நிவேதிதா எனக்கென்னன்னு போகாம என்கூட சண்டைக்கு நின்னதினால மட்டும்தான் எனக்குள்ள துணிச்சல் வந்தது.. இல்லேன்னா என் காதல் என்னவாகியிருக்குமோ.. நீங்க செய்கிறது சரியில்லைன்னு நிவேதிதா சண்டை போடவும் நானும் துணிஞ்சு என் அப்பாம்மா கிட்ட மல்லுக்கு நின்னுட்டேன்.. அம்மா விசப் பாட்டிலை எடுத்துச்சு.. வா.. நீயும் நானும் ஒன்னாக் குடிக்கலாம்ன்னதும் வழிக்கு வந்திருச்சு..” முகம் மலரச் சொன்னான் கோவர்த்தனன்..

“இதைச் சொல்ல உங்களுக்கு சங்கடம் வரலையா கோவர்த்தனன்..” கண்கள் இடுங்கக் கேட்டான் வாசுவேதன்..

"எதுக்கு சங்கடப்படணும்..?"

"உங்களை நம்பி ஒருத்தி காதலிச்சிருக்கா.. அந்தப் பெண்ணை கைவிடாம இருக்கிறது உங்க கடமை.. அதைச் செல்வி உங்க கடமையை நினைவு படுத்த வேறொருத்தி வரணுமா..? உங்க காதலியைக் கட்டிக்கிற கடமை உங்களுக்கில்லையா..? இதைச் சொல்ல உங்களுக்கு சங்கடம் வரணும்.." கோவர்த்தனன்..

வாசுதேவனின் நேரடியான கேள்வியில் உண்மை-யிலேயே சங்கடப்பட்டுப் போனான் கோவர்த்தனன்..

"ஒருவேளை நிவேதிதா உங்க விசயத்திலே தலையிடலைன்னா நீங்க சௌதாமினியைக் கல்யாணம் பண்ணிக்க உங்கவீட்டில் போராடியிருப்பீங்களா..?" என்ற வாசுதேவனின் கேள்விக்கு அவனால் பதில் சொல்ல முடியவில்லை..

"நன்றி..."

பொதுவாக முணுமுணுத்து விட்டு வேகமாக அங்கிருந்து அகன்று விட்ட கோவர்த்தனின் முதுகைப் பார்த்து..

"மண்குதிரை." என்று கோபப்பட்டான் வாசுதேவன்..

"சௌதாமினியும் இதைத்தான் சொன்னா.." என்றாள் நிவேதிதா..

"உன் மாமா மகனைத் திட்டிட்டேன்னு உனக்கு கோபமாயிருக்கும்.." வாசுதேவன் நிவேதிதாவின் முகத்தை கூர்ந்து பார்த்தான்..

"இல்லை.. சந்தோசமாயிருக்கு.. நீங்க கேட்ட கேள்விகள் நியாயமானவை.."

நிவேதிதாவின் பதில் அவனை ஆச்சரியப் படுத்தியது.. ஏதோ ஒரு வகையில் அவளின் அந்தப் பதிலால் அவன் மனதில் இதம் பரவுவதை அவன் உணர்ந்தான்.. இருவரின் விழிகளும் சந்தித்துக் கொண்டன.. இருவருமே அசையாமல் நின்றார்கள்...

## 33

வாசுதேவனுக்கு வீட்டுக்குப் போகவே பிடிக்கவில்லை.. நிவேதிதா இல்லாத தனிமை அவனைத் தாக்கியது.. வளைகாப்பு முடிந்து நிவேதிதா கிளம்பிப் போனபின்பு 'வெறிச்' என்ற அந்தத் தனிமையை உணர்ந்தான் வாசுதேவன்.. அவளைத் தேடிப் போக வேண்டும் என்று தோன்றும் போதெல்லாம்.. ஏதோ ஒன்று அவனைத் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தது..

நிவேதிதாவின் நிலையும் அவனைப் போலவே இருந்தது.. அவளை ஏழாம் மாதத்தைக் காரணம் காட்டி 'வளைகாப்பு' என்ற பெயரில் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்ட அவனுடைய செயலை அவளால் மறக்க



முடியவில்லை.. தினமும் அவனுடைய செல்போன் ஒலிக்கும் போதெல்லாம் அவனுடைய போன்தானோ என்று ஆவலாக எடுத்துப் பார்ப்பாள்.. அவன் அழைத்திருக்க மாட்டான்.. அவனாக அழைக்காமல் அவளாக பேசுவதா என்ற வீம்புடன் போனை தூக்கிப் போட்டு விடுவாள்.. அந்த வகையில் அவள் மென்மையான குணம் படைத்தவள் என்பதினால் அவனுடைய போன் தப்பித்தது..

வாசுதேவன் தோப்பு வீட்டிற்குப் போகும் போதெல்லாம் அவளுடன் அவன் கழித்த அந்த நாளின் நினைவு வந்து அவனை அலைக்கழித்தது.. ஆனாலும் அவனால் தோப்பு வீட்டிற்குப் போகாமல் இருக்க முடியவில்லை.. அவளுடன் கழித்த அந்த நாளை நினைவு கூர்வதற்காகவே அடிக்கடி தோப்புப் பக்கம் போனான்..

அன்றும் அப்படித்தான்.. அவன் தோப்பைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தான்.. நிவேதிதாவுடன் விழுந்த தண்ணீர் தொட்டியைப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு இந்த அளவுக்கா அவள்மீது நினைவு வைத்திருக்கிறான் என்று ஆச்சரியமாக இருந்தது..

"ஐயா.." என்ற குரல் கேட்டுத் திரும்பினான்..

அங்கே மாயவன் நின்றிருந்தான்..

"வா.. மாயவா.. லீவா.." என்றபடி அங்கிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்த வாசுதேவன்..

"உட்காருப்பா.." என்றான்..

மாயவன் எதிரேயிருந்த சிமிண்ட் தொட்டியின் திட்டில் அமர்ந்தான்...

"கொஞ்ச பணம் சேர்ந்திருக்குய்யா.. அதான் கடன் தொகையில கொஞ்சத்தை கழிச்சுக்கலாம்ன்னு கொண்டு வந்தேன்.." சட்டைப் பையிலிருந்த பணக்கட்டை எடுத்து நீட்டினான் மாயவன்..

"இருக்கட்டும் வாங்கிக்கறேன்.." சிந்தனையுடன் சொன்னான் வாசுதேவன்..

"அம்மாவப் பாத்தேனுங்கய்யா.. காலேஜிக்கு வந்திருந்தாங்க.." மாயவன் சொன்னதும்..

'இந்த உடம்போட காலேஜிக்கு எதுக்குப் போனா..?' பல்லைக் கடித்தான் வாசுதேவன்..

அதையும் மாயவனே தொடர்ந்து சொன்னான்..

"அம்மா மேலே படிக்கப் போறாங்களாம்.. அதுவும் எங்க காலேஜில வேலை செய்துகிட்டே.. சாயந்திர வகுப்பில படிக்கப் போறாங்களாம்.. அம்மா சொன்னதும் நான் ஆச்சரியப்பட்டுப் போனேங்க.. ஐயா முகத்தைக் கூடப் பாக்காம அவங்க காதலிச்சதுக்கு ஐயா அம்மாவ ஒரு நிமிசம் கூட விட்டுப் பிரிய மாட்டாருன்னு நினைச்சேங்க..."

'அவ என்னைக் காதலிச்சாளா..? அதுவும் முகம் பார்க்காமலா..? இது என்ன புதுக்கதை..?'

"அம்மா உங்கிட்டச் சொல்லியிருப்பாங்களேய்யா.."

"சொன்னா.. சொன்னா.."

"மணிமுத்தாறு அருவியில உங்களப் பாத்த பின்னாலே குடும்பத்தப் பாக்கப் போக அம்மாகிட்டத்தான் பணம் கடன் கேட்டேங்க.. இங்கேயா உங்க குடும்பம் இருக்குன்னு ஆச்சரியமாக் கேட்டாங்கய்யா.. நான் விவரம் சொன்னதும் உங்களப் பத்தி உயர்வாப் பேசி ஆச்சரியப் பட்டாங்கய்யா.. அதுக்கப்புறம் பெங்களூருக்கு வந்த பின்னாடியும் தினமும் உங்களைப் பத்தித்தான் கேட்பாங்க.. அவர் எப்படியிருப்பார்.. அது இதுன்னு கேப்பாங்கய்யா.. அவங்க தோழிககூட.. உன் மனசு போல கிராமத்து மாப்பிள்ளை கிடைச்சாச்சுன்னு கிண்டல் பண்ணுவாங்கய்யா.. அம்மா அதுக்கு சிரிப்பாங்க..."

"அவளுக்கு கிராமம்ன்னா பிடிக்குமா..?"

"என்னங்கய்யா நீங்களே இப்படிக் கேட்கறிங்க.. அம்மாவுக்கு எதுபிடிக்கும்.. எது பிடிக்காதுன்னு உங்களுக்குத் தானே நல்லாத் தெரியும்..?"

"அவ இதைச் சொல்லலை மாயா.."

"அம்மாவுக்கு கிராமம்ன்னா கொள்ளைப் பிரியங்க.. விவசாயம்ன்னா அவ்வளவு பிடித்தமா பேசுவாங்க.. கூட்டுக் குடும்பத்திலதான் வாழ்க்கைப்படப் போறேன்னு அவங்க தோழிககிட்டச் சொல்லி எனக்கு பாட்டி.. தாத்தா.. மாமனார்.. மாமியார்.. நாத்தனார்ன்னு இருக்கனும்ன்னு ஆசைப் படுவாங்க.. அதைச் சொல்லிச் சொல்லி அவங்க தோழிக அம்மாவைக் கிண்டல் பண்ணுவாங்கய்யா.."

'அப்படியும் இருக்குமோ..'

வாசுதேவனின் மனதில் அருவியில் குளித்தபடி..

"கிராமமா.. ச்சீ.." என்று நாணப்பட்ட நிவேதிதாவின் முகம் வந்து நின்றது..

'அந்த முகத்தில் அருவெறுப்பு இல்லையே.. வெட்கம் தானே இருந்தது.. சிரித்தபடிதானே அவள் பேசினாள்..?'

தவறு செய்து விட்டோமோ என்று பதறிப் போனான் வாசுதேவன்.. அவளை அவன் இடித்தபோது.. அவன் முகம் பார்க்காமல்தான் அவள் பேசினாள் என்பது அவன் மனதில் வந்தது.. அவளைப் பெண்பார்க்க போனபோது அவனை அறிமுகமற்ற சொந்தமில்லாத பார்வையைத்தான் அவள் பார்த்தாள் என்பதையும் அவன் நினைவு கூர்ந்தான்.. அவன் கோடிஸ்வரன்.. இளம் தொழிலதிபன்.. இது போன்ற விவரமெல்லாம் அவளுக்குச் சொல்லியிருப்பார்கள்தானே.. அது தெரிந்தும் அவனை அவள் பிடித்தமில்லாத



பார்வையைத் தானே பார்த்து வைத்தாள்.. எப்போது அவன் தான் மாயவன் சொன்ன வாசுதேவன் என்று தெரிந்ததோ.. அப்போதுதானே அவள் அவனை ஆர்வமாக நிமிர்ந்து பார்த்தாள்..?

"சொல்லாமலே.. யார் பார்த்து..?
நெஞ்சோடுதான் பூப்பூத்தது.."

வேலய்யனின் எப்.எம் இசைத்தது.. வாசுதேவனின் மனதில் சொல்லாமலே பூப்பூத்தது... அவனை முகம் பார்க்காமல் ஒருத்தி விரும்பிக் காதலித்திருக்கிறாள்.. அவளே அவனுக்கு மனைவியாகவும் ஆகியிருக்கிறாள்.. அவனுடைய குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருக் கிறாள் என்ற உண்மையில் அவன் திக்கு முக்காடிப் போனான்..

"நானு ஒவ்வொரு மாசமும் சம்பளம் வாங்கினதும் நம்ம ஊரைப் பார்க்க வந்துட்டு வருவேனிலங்கய்யா.. அம்மாவுக்கு அது தெரியும்.. அப்பல்லாம் நான் ஊரிலிருந்து வந்தவுடனே அம்மா எதையாச்சும் கேட்க வருகிறதைப் போல வந்துருவாங்க.. அங்கே சுத்தி.. இங்கே சுத்தி.. பேச்சை உங்ககிட்டத்தான் கொண்டுவந்து நிறுத்துவாங்க.."

மாயனின் பேச்சைக் கேட்கக் கேட்க.. வாசுதேவனுக்கு சுகமான அனுபவமாக அது இருந்தது.. அவன் காதலிக்கப் பட்டிருக்கிறான் என்ற புதிதான தகவலில் அவன் மலைத்துப் போயிருந்தான்.. அவன் மனதில் நிவேதிதாவின் அழகான முகம் தோன்றியது.. அதில் தெரிந்த நாணப் பார்வைகளின் பின்னணியில் காதல் இருந்திருக்கிறது என்ற உண்மையில் அவள் மீது காதலாகிப் போனான் வாசுதேவன்...

"ஐயாவோட போட்டா இருந்தாள் காட்டுங்-கண்ணான்னு கேட்டாங்கய்யா.. நானொரு மடப்பயன்.. என் செல்போனில படம் எடுக்கற வசதியிருந்தும் ஒருநாள் கூட ஐயாவ படம் எடுத்ததில்லங்க.. அம்மா முகத்தில ஏக்கத்தப் பார்த்ததும் கட்டாயமா இந்தத் தடவ ஐயாவ படம் எடுத்திரனும்னு நினைச்சுக்கிட்டே இருந்தேனுங்க.. ஐயாவோட படத்தக் கொண்டுவந்து அம்மாகிட்டக் காட்டனும்.. அப்ப அம்மாவோட முகம் மலர்ந்து போகிறத மனசாரப் பார்க்கனும்னு ஆசைப் பட்டேங்கய்யா..."

'அதுக்குப் பதிலா எங்கிட்ட விவரத்தச் சொல்லித் தொலைச்சிருக்கலாமேடா..' வாசுதேவன் நொந்து போனான்..

"ஒரு நா பார்த்திங்கன்னாங்கய்யா.. அம்மாவுக்கு காலேஜில லீவு விட்டிருக்காங்க.. அம்மாவும் அவங்க குடும்பத்தோட ஊருக்குப் போயிருக்காங்க.."

இதை எதற்கு இவன் வேலை மெனக்கெட்டு நம்மிடம் வந்து சொல்கிறான் என்ற நினைவு வந்த போதும் அவன் காரணமில்லாமல் எதையும் சொல்லிவிட மாட்டான் என்ற நினைவும் சேர்ந்து வர.. "ஊம்" கொட்டினான் வாசுதேவன்..

"அங்க இருந்து அம்மா எனக்குப் போன் பண்றாங்க.."

'எதுக்கு போன் பண்ணியிருப்பா..?'

"எதுக்குப் போன் பண்ணியிருப்பாங்களோன்னு என் மனசுக்குள்ள படபடங்க.. என்னவோ ஏதோன்னு நான் பதறிப் போய் அம்மாகிட்ட விசயம் கேட்டேன்.. அவங்க கேட்டாங்க பாருங்க ஒரு கேள்வி..."

'என்னத்தைக் கேட்டிருப்பா..?'

"உங்களுக்கு கல்யாணம் ஆகிருச்சான்னு கேட்டாங்கய்யா.."

"என்னது..?"

'என்னவோ.. ஏதோ..' வாசுதேவனின் மனதில் பாடல் ஒலித்தது.. அவன் மனம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது..

"அம்மா சொன்னதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு வந்துச்சுங்க.." அப்போதும் சிரித்தான் மாயன்..

'சொல்லிட்டுச்சிரிடா..' மனதுக்குள் பரபரத்தான் வாசுதேன்...

"அம்மாவோட பாட்டி ஊரில.. சொந்தத்தில கல்யாண வயசில பொண்ணு இருந்துச்சாம்.. அதுக்கு தோதான மாப்பிள்ளைய அவங்க தேடிக்கிட்டு இருந்தாங்களாம்.. அம்மாவுக்கு ஐயாவோட நினைப்பு வந்திருச்சாம்.. அதச் சொல்றதுக்கு முன்னாலே ஐயாவுக்கு கல்யாணமாகிருச்சா.. இல்லையான்னு விவரம் தெரிஞ்சுக்க போன் போட்டாங்களாம்.. எப்படி..?"

வாசுதேனுக்கு எப்படி என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை.. அவன் மனமெங்கும் பறவைகள் சிறகடித்தன.. அதன் பரபரப்பில் நிவேதிதாவைத் தேடி ஓட வேண்டும் என்று மனம் துடிப்பதை அவன் உணர்ந்தான்..

"நான் இல்லைன்னு சொன்னதும் அம்மாவோட குரல்ல வந்த சந்தோசத்த நான் ஆயுசுக்கும் மறக்க மாட்டேங்கய்யா.. இந்த விசயத்த இனிமேலும் ஆறப் போடக் கூடாதுன்னு ஐயா காதில போட்டு வைக்க நினைச்சேங்கய்யா.. அதுக்குள்ளே ஐயா அம்மாவ பொண்ணுப் பார்த்து பாக்கு வெத்தலை மாத்தி நிச்சயம் பண்ணிட்டிங்க.. அதுக்கு மேல நான் இதச் சொல்லி நீங்க கேட்டுக்கிறத விட அம்மா வாயாலே சொல்லிக் கேட்டுக் கிடறதுதான் உங்களுக்கு சந்தோசத்தைத் தரும்ன்னு நான் பேசாம இருந்துட்டேங்கய்யா..."

வாசுதேவன் மாயனைப் பார்த்த பார்வையில் தெரிந்த உணர்வுகளின் கலவையில் மாயன் திகைத்துப் போனான்..

'ஐயா ஏன் இப்படிப் பாக்கறாக..?'

மாயனின் கைகளைப் பிடித்துக் கொண்ட வாசுதேவன்..

"இனி நீ எனக்கு கடனாளியில்ல மாயா.." என்றான்..



"ஐயா..!.." மாயனின் முகத்தில் ஆயிரம் கோடி சூரியன்களின் பிரகாசம் தெரிந்தது..

"அந்தப் பணம் நான் உனக்குக் கொடுத்த பரிசு.. கடனில்லை.. என் காதலிய நீ எனக்கு அடையாளம் காட்டின.. அதுக்காக நான் உனக்குச் செய்த கைம்மாறு அதுன்னு நினைச்சுக்க.. இனிமே நீ எனக்குக் கடன்பட்டவனில்லை.. ஊருக்காரன்.. அவ்வளவுதான்.."

மாயனின் வாழ்வில் மீண்டும் விளக்கேற்றிவைத்தான் வாசுதேவன்...

## 34

நிவேதிதா தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தாள்.. கர்ப்பிணிப் பெண்கள் நடப்பது மிக அவசியம் டாக்டர்கமலா சொல்லியிருந்தாள்..

"நல்லாச்சாப்பிடு.. ரெஸ்ட் எடு.. காலையிலயும்.. சாயங்காலமும் வாக்கிங் போ... மனசை சந்தோசமா வைச்சுக்க.. அதுதான் எல்லாத்தையும் விட ரொம்பவும் முக்கியம்..." அவள் சொன்ன அறிவுரை நிவேதாவின் காதுகளில் ஒலித்தது...

மற்றதை அவள் செய்து விடலாம்.. ஆனால் மனதை சந்தோசமாக வைத்துக் கொள்ள அவளால் என்ன செய்ய முடியும்..? அதற்கான மந்திரத்தை அவள்மீது யாராவது பிரயோகித்தால்தான் அது சாத்தியமாகும்.. அவள் மனதின் சந்தோசம்தான் வாசுதேவனிடம் மையம் கொண்டிருந்ததே.. அவனில்லாத அந்தச் சூழலில் மனதை சந்தோசமாக வைத்துக் கொள்ளும் மார்க்கத்தை அவள் எப்படி அறிவாள்..?

"நெஞ்சுக்குத் தெரியும்.. நிலவுக்குத் தெரியும்..
நீயார்.. நான்யார்.. என்பது..
ஊருக்குள் இருக்கும்.. யாருக்குத் தெரியும்..
உன்னை என்மனம் நினைத்தது..?"

துயரத்துடன் பாடியவளின் பின்னாலிருந்து வலிமையான இரண்டு கரங்கள் அவள் கண்கள் இறுக்கிப் பொத்தின..

"யார்..?"

அவள் கைகள் அந்தக் கரங்களின் மீது படிந்து விலக்க முயன்றபோது.. ரோமம் படர்ந்த அந்தக் கைகளின் ஸ்பரிசத்தை அவள் இனம் கண்டு கொண்டாள்..

'அவனா..?'

அவள் மனதில் ஆயிரம் தாமரை மொட்டுக்கள் மலர்ந்தன.. தந்தன தந்தன தாளமிட்டன..

"எனக்குத் தெரியும்டி..."

அவன் காதோரமாக அவனது குரல் கேட்டது.. அவனது மீசை முடியின் உராய்வை அவளது காது மடல்கள் உணர்ந்து சிலிர்த்தன.. அவனது வெப்ப மூச்சின் ஒலியை அவள் செவி மடுத்தாள்.. அவள் கண்களில் இருந்து இறங்கிய கை அவளது தோள் தொட்டு அணைத்துக் கொண்டது.. அவளைத் தன்னோடு இறுக்கி ஆரத்தழுவிக் கொண்டான் வாசுதேவன்...

"அம்மா வீட்டுக்கு வந்திட்டா புருசன் நினைப்பு மறந்து போகுமா..?"

உல்லாசமாக கேட்டவனின் முகத்தை பிரமிப்புடன் பார்த்தாள் நிவேதிதா.. அவள் கண்முன் அவன் நிற்பதை அவளால் நம்பக்கூட முடியவில்லை..

"என்னடி அப்படிப் பார்க்கிறவ..?"

அவன் கண்சிமிட்டிச் சிரித்தான்.. அவனது முல்லைப்பூ பல்வரிசையில் அவள் மனம் மயங்கியது.. அந்த வசியக்காரனின் வசியத்தில் சொக்கிப் போனாள் அவள்..

"நீ பாட்டுக்கு இங்கே வந்துட்டியே.. உன் நினைப்பிலே நான் என்னானேன்னு ஒரு நிமிசமாவது நினைச்சுப் பார்த்திருப்பியா..?" அவன் குற்றம் சாட்டினான்..

"பெண்டாட்டிங்கிற கடமையில இருக்கேன்னு சொன்னா அந்தக் கடமையில இருந்து விடுவிக்க நீங்க கிளம்பிருவீங்களா..?" ஆத்திரத்துடன் கேட்டாள்..

"சொல்லலாமாடி..? அப்படி நீ சொல்லலாமா..? அப்ப.. கடமைக்காகத்தான் நீ என் கூட குடும்பம் நடத்தினியா..? உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.." அவள் தோள் பிடித்து உலுக்கினான் வாசுதேவன்..

"என்னைச் சொல்கிறது இருக்கட்டும்... அங்கே என்னவாம்..? நீங்க என்கூட எதனால குடும்பம் நடத்தினீங்க..? பழி தீர்க்கத்தானே குடும்பம் நடத்தினீங்க.." அவளும் சீறினாள்..

"அறைஞ்சேன்னா பாரு.."

கோபத்துடன் அவளை இறுக்கிக் கொண்டான் வாசுதேவன்.. ஆத்திரத்தில் உடல் நடுங்கிய நிவேதிதாவின் நடுக்கத்தை அவனது அணைப்பு விரட்டியடித்தது..

"உன் மனசைக் கேளுடி.. நான் உன்கூட பழிவாங்கத் தான் குடும்பம் நடத்தினேனாங்கிறதை அது சொல்லும்.. முட்டாள்..! முதமுதல்லா நான் உன்னிப்பா பாத்தது உன் ஒருத்திய மட்டும்தாண்டி.. அருவியில நீ நனைஞ்ச.. என் மனசும் சேர்ந்து நனைஞ்சுச்சு.. அன்னைக்கு விருந்தவன் தாண்டி.. இன்னும் எழுந்திருக்கலை..."

"பொய்.. பகையாளிய பாத்தவர் விழுந்துட்டாராம்.. இந்தக் கதையை நான் நம்பனுமாம்... என்னை முட்டாள்ன்னே நினைச்சிட்டிங்கள்ல.."



"நீ முட்டாள் தாண்டி.. எவனாவது பகை முடிக்கக் கல்யாணம் பண்ணிக்குவானா..? அப்படிப் பண்ணிக்கிட்டவன் ஆறே மாசத்தில அவளுக்கு மசக்கை வாந்தி வர வைப்பானா..?" வாசுதேவன் கேட்ட நியாயத்தில்..

"ச்சிய்..." என்று அவன் மார்பில் குத்தினாள் நிவேதிதா..

அவள் கையைப் பிடித்து உதட்டில் பதித்து முத்தம் கொடுத்தவன் அதை தன் தலையில் வைத்து உறுதியான குரலில் கேட்டான்..

"சொல்லுடி.. என் மேல் ஆணையாச் சொல்லு.. உன் மனசில நானில்ல..?"

நிவேதிதாவுக்கு அழுகை வந்து விட்டது.. அவள் பொங்கி அழுதாள்..

"என் மனசில நீங்க மட்டும்தான இருக்கீங்க..? இது தெரியாம என் மாமா மகனிடம் போனில பேசினதுக்கு விதண்டாவாதமா அர்த்தம் எடுத்துக்கிட்டது நீங்கதானே என்னென்னவோ பேசினீங்க..?"

"நீ மட்டும் வர்ணாகூட என்னைச் சேர்த்து வைச்சுப் பேசலாமா..?"

"நானா பேசினேன்..? வாஸந்திதான சொன்னா..? அதைக் கேட்காம என்னால எப்படி இருக்க முடியும்..?"

"நீ கேட்ப.. சண்டையை வளர்ப்ப.. அதுதான் சாக்குன்னு பெங்களூரில வந்து உக்காந்துக்குவ.. இத்தனையும் பத்தாதுன்னு இங்கேயே இருக்கிறதுக்கு பிளான் போட்டு உன் காலேஜில மேலே படிக்க அப்ளை பண்ணுவ.. போதாக்குறைக்கு வேலை பார்த்துக்கிட்டே படிக்கப் போறன்னு மாயன்கிட்டச் சொல்லியிருக்க.. உன்னை என்ன செஞ்சா தேவலாம்டி.."

"உங்களை உசுப்பி விட மாயன் அண்ணாதான் லாயக்குன்னு தோணிச்சு.. அவர் சம்பளம் வாங்கினதும் ஊரைப் பாக்க அங்கேதான் வருவார்ன்னு எனக்குத் தெரியும்.. அதனால ஒன்னாந் தேதியன்னைக்கு யதேச்சையா அவரைப் பாத்ததைப் போலப் பார்த்தேன்.. கதை சொன்னேன்.. நான் நினைச்சதப் போல செய்தி அங்கே பறந்து வந்திருச்சு.." நிம்மதியுடன் சொன்னாள் நிவேதிதா..

"கெட்டிக்காரிதான்.. மாயன் அதை மட்டும்தான் சொல்லியிருப்பான்னா நீ நினைக்கிற..? அதுக்கு மேலேயும் சொல்ல மாட்டானா..?" மர்மச் சிரிப்புடன் கேட்டான் வாசுதேவன்...

"அதுக்கு மேல சொல்ல என்ன இருக்கு..?" புரியாமல் கேட்டாள் நிவேதிதா..

"எவ்வளவோ இருக்கு.. அம்மணி என்மேல ஆசைப் பட்டது இருக்கு.. அதுக்காக மாயன் வாயைக் கிளறி என்னப் பத்தி தூண்டித்துருவி விசாரிச்சது இருக்கு.. ஐயாவுக்கு கல்யாணமாகிருச்சான்னு கூட கேட்டிங்களாமே..."

வாசுதேவன் சொல்லச் சொல்ல விலகி நின்ற நிவேதிதாவின் கண்கள் மின்னின.. அவள் முகத்தில் பரபரப்பு வந்திருந்தது..

"மாயன் அண்ணனுக்கு என் காதலைப் பற்றித் தெரியுமா..?"

ஒரு வேகத்தில் கேட்டுவிட்டவள்.. நாக்கைக் கடித்துக் கொண்டாள்..

"நாக்கை எதுக்குக் கடிக்கிறவ..? உண்மையைச் சொல்லுச்சுன்னு அதுக்கு பனிஷ்மெண்ட் கொடுக்கறிகளோ.." வாசுதேவன் அவள் கன்னத்தில் செல்லமாக தட்டினான்..

"மாயன் அண்ணாவுக்கு எதுவும் தெரியாதுன்னு நினைச்சேன்.."

"அவனுக்கா தெரியாது..? அவன் அந்தக் காலத்திலேயே எங்க கிராமத்தில காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டவன்.. காதலில கரை கண்டவன்கிட்டப் போய் நீ ஒன்னும் தெரியாதவன்கிட்டப் பேசறதைப் போல என்னைப் பத்தியே பேசினேன்னா அவன் இனம் கண்டுக்க மாட்டானா..?" வாசுதேவன் சிரித்தான்..

"ஓ.. அதனாலதான் நீங்க என்னைத் தேடி வந்திருக்கீங்க.." நிவேதிதா விலகினாள்...

"இப்ப என்னடி..?" வாசுதேவன் அதட்டினான்..

"ஒருவேளை மாயன் அண்ணன் என் காதலை கண்டு பிடிக்காம இருந்திருந்தா..?"

"ஏண்டி என்னை விட்டுட்டு இங்கேயே டேரா போட நினைக்கிறேன்னு தேடிவந்து உதைச்சு உன்னைத் தூக்கிட்டுப் போயிருப்பேன்.." இலகுவாக அவன் சொன்னான்...

"அந்தக் கதையையும் நான் கட்டாமல் இருந்திருந்தா..?" அடுத்த கேள்வி அவளிடமிருந்து கிளம்பியது..

"அப்பன் வீட்டுக்கு அனுப்பி வைச்சா புருசனுக்கு ஒரு போன்கூட பண்ண மாட்டியான்னு உன்கூட சண்டைக்கு வருவேன்.. இங்கேயிருந்தா உன்திமிர் கூடிரும்ன்னு காரணம் கண்டு பிடிச்சு குண்டுக் கட்டாத் தூக்கிட்டுப் போயிருப்பேன்.. எது எப்படியிருந்தாலும்.. உன் காதல் எனக்குத் தெரிஞ்சிருந்தாலும்.. தெரியாம இருந்திருந்தாலும் என்னால உன்னை விட்டு இருந்திருக்க முடியாதுடி.. ஏன்னா நான் உன்னைக் காதலிக்கிறேண்டி.."

"கல்யாணம் பண்ணிக் குடும்பம் நடத்தினதாலே உண்டான காதலாயிருக்கும்.. யாரா இருந்தாலும் தாலி கட்டினவ மேலே ஒரு 'இது' வரத்தான செய்யும்..? அதுக்குப் பெயர் காதலா..?"

"பின்னே இல்லையா..? அந்த 'இது'தாண்டி நம்ம தாத்தா.. பாட்டி காலத்தில இருந்து வழிவழியா நம்ம இந்தியக் கல்யாணங்கள வாழ வைச்சுக்கிட்டு இருக்கு.. 'உனக்கு நான்.. எனக்கு நீ'ன்னு ஒத்துமையா குடும்பம் நடத்த வைச்சுக்கிட்டு இருக்குது... அறுபதாம் கல்யாணத்திலயும் பாட்டி...



தாத்தாவ காதலுடன் பாக்குதுன்னா அந்த 'இது' எவ்வளவு ஸ்ட்ராங்கானதுன்னு புரிஞ்சுக்க.. அந்த 'இது' காதலில்லையாம்.. இவ பேச வந்துட்டா.. போடி இவளே.. ஆனா அந்த 'இது' வர்றதுக்கு முன்னாலேயே.. உன் மேல அருவிக் கரையிலேயே எனக்கு ஒரு 'இது' வந்திருச்சுடி.. அதைக் கோபம்ன்னு நானா ஒரு அர்த்தம் கொடுத்துக்கிட்டேன்.."

"அதுதான உண்மை.."

"ஏண்டி.. நீ வேற.. எவளையும் பாக்காதவன் உன்னைப் பாத்துத் தொலைச்சேன்.. நீ சீண்டியதப் போலப் பேசினதாலதான் உன் முகத்தப் பாத்துத் தொலைச்சேன்.. இல்லேங்கல.. ஆனா பாத்த பின்னாடி உன்னை அடைஞ்சே ஆகனும்னு மனசுக்குள்ள வெறி வந்துருச்சு... நீ என்னடான்னா உழவன் மகனைப் பிடிக்காது.. கிராமமா.. 'ச்சி..' கூட்டுக்குடும்பமா 'உவ்வே..'ன்னு அள்ளி விட்டுக்கிட்டு இருந்த.."

"ம்ப்ச்.. எனக்கு விவசாயம் தெரிந்தவரைத்தான் மேரேஜ் பண்ணிக்கனும்னு மனதுக்குள்ளே ஒரு ஆசை.. கிராமம்ன்னா இஷ்டம்.. கூட்டுக்குடும்பம்ன்னா ரொம்பப் பிடிக்கும்.. அதை பிரண்ட்ஸ்கிட்டச் சொல்லித் தொலைச்சிட்டேனா.. அவங்க அதை வைச்சே.. என்னை ஓட்டு.. ஓட்டுன்னு ஓட்டுவாங்க.. அன்னைக்கும் அதைப் போல ஓட்டினாங்க.. நான் எப்பவும் போல அந்த விளையாட்டில கலந்துக்கிட்டேன்.. நீங்க என்னடான்னா தப்பாப் புரிஞ்சுக்கிட்டீங்க.." நிவேதிதா கண் கலங்கினாள்..

"விடேண்டி.. இனிமே நீ அழவே கூடாது.. நீ பேசினத் கேட்டவனுக்கு இவளுக்கு என்னைக் கட்டிக்கப் பிடிக்காதான்னு கோபம் வந்துருச்சு..."

"நான் எங்கே அப்படிச் சொன்னேன்..?"

"அடி இவளே.. நீ மாட்டேன்னு சொன்ன அத்தனையும் என்கிட்ட இருந்துச்சேடி.. நான் உழவன் மகன்.. கிராமத்துக்-காரன்.. கூட்டுக்குடும்பத்தில இருக்கிறவன்.. மறந்துட்டியா..?"

"ஆமாமில்ல.." விழி விரித்தாள் நிவேதிதா..

"இப்பச் சொல்லு.. அதனால வந்த கோபத்தில உன்னைத்திட்டம் போட்டு கட்டம் கட்டித் தூக்கினேன்.."

"என்னது..?"

"தாலிகட்டினதைச் சொன்னேன்டி..."

"அதானே பார்த்தேன்.."

"என்னவோ போடி.. உன் மனசில என்னப் பாக்காமலே மாயன் சொல்கிறதக் கேட்டுச் சொல்லாமலே பூப்பூத்திருக்கு.. எனக்கு உன்னைப் பாத்ததுமே இன்னதுன்னு விளங்காம மனசுக்குள்ள சொல்லாமலே பூப்பூத்துத் தொலைச்சிருக்கு.. இது தெரியாம நாம ரெண்டு பேரும் அடிச்சுக்கிட்டே

குடும்பம் நடத்தியிருக்கோம்.. சரி.. சரி.. கிளம்பு.. நேரமாகுது.. நாம அடுத்த பிளைட்டை பிடிச்சாகனும்..."

"எங்கே..?"

"நம்ம வீட்டுக்குத்தான்.. குழந்தை பிறக்கிறதுக்கு ஒருவாரத்துக்கு முன்னாலே இங்கே வரலாம்.. நானும் உன் கூடவே இருப்பேன்.. குழந்தை பிறந்த ஒரு மாசத்தில நாம நம்ம வீட்டுக்குப் பறந்திரனும்.. இனி உன்னை விட்டு என்னால இருக்க முடியாது.."

## 35

வாசுதேவன் சொன்னதைச் செய்தான் மனைவியுடன் வந்து நின்றவனைப் பார்த்த பார்வதியும்.. சாவித்திரியும் உமாபதியையும் கோபிநாதனையும் பார்த்துக் கொண்டார்கள்...

'அப்படியே உங்களைப் போல..'

அவர்களின் கண்களில் ரகசிய சிரிப்பிருந்தது..

நிவேதிதாவை சற்று நேரம்கூட விட்டுப் பிரியாமல் அவளை அடைகாத்தான் வாசுதேவன்.. பிரசவத்திற்கான நாள் நெருங்கியதில் பெங்களுருக்கு மனைவியை அழைத்துக் கொண்டு போனான்..

"இங்கே ஒரு எக்ஸ்போர்ட் கம்பெனியை ஆரம்பிக்-கலாம்ன்னு ஐடியா மாமா.. நீங்களும்.. நிரஞ்சனும் பார்ட்னர்ஸ்..."

வாசுதேவன் அங்கே வேலையை உருவாக்கிக் கொள்ள மருமகன் அவரை முதலாளியாக்கி விட்ட பெருமையில் மகிழ்ந்து போனார் சுந்தர்..

"என் மருமகன்னா மருமகன்தாண்டி.." மாளவிகாவிடம் மெச்சிப் போனார்..

நிவி அண்ட் நிரஞ்சன் எக்ஸ்போர்ட் கம்பெனி உருவானது..

"இதில அக்காவும் தம்பியும் பார்ட்னர்ஸ்.. மாமாவுக்கும்.. எனக்கும் ஷேர்கள் மட்டும் இருக்கு.." என்றான் வாசுதேவன்..

நிவேதிதாவுக்கு சந்தோசமாக இருந்தது.. எதையும் உருவாக்கிவிடும் கணவனின் திறமையில் முன்னிலும் அதிகமாக அவனைக் காதலிக்க ஆரம்பித்தாள் அவள்..

டாக்டர் குறித்த காலத்திற்கு இரண்டு நாள்கள் முன்னதாகவே வாசுதேவனின் மகன் பிறந்து விட்டான்..

"என் மகன் வேகக்காரண்டி.." பெருமைப் பட்டுப் போனான் வாசுதேவன்..

"அவனோட அப்பாவைப் போலவே..."



நிவேதிதாவின் ஆழ்ந்த வார்த்தைகளில் அவர்களின் விழிகள் சந்தித்துக் கொண்டன.. அதில் தெரிந்த காதலில் அவர்கள் இருவரும் அதில் கட்டுண்டு போனவர்களாக மௌனத்தில் ஆழ்ந்தார்கள்...

செய்தி கேட்டதும் வாசுதேவனின் குடும்பம் விமானத்தைப் பிடித்து அங்கே வந்து இறங்கி விட்டது.. கொள்ளுப் பேரனுக்காக உமாபதியும்.. பார்வதியும் வைர முகப்புடன் கூடிய தங்கச் சங்கிலியை கொண்டு வந்தார்கள்.. பேரனுக்காக கோபிநாதனும்.. சாவித்திரியும் வைரங்கள் பதித்த வளையல்களைக் கொண்டு வந்தார்கள்.. அண்ணன் மகனுக்காக என்று வாஸந்தி வைர மோதிரம் கொண்டு வந்தாள்..

வைரங்களாலே அலங்கரிக்கப் பட்ட பேரனைப் பார்த்த சுந்தர்

"என்னடி மாலு.." என்று திகைத்துப் போனார்..

வைரங்களுக்கு அவர் எங்கே போவார்..?

"இதுக்கு இணையா நம்மளாலே செய்ய முடியுமாடி..?" பயந்தார்...

வாசுதேவனின் குடும்பத்தில் செய்முறையைப் பற்றிய பேச்சையே பேசவில்லை.. விட்டால் அவர்கள் சுந்தருக்கும்.. மாளவிகாவுக்கும் சீர் செய்து விடுவார்கள் போலத் தோன்றியதில்..

"சும்மா இருங்க.." என்று கணவரை அடக்கி வைத்தாள் மாளவிகா..

"இல்லேடி மாளவிகா.. கையில இருந்த அத்தனை சேவிங்ஸையும் போட்டுத்தான் நிவேதிதாவுக்கு சீர் செய்தேன்.. அவங்க வைர அட்டிகையைப் போட்டுட்டாங்-களேன்னு வைர வளையலை வாங்கிக் கொடுத்தேன்.. இப்பவும் வைரங்களா வேணும்ன்னா எங்கே போவேன்..?"

"அவங்க உங்ககிட்டக் கேட்டாங்களா..?"

"கேட்டாத்தானா..? அவங்க போடறப்ப.: சீர் செய்ய வேண்டிய நாம கையைக் கட்டிக்கிட்டு சும்மா இருக்கலாமா..?"

"சும்மா இருக்காம என்ன செய்யப் போறிங்க..? ஆடப் போறிங்களா..?"

"என்னடி இப்படிப் பேசற..?"

"பெண்ணைப் பெத்தவ.. நானு.. எனக்கும் பொறுப்பிருக்கு.. உங்க மகளுக்கு நீங்க சீர் செஞ்சீங்க.. நம்ம பேரனுக்கு நான் சீர் செய்யறேன்.."

மாளவிகா அவளின் சேமிப்பை எடுத்தாள்.. பேரனுக்கு வைர முகப்பு வைத்த தங்கச் சங்கிலியைப் போட்டாள்.. நிரக்க அவள் செய்த சீர்வரிசையில் சாவித்திரியின் மனம் நிறைந்தது...

வாஸந்தியிடம் ஒரு மாறுதல் தெரிய ஆரம்பித்தது..

அவள் அடிக்கடி செல்போனுடன் தனிமையில் உட்கார்ந்தாள்.. நிவேதிதாவின் கூர்மையான பார்வையில் அது தென்பட்டு விட்டது... அவள் நாத்தனாரைக் கண்காணித்தாள்.. ஒருநாள் கையும் போனுமாக அவள் பிடிபட்டு விட.. மறுமுனையில் 'ஹலோ.. ஹலோ..' என்று அழைத்துக் கொண்டிருந்தது யாரென்று கேட்டால்.. அது நிரஞ்சன்..!

"அடப்பாவி..!" என்றாள் நிவேதிதா..

வாசுதேவனிடம் விவரம் போனதில் இதில் நிரஞ்சனை 'அடப்பாவி' என்று சொல்ல என்ன இருக்கிறது என்று கேட்டான் அவன்..

"பாருடி.. நிரஞ்சன் படிப்பை முடிச்சாச்சு... எக்ஸ்போர்ட் கம்பெனிக்கு எம்.டியாவும் ஆகியாச்சு.. பெங்களூரில் சொந்த வீடு... வேலை பார்க்கிற மாமனார்.. மாமியார்.. தொல்லை கொடுக்காம புருசன்கூட செட்டிலாகிட்ட நாத்தனார்ன்னு என் தங்கைக்கு எவ்வளவு அருமையான புகுந்தவீடு கிடைச்சிருக்கு..? அதைக் கெடுக்கப் பார்க்கறியா..?"

செல்லமாக மிரட்டிய கணவனை காதலுடன் பார்த்தாள் நிவேதிதா.. இவன்தான் எவ்வளவு இனியவன் என்று அவள் மனம் கனிந்தது.. வாசுதேவன் சொன்னதையே உமாபதியும் சொல்ல.. கோபிநாதன் அதை வழி மொழிந்தார்.. எப்போதும் அந்த வீட்டு ஆண்குலத்திற்கு எதிராகவே ஓட்டுப் போடும் அந்த வீட்டின் பெண்குலம் இதற்கு மட்டும் சமர்த்தாக ஆண்குலத்திற்கு ஓட்டுப் போட்டது..

"இதுக கெட்டிக்காரங்கடா மகனே.." ஆற்றாற்றுப் போனார் உமாபதி..

பெங்களூரில் நிரஞ்சனுக்கும்.. வாஸந்திக்கும் திருமணம் நடந்து முடிந்தது.

இரு குடும்பத்தின் பந்தத்தையும் இறுக்கமாக்கி விட்ட வாசுதேவனைப் பார்த்தபடி மணமக்களுக்கு அட்சதை போட்டு ஆசிர்வாதம் பண்ணிய நிவேதிதாவின் மனதில் சொல்லாமலே பூப்பூத்தது...

- முற்றும் -

Owned and Published by T. Raghavan, Published at 68/37, Sri Ram Pet, CIT Nagar, Nandhanam, Chennai - 600 035. Cell : 95669 42486. Printed by E.Sudeesh Kumar at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kitabathkhan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. Editor incharge : T. Raghavan. E-mail : bchandar24@yahoo.com